# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 476 பிலவ வருடம், மாசி மாதம் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை (11.03.2022) ஹிஜ்ரி - 1444, ஷஃபான் - 07, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## மருந்துகளின் விலை 18 வீதத்தால் அதிகரிக்கும்



» 02 பக்கம்

## உக்ரைனில் வைத்தியசாலைகள் மீது ரஷ்யா கடும் தாக்குதல்



» 14,15 பக்கம்

# கூட்டமைப்பை சந்திக்கிறார் கோட்டா





### 15ஆம் திகதி பேச்சுக்கு வருமாறு அழைப்பு

» 02 பக்கம்

## சிங்களவர்களே இல்லாத பிரதேசத்தில் சிலைவைக்க முயற்சிப்பது அபத்தம்



### சபையில் ஹக்கீம் கடும் கண்டனம்

நா. தினுஷா

அம்பாறை, பாலமுனை முள்ளிமலையில் பிக்குகள் சிலர் சிலையொன்றை நிறுவ முயற்சிசெய்திருக்கிறார்கள். இதனால் அப்பகுதி மக்கள் பதற்றமடைந்துள்ளார்கள். அங்கு தொல்லியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அவை தொடர்பான ஆதாரங்கள் காணப்பட்டால், » 02 பக்கம்

## தோட்டத் தொழிலாளர்களை பரிதவிக்கவிட்டு சிலோன் ரீ பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம்



### அரச வர்த்தமானிக்கெதிராக தனியார் கம்பனிகள் வழக்கு தொடர்ந்தமை நியாயமற்றதென வடிவேல் சுரேஸ் எம்.பி. காரசாரப் பேச்சு

ம.சுசிகலா

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை பரிதவிக்க விட்டுவிட்டு இன்று இங்கு சிலோன் ரீயைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். தேயிலை ஏற்றுமதியைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் வெட்கித் தலைகுனிய வேண்டும் என... » 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



'உலக நாடுகளிடம் கடன் வாங்கோணும் அல்லோ.. அப்ப சம்பந்தனோட பேசித்தானே ஆகோணும்...'

## உக்ரைன் ஜனாதிபதியே நாடாளுமன்றில் பேசுகிறார் நிதி அமைச்சரால் சபைக்கு வரமுடியாதது ஏன்?

### பெசிலுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் சபையில் சரமாரிக் கேள்வி

நா.தினுஷா

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளபோதிலும் நாட்டின்நிதி நிலைமை குறித்து நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ சபையில் எந்தவித அறிவிப்புகளையும் வெளியிடுவதில்லை எனவும் மூன்று மாதங்களாக அவர் சபைக்கு சமுகமளிக்கவில்லை எனவும் எதிர்க்கட்சியினர் முன்வைத்த குற்றச்சாட்டுகளால் நாடாளுமன்றத்தில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.

நாடாளுமன்றம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமானது. »02பக்கம்

## எரிவாயு சிலிண்டர்கள் கையிருப்பில் இல்லை

### டொலர் இன்றி திண்டாடுகிறது லிட்ரோ நிறுவனம்

நமது விசேட செய்தியாளர்

நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், கையிருப்பு பூச்சியமடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனத் தகவல்கள் தெரிவித்தன. கொழும்புத் துறைமுகத்தில் எரிவாயு சிலிண்டர்கள் அடங்கிய இரு கப்பல்கள் இருக்கின்றபோதிலும், அவற்றை பெற்றுக்கொள்வதில் அந்நிறுவனம்... » 02 பக்கம்

## டொலரின் விலை 260 ரூபா

நமது நிருபர்

நாட்டில் ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி 260 ஆக அதிகரித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 230 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், இவ்வாறானதொரு அதிகரிப்பு இடம் பெற்றுள்ளது.

நாட்டிலுள்ள சில தனியார் வங்கிகளில் டொலரின் விற்பனை பெறுமதி 260 என நேற்று அறிவிக்கப் பட்டிருந்தது.

» 02 பக்கம்

## கச்சதீவு திருவிழாவுக்கு 100 இந்தியர்கள் வருகை

### இருநாட்டு மீனவர்கள் சந்திக்கவும் ஏற்பாடு

கச்சதீவிலிருந்து யோ.தர்மராஜ்

கச்சதீவில் இன்றும் நாளையும் நடைபெறும் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில், தமிழகத்திலிருந்து 100 பக்தர்கள் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். » 02 பக்கம்

## உணவுக்காக நாடாளுமன்றில் சண்டையா? செய்தி குறித்து சபையில் எழுந்தது சர்ச்சை

நா.தினுஷா

நாடாளுமன்றத்தில் திரவப்பால் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தவறான செய்திகள் வெளியிடப் பட்டுள்ளதாகவும் அது குறித்து நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார். » 02 பக்கம்



எரிபொருள் பற்றாக்குறையை கண்டித்து முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் சபை அமர்வுக்கு நேற்று மாட்டு வண்டிகளில் சென்றனர்.
(படப்பிடிப்பு: முல்லைத்தீவு செய்தியாளர்)

## உஷ்



விமல் வீரவங்ச அரசுக்கு, பெசிலுக்கு எதிராக போர்க்கொடி தூக்கினாரல்லவா? இப்போது அவரது அமைச்சு காலத்தில் நடந்த ஊழல்கள் குறித்து விசாரணை நடத்த அரசுக்குள் ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவாம்.

விமலுக்கு நெருக்கமான அரச அதிகாரியொருவர் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், விமலின் மனைவியின் போலி பாஸ்போர்ட் வழக்கின் தீர்ப்பு இன்று நீதிமன்றத்தில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS

Anytime Data 1.5GB

மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)

செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்

*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே | நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09

Dialog எதிர்காலம் இன்றே.

Lk Newspapers Viber Community

# வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்து வர்த்தகம் ஆரம்பிக்க விசேட பிரிவு ஆரம்பம்

## நுவரெலியாவில் அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு

**(தலவாக்கலை நிருபர்)**

இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்துவந்து அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்து இலங்கையில் வர்த்தகம் ஆரம்பிப்பதற்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கும் விசேட பிரிவு ஒன்றை எனது கைத்தொழில் அமைச்சில் ஆரம்பித்து நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்துள்ளேன் - என கைத்தொழில் அமைச்சரும் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி இணைப்புக்குழுத் தலைவருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலக அதிசய மண்டபத்தில் நேற்று (10) வியாழக்கிழமை நடைபெற்ற சர்வதேச மகளிர் தின வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நுவரெலியா மகளிர் அமைப்பின் தலைவியும் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான விமாலி கருணாரட்ன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நுவரெலியா மாநகர சபை எதிர்கட்சித் தலைவரும் முன்னாள் மாநகர முதல்வருமான மஹிந்த குமார, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.பி.கே. போதிமான உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அங்கு அமைச்சர் திஸாநாயக்க தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று மின்சாரம் விநியோகம் மூலம் வருடம் ஒன்றிற்கு 91 ஆயிரம் கோடி ரூபா அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்ட போதிலும் வருடத்திற்கு ஊழியர்களுக்கு 3 போனஸ்கள் வழங்கப்படுகின்றன.



ஒரு மாதத்திற்கு மாத்திரம் 550 இலட்சம் ரூபா அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகின்றது. அதேபோல் ஒரு லீற்றர் டீசலுக்கு 88 ரூபா மேலதிக நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்றது. இதற்கு யார் பதில் கூறுவது? இந்த டீசல் பிரச்சினையை பாவனையாளர்களிடம் கூறவேண்டும். இந்த நட்டத்தை நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும். எனவே, டீசல் மற்றும் பெற்றோலை கவனமாக பாவிக்க வேண்டும் என்பதை புரிந்து நடந்துகொள்ளவேண்டும்.

இன்று ஒரு லீற்றர் டீசல் 143 ரூபாவாக விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்விற்கு ரஷ்யா - உக்ரைன் யுத்தம்தான் காரணம். இந்த யுத்தம் காரணமாகவே எரிபொருள், சமையல் எரிவாயு விலை அதிகரித்துள்ளது. எங்களால் விலை உயர்வை தடுக்க முடியாது - என்றார்.

# காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் கால எல்லை ஒரு வருடத்துக்கு நீடிப்பு

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது மற்றும் ஒரு வருட காலத்திற்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவது தொடர்பான அறிவித்தலொன்றை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, 2022 ஏப்ரல் மாதம் 01ஆம் திகதிமுதல் 2022 ஜூன் மாதம் 30ஆம் திகதிவரை காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2022 ஜூலை மாதம் 01ஆம் திகதிமுதல் 2022 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதிவரை காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக, தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு பாதுகாப்பான முறைகள் கொண்ட கணினி மென்பொருள் ஒன்றை பொலிஸ் திணைக்களத்திற்கு அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தல், தற்போது வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு ஒரு வருட காலம் செல்லுபடியாகும் புதிய தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை உரிமையாளருக்கு தபால் மூலம் அனுப்பிவைத்தல், நிலைமை சீரானதன் பின்னர் உரிய அட்டை அச்சிடப்பட்டு விண்ணப்பதாரரின் வீட்டிற்கே நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரத்தை அனுப்பிவைத்தல் ஆகிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளதாக போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

### உக்ரைன் ஜனாதிபதியே ..

ஒழுங்குப்பத்திரத்தின்படி வேலையாட்கள் நட்டஈடு திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான பிரேரணையை தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சமர்ப்பிப்பதற்கு முன்பாக எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பினார்.

நாட்டின் நிதி முகாமைத்துவம் நாடாளுமன்றத்திலேயே தங்கியிருக்கிறது. நிதி அதிகாரமும் நாடாளுமன்றத்திடமே இருக்கிறது. நிதி அமைச்சர், கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதியே நாடாளுமன்றத்துக்கு வருகை தந்திருந்தார். இன்று (நேற்று) மார்ச் 10ஆம் திகதியாகும்.

மூன்று மாதங்களாக அவர் நாடாளுமன்றத்துக்கு வருகைதரவில்லை. நாடு இன்று பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அனைத்துத் துறைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன. எனினும், இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் மூன்று மாதங்களாக அவர் தனது நிலைப்பாட்டை அறியத்தரவில்லை.

உடனடியாக நாடாளுமன்றத்துக்கு வந்து நாட்டின் நிதி நிலைமையை விவரிக்குமாறு நிதி அமைச்சருக்கு சபாநாயகராகிய நீங்கள் பணிப்புரை வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது அதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் நாள்தோறும் ஏதோவொரு பிரச்சினையை இங்கே கொண்டுவருகிறார். ஊடகங்களில் இவரது செய்தி வெளியாக வேண்டுமென நினைக்கிறார்.

நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்த பின்னர் அது தொடர்பான விவாதங்கள் நடைபெறுகின்ற வேளைகளில் அவ்வப்போது நாடாளுமன்றத்துக்கு வருகைதந்தார். லக்ஷ்மன் கிரியெல்லவின் கணக்கு பிழையானது.

நிதி அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு வருகைதரவில்லையென்ற கருத்தை லக்ஷ்மன் கிரியெல்ல மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும். நாட்டுக்கு எதிரான போலியான பிரசாரங்களை மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் கொண்டுசெல்ல முயற்சிக்கிறார்கள் என பதிலளித்தார்.

அதன்பின்னர் மீண்டும் எழுந்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., நான் ஹன்சார்ட்டை பார்த்த பின்னரே இங்கு பேசுகிறேன். நிதி அமைச்சர் கடந்த டிசம்பர் 10ஆம் திகதியே நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருக்கிறார்.

நாடு எதிர்நோக்கியுள்ள மோசமான நிலைமை குறித்து அவர் ஒரு வார்த்தையேனும் நாடாளுமன்றத்தில் பேசவில்லை. அவர் ஒவ்வொரு நாட்டுக்கும் சென்று பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார். யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேரத்தில் ரஷ்யாவிடம் 300 மில்லியன் டொலரை கேட்டிருக்கிறார். வெட்கமில்லையா? - என்றார்.

இதேவேளை, அங்கு தமது கருத்தை வெளியிட்ட நளீன் பண்டார எம்.பி. குறிப்பிடுகையில், உக்ரைனில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் கூட அந்நாட்டு ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார். நமது நிதி அமைச்சர் இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை. அவரை இங்கே வரச்சொல்லுங்கள் - என்றார்.

அதற்கு மறுப்புத் தெரிவித்த ஆளுங்கட்சி எம்.பியான ஜயந்த கெட்டகொட, நிதி அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு வருகிறார். இங்கே எழுப்பப்படும் கேள்விகளுக்கு அவர் பதிலளித்துள்ளார். எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் நித்திரையில் இருக்கிறார்போல - என்றார்.

இதன்போது இருதரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இந்நிலையில், அங்கு சபாநாயகர் தனது நிலைப்பாட்டை அறிவித்தார். "சபாநாயகர் என்ற வகையில், உறுப்பினர்களை சபைக்கு வருமாறு என்னால் பணிப்புரை வழங்க முடியாது. மூன்றுமாத காலம் சபைக்கு சமூகம் தராவிட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும். அறிவுப்புகளை வழங்க வேண்டும் என அமைச்சர்களை கட்டாயப்படுத்த அக்கிராசனத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரமும் கிடையாது - என சபாநாயகர் விளக்கமளித்தார்.

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இருக்கிறது. அவ்வாறென்றால் அமைச்சர்களுக்கு சபாநாயகராகிய நீங்கள் உத்தரவிட வேண்டுமல்லவா? அவ்வாறில்லாவிட்டால் நீங்கள் எதற்காக இங்கே இருக்கிறீர்கள்? என லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. மீண்டும் கேள்வி எழுப்பினார்.

அமைச்சர்களுக்கு பணிப்புரை வழங்க எனக்கு எந்த அதிகாரமும் கிடையாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அதற்குப் பதில் வழங்கினார்.

### டொலரின் விலை...

டொலரின் பெறுமதி தளம்பல் நிலையாக்கப்பட்டதன் விளைவாகவே இவ்வாறானதொரு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### கூட்டமைப்பை...

**நமது விசேட செய்தியாளர்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இரு தரப்பினருக்குமிடையே பலகாலமாக சந்திப்பு தொடர்பில் பேசப்பட்டுவந்த நிலையில் ஜனாதிபதியினால் சந்திப்புக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச உயர்பீடம் பேச்சுவார்த்தை நடத்தும் என கடந்த காலங்களில் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் ஜனாதிபதித் தரப்பால் அதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது. புதிய அரசியலமைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் முன்வைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுகள், காணாமல்போனோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

# பெந்தோட்டை கடலில் மூழ்கி ரஷ்யப் பிரஜை உயிரிழப்பு

பெந்தோட்டை பரடைஸ் தீவிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் இரண்டு வார விடுமுறைக்காக ரஷ்யாவிலிருந்து இலங்கை திரும்பிய ரஷ்யப் பிரஜை ஒருவர் ஹோட்டலுக்கு முன்னால் உள்ள கடலில் நீராடச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பெந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் வான்கோவ் அயுர்ல் (வயது 46) என்ற ரஷ்யப் பிரஜை என்பது தெரியவந்துள்ளது.

பெந்தோட்டையிலுள்ள ஹோட்டல் ஒன்றில் மனைவியுடன் தங்கியிருந்த வெளிநாட்டவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மீதான பிரேத பரிசோதனை நேற்று (10) நடைபெற்றதுடன் சடலம் அளுத்கம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# வயதான மூதாட்டி காலமானார்

இலங்கையின் மிக வயதான மூதாட்டி தனது 116ஆவது வயதில் நேற்று (10) காலமாகியுள்ளார். மாத்தறையில் வசித்த கங்காணம் கமகே டிங்கிஹாமி என்ற வயோதிபப் பெண்மணியே உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



1906 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதி பிறந்த இவர், அண்மைக்காலம் வரை சுகதேகியாக வாழ்ந்துவந்ததாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

### சிங்களவர்களே இல்லாத..

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தால் அந்த விடயங்கள் தொடர்பில் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும்.

ஆகக் குறைந்தது பிரதேச செயலாளருடனாவது பேசியிருக்க வேண்டும்.

அவ்வாறில்லாமல் திடீரென வந்த குழுவினர் அங்கு நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க ஆயத்தப்படுத்தினர். அவ்விடத்தில் நிர்மாணப் பணியொன்றை அல்லது சிலையொன்றை நிறுவ முயற்சித்தார்கள்.

அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக திணைக்களத்தினால் எந்தவித அறிவுறுத்தல்களும் வழங்கப்படாத நிலையில், இவ்வாறான முயற்சிகள் எவ்வாறு இடம்பெறுகின்றன. கண்ணுக்கெட்டிய பெருந்தூரத்தில் ஒரு சிங்களக் குடும்பமேனும் வசிக்காத நிலையில் இவ்வாறான நிர்மாணப் பணிகளை முன்னெடுக்க முயற்சிக்கின்றமை குறித்து நாம் கவலையடைகிறோம்.

இது தொடர்பில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்க அதிபருக்கும் நாம் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். தொல்லியல் தொடர்பில் ஆராய்ச்சிசெய்யும் நிறுவனம் வேறு நபர்களுக்கு தமது கடமைகளை பொறுப்பளிக்க முடியாது.

கிழக்குக்கு மாத்திரம் தொல்லியல் தொடர்பான செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. கிழக்கில் மாத்திரமா தொல்லியல் பொருட்கள் இருக்கின்றன? ஏன் வெளி இடங்களில் இல்லையா?

ஓர் இனத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய நபர்களை உள்ளடக்கி கிழக்கில் மாத்திரம் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த செயலணியில் வேறு இனத்தவர்கள் உள்வாங்கப்படவில்லை. ஒரு மதத்தை, ஓர் இனத்தை மாத்திரம் பாதுகாக்கும் வகையில் செயற்படும் அரசாங்கத்தால் எவ்வாறு நல்லிணக்கம் குறித்துப் பேச முடியும்? - என்றார்.

### கச்சதீவு திருவிழாவுக்கு...

தமிழகத்திலிருந்து 100 பேர் கச்சதீவு திருவிழாவுக்கு வருகைதருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இராமேஸ்வரம் வேர்க்கோடு பங்குத்தந்தை தேவசகாயம் தெரிவித்துள்ளார். கொரோனா தொற்றுப்பரவலை கருத்திற்கொண்டு இந்தியர்களுக்கு திருவிழாவில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்படுவதாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும் நூறு பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இலங்கை- இந்திய மீனவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை இன்று இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மருந்துகளின் விலை...

**நமது விசேட செய்தியாளர்**

நாட்டில் மருந்துவகைகளின் விலையை 18 வீதத்தால் அதிகரிக்க இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனம் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளின் விலைகள் 85 வீதத்தால் அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டி இந்த விலை உயர்வை அந்தச் சம்மேளனம் கோரியுள்ளது. இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி நேற்றுமுன்தினம் 230 ரூபாவாக அதிகரித்துள்ளமை தொடர்பில் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதன் காரணமாக மருந்தகங்களுக்கு மருந்து விநியோகம் செய்யும் நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இறக்குமதியாளர்கள் சங்கம் தீர்மானித்திருந்தது. செயற்கையாக மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுமானால் மருந்துகளின் விலைகள் அதிகரிக்கும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்திருந்ததுடன், நியாயமான விலையில் மருந்துகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே மருந்துவகைகளின் விலைகளை அதிகரிக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சந்தையில் மருந்துவகைகளின் விலைகள் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

### எரிவாயு சிலிண்டர்கள்...

சிரமங்களை எதிர்நோக்கியுள்ளது. ஏற்கனவே, மூன்று கப்பல்கள் காணப்பட்டு அதில் ஒன்று விடுவிக்கப்பட்டது. அதிலுள்ள மூவாயிரத்து 500 மெட்ரிக் தொன் சிலிண்டர்கள் கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டன. அதனடிப்படையில் நேற்றுமுன்தினம் மாத்திரம் சுமார் 80 ஆயிரம் சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் நாளாந்தம் ஆயிரத்து 100 மெட்ரிக் தொன் எரிவாயு சிலிண்டர்கள் அவசியப்படுகின்ற நிலையில் ஏனையவற்றை பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

### உணவுக்காக நாடாளுமன்றில்..

நாடாமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

நாடாளுமன்ற உணவகத்தில் திரவப்பால் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டார சிறப்புரிமை கேள்வியொன்றை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் சிறப்புரிமை கேள்வியொன்றை ஜயந்த கெட்டகொட எம்.பி. எழுத்துமூலமாக முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

ஊடகங்களில் இவ்வாறான செய்தி வெளியாவதால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவமானம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் சுட்டிக்காட்டினர்.

மக்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்ள வரிசைகளில் காத்திருக்கும்போது இவ்வாறான செய்திகள் வெளியாகுமாக இருந்தால், சபாநாயகரின் உத்தரவின்பேரில் உணவகத்தை மூடிவிடுவதே சிறந்தது என நளீன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

"உணவுக்காக நாடாளுமன்றத்துக்கு வருகைதருவது போன்ற தோரணையை குறித்த செய்தி உருவாக்கியுள்ளது. நாடாளுமன்ற உணவகத்துக்குப் பொறுப்பான அதிகாரியையும் அங்கு கடமையாற்றுவோரையும் அழைத்து நான் இது குறித்து விசாரித்தேன். அவ்வாறானதொரு பற்றாக்குறை இல்லையென அவர்கள் தெரிவித்தார்கள். பாலுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதற்காக உறுப்பினர்கள் முண்டியடிப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அதனை நாடாளுமன்றத்தில் உள்ள அதிகாரியொருவரே உறுதிப்படுத்தியுள்ளார். இது குறித்து விசாரணைகள் அவசியம் என கெட்டகொட எம்.பி. சபாநாயகரை வலியுறுத்தினார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர், இந்த செய்தி தொடர்பில் நான் கவலையடைகிறேன். இவ்வாறான தவறான செய்திகள் கடந்த காலங்களில் அவர்கள் நினைத்த மாத்திரத்தில் பிரசுரமாகி நாடாளுமன்றத்தையும் அதன் உறுப்பினர்களையும் சங்கடத்துக்குள்ளாக்கிய சம்பவங்களும் உள்ளன. வியாபாரத்துக்காக அல்லது ஜனநாயக உரிமையை தவறான முறையில் உபயோகிப்பதற்காக, செய்திகளை பிரசுரிப்பதற்கான சுதந்திரம் தவறாக பயன்படுத்தப்படுகின்றமை குறித்து நாம் உண்மையில் கவலையடைகிறாம்.

இது தொடர்பில் நாம் அறிக்கையொன்றை பெற்று அதனை சிறப்புரிமை குழுவிடம் சமர்ப்பித்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்னவென்பது குறித்து நான் அறியத்தருகிறேன் - என்றார்.

### தோட்டத் தொழிலாளர்களை...

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் சபையில் நேற்று (10) தெரிவித்தார்.

அரச வர்த்தமானிக்கெதிராக தனியார் கம்பனிகள் வழக்குத் தொடர்ந்துள்ளமையானது உலகில் வேறெங்கும் இடம்பெறாததொன்று எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வேலையாட்கள் நட்டஈட்டு திருத்தச்சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான பிரேரணை தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பான விவாதத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

காலத்துக்கு தேவையான இந்தத் திருத்தத்தை கொண்டு வந்தமைக்காக தொழில் அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதோடு, மலையக மக்கள் சார்பாக பெருமகிழ்ச்சியடைகிறேன். இது இவ்வாறாக இருந்தபோதும், மலையக தோட்டத் தொழிலாளர்கள் இன்று முகங்கொடுக்கின்ற தொழிற் பிரச்சினை பாரியதொரு மனித உரிமை மீறலாகும்.

தொழில் அமைச்சரும், தொழில் அமைச்சும், தொழில் ஆணையாளர், உத்தியோகத்தர்கள் என அவர்கள் வேலைசெய்வோருக்காக செய்கின்ற சேவைகள் அனைத்தும் மலையக பெருந்தோட்டத்தின் நிர்வாக முகாமைத்துவத்தின் காரணத்தால் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆகவே, இந்த மலையக பெருந்தோட்டக் கம்பனிகளுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள்? உலகில் எந்த நாட்டில் தனியார் கம்பனியொன்று தொழில் அமைச்சருக்கும் தொழில் ஆணையாளருக்கும் எதிராக வழக்கு தொடர்ந்திருக்கிறது? சம்பள நிர்ணய சபையில் பெருந்தோட்டத் தொழிலாளருக்கு ஆயிரம் ரூபா சம்பளம் நிர்ணயத்திற்கு பிறகு பெருந்தோட்டக் கம்பனிகள் தொழில் அமைச்சருக்கும் தொழில் ஆணையாளருக்கும் எதிராக வழக்கு தொடருமாக இருந்தால் அந்த பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உரிமையாளர்கள் யார்? அவர்களுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள்? அதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த மக்களும் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளார்கள்.

2021ஆம் ஆண்டு மார்ச் 05ஆம் திகதிய வர்த்தமானியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்கப்படுமென சம்பள நிர்ணய சபையில் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. இந்த வர்த்தமானி அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனியார் கம்பனிகள் வழக்கு தொடர்ந்துள்ளன. உலகில் வேறு எங்கு இதுபோல் நடந்துள்ளது?

ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரித்து ஒரு வருடமே கடந்துள்ள நிலையில், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மூன்று முறை மூன்று மடங்காக அதிகரித்துள்ளன. அன்று ஒருவருடைய வாழ்க்கைச் செலவு 2500 - 3000 வரையில் அதிகரித்துள்ளது. ஆனால், ஆயிரம் ரூபாவுக்கு இன்னும் வழக்கு. ஆகவே, நீதி அமைச்சிடம் கேட்கிறோம். நீதி எங்கே? இது மக்களின் வாழ்க்கைப் பிரச்சினை. மனித உரிமை மீறப்பட்டுள்ளது. பெருந்தோட்டத் தொழிலாளர்களை தோட்டக் கம்பனிகள் வஞ்சிக்கின்றன. தொழில் சட்டத்தை மீறி நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இது தொடர்பாக நீதி அமைச்சர் நீதிமன்றுக்கு அறிவிக்க வேண்டும். மலையக மக்களின் உரிமைகள் அனைத்தும் மீறப்படுகின்றன. அவர்களுடைய காணி உரிமை மீறப்பட்டுள்ளது. அவர்களுடைய நலன்புரி வேலைத்திட்டங்கள் அனைத்தும் இல்லாமல் இந்த வழக்கை காரணங்காட்டி மக்களை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு கம்பனிகளின் இந்த வேலைத் திட்டத்திற்கு வக்காலத்து வாங்குவது யார்? இந்தக் கம்பனிகளிடமிருந்து தொழிற்சங்கம் பணம் வாங்குகிறதா அல்லது அரசியல்வாதிகள் பணம் வாங்குகின்றனரா? யார் இந்தக் கம்பனிகளுக்குப் பின்னால் இருக்கிறார்கள்? இதனுடைய பணிப்பாளர்கள் யார்? இவர்களுக்கு இவ்வாறான அதிகாரத்தை கொடுத்து மலையக மக்களை வஞ்சிப்பதன் நோக்கம் என்ன என்பதை தெளிவுபடுத்தவேண்டும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் இந்த சட்ட அமுலாக்கத்தில் ஒரு நவீன பொறிமுறையை அமுல்படுத்த வேண்டும். அதுபோன்று பெருந்தோட்ட முகாமைத்துவம், அதன் செயற்பாடுகள், தொழிற்சட்டத்தை அமுலாக்கல், மலையக மக்களின் தொழில் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டும். இந்த பெருந்தோட்டக் கம்பனிகளின் மனித உரிமைகள் மீறலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஒரே நாடு ஒரே சட்டம் என்றால் ஏன் மலையக மக்களுக்கு வேறு ஒரு சட்டம்? மலையக தோட்டத் தொழிலாளர்களை பரிதவிக்க விட்டுவிட்டு இன்று இங்கு சிலோன் ரீயைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். தேயிலை ஏற்றுமதியைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் வெட்கித் தலைகுனிய வேண்டும் - என்றார்.

LK Newspapers Viber Community

# இன்றைய ராசி பலன்

**11.03.2022 வெள்ளிக்கிழமை மாசி 27**

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: மிருகசீரிடம்**
பிற்பகல் 2.36 வரை
**திருவாதிரை**
பி.ப 2.36 - 12.03.2022
மாலை 5.32 வரை
**யோகம்: ஆயுஷ்மான்**
அ.கா 2.14 - 12.03.2022
அதிகாலை 3.11 வரை

**திதி: பூர்வ பட்ச நவமி**
அ.கா 5.34 - 12.03.2022
காலை 8.07 வரை
**முற்கரணம்: பாலவம்**
அ.கா 5.34 - மாலை 6.52
**பிற்கரணம்: கௌலவம்**
மாலை 6.52 - 12.03.2022
காலை 8.07 வரை

**சுப நேரங்கள்**
காலை 6.19 - 7.49
மாலை 5.22 - 6.22
**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
காலை 10.50 - பி.ப 12.21

**குளிகை காலம்**
காலை 7.50 - 9.20
**எமகண்ட காலம்**
மாலை 3.21 - 4.52
**துர் முகூர்த்தம்**
காலை 8.44 - 9.32
பிற்பகல் 12.45 - 1.33

**லோகநாயகி ஸஹஸ்ர சிர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** வழக்கு விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். பணிகளில் உற்சாகத்தால் வேகம் அதிகரிக்கலாம். புதிய திட்ட நடைமுறை உருவாகலாம். வணிகத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம்.

**ரிஷபம்:** உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம். தேவையற்ற வாக்குவாத தருணங்களை உருவாக்காமல் இழப்புகளை தவிர்க்கலாம். வேலைகளை அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செய்வது நல்லது.

**மிதுனம்:** ஆடம்பர செலவுகள் ஏற்படலாம். காதலில் இன்று மகிழ்வான மனநிலை கிடைக்கலாம். தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பணிகளில் இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். வாழ்க்கைத்துணையுடன் உறவு வலுப்படும். நண்பர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம்:** கட்டுமானப் பணிகளில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். புதிய தொழில் அல்லது வேலை தொடங்குவதற்கு இன்றைய நாள் சாதகமானதாக இல்லை. கூட்டுத்தொழில் முயற்சிகளை இன்று தவிர்ப்பது நன்மை. பணிகள் சில காரணங்களால் பாதிப்படையலாம். இறைவணக்கம் தேவை.

**சிம்மம்:** தகவல் தொழில்நுட்ப தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்ல நாளாக அமையலாம். நண்பர்களுடன் மகிழ்வான சந்திப்பு உண்டாகலாம். தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கத் தொடங்கும். பிள்ளைகளின் சில பிரச்சினைகள் நீங்கலாம். வாழ்க்கைத்துணையின் ஆதரவும் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம். தொழிலில் நல்ல பலன்களும், பணியிடங்களில் பிரச்சினைகள் நீங்குதலும் ஏற்படலாம். வருவாய் மேம்படும். ஆளுமைத்திறன் உருவாகலாம். புதிய பணிக்கு செல்லும் விருப்பம் ஏற்படலாம்.

**துலாம்:** குடும்பத்தில் வயது முதிர்ந்தவர்களின் தேவைகளில் அக்கறை தேவைப்படலாம். உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு சிறிய பிரச்சினை உண்டாகலாம். தவறாக வழிநடத்த முயற்சிக்கும் சிலரிடம் கவனம் தேவைப்படலாம். பணியிட உள்ளக அரசியலில் கவனம் தேவைப்படலாம். சமூக தொண்டுகளில் ஆர்வம் உண்டாகலாம்.

**விருச்சிகம்:** வணிகத்தில் புதிய முயற்சிகளுக்கு பின்னடைவு ஏற்படலாம். வாயுப் பிரச்சினைகள் உடல்நலத்தில் சிறிய அளவில் உண்டாகலாம். குடும்பத்தினருடன் உறவு பாதிக்கப்படலாம். ஒழுக்கத்துக்கு புறம்பான செயல்களில் ஒதுங்கி இருப்பது நன்மை. சில விடயங்களை அனைவரிடமும் பகிராமல் இருப்பதும் நல்லது. இறைவணக்கம் தேவை.
**சந்திராஷ்டமம்:**
**அனுஷம் நட்சத்திரத்துக்கு**
**காலை 7.49 - 12.03.2022**
**காலை 10.49 வரை**
**கேட்டை நட்சத்திரத்துக்கு**
**12.03.2022 காலை 10.49-**
**13.03.2022 பி.ப 1.30**

**தனுசு:** இணைய வழி வர்த்தக இலாபங்கள் அதிகரிக்கலாம். நண்பர்களுடன் மகிழ்வான நாளாக அமையலாம். வாழ்க்கைத்துணையின் செயல்களில் மகிழ்ச்சி கிடைக்கலாம். அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகளில் நன்மை உண்டாகலாம். வணிக செயல்களில் சில பிழைகள் நீக்கப்படலாம்.
**சந்திராஷ்டமம்:**
**மூலம் நட்சத்திரத்துக்கு**
**13.03.2022 பி.ப 1.30 -**
**14.03.2022 மாலை 3.41 வரை**

**மகரம்:** மாணவர்களுக்கு பகுதி நேர தொழில் திட்டங்கள் ஏற்படலாம். புதிய நிதி முதலீட்டில் சரியான தகவலை பெற்று செய்வது நல்லது. அறிவார்ந்தவர்களின் ஆலோசனை நன்மை தரும். வாகனம் செலுத்துவதில் சிறிய கவனம் தேவைப்படலாம். திருமண வாழ்வில் பிரச்சினைகள் நீங்கலாம்.

**கும்பம்:** பிள்ளைகளின் செயல்களில் கவனம் தேவைப்படலாம். சில தவறான அணுகுமுறை வணிகத்தில் பிரச்சினைகளை உண்டாக்கலாம். இன்று கூட்டு தொழில் முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. முக்கிய முடிவுகளில் அவசரம் தவிர்ப்பது நன்மை. காலில் சிறிய வலி உண்டாகலாம்.

**மீனம்:** புதிய முதலீட்டுத் திட்டங்களில் கவனம் தேவைப்படலாம். சில வேலைகளில் வேகம் அதிகரிக்கலாம். சிலரின் மீதான நம்பிக்கை விடயத்தில் அவதானம் தேவைப்படலாம். வேலைத்தளங்களில் பிரச்சினைகள் நீங்கத் தொடங்கலாம். உறவுகளிடம் உங்களுக்கு அவப்பெயர் உருவாகலாம்.

## மின்சாரம் தாக்கி தம்பதியினர் உயிரிழப்பு

**(யாழ். நிருபர்)**

யாழ். புத்தூர் பகுதியில் மின்சாரம் தாக்கி கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதுடன் புத்தூர் பகுதியை சேர்ந்த 59 வயதுடைய நபரொருவரும் 55 வயதான அவரது மனைவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வீட்டிலுள்ள நீர்த் தொட்டியில் மனைவி நீர் அள்ளும்போது மின்சாரம் தாக்கியதாகவும், அவரைக் காப்பாற்ற முயன்றவேளை கணவனும் மின்சார தாக்குதலுக்கு இலக்காகியதில் உயிரிழந்ததாகவும் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மலையக மக்கள் தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் அக்கறை செலுத்த வேண்டும்

## பிரான்ஸ் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மனோ எம்.பி. வலியுறுத்து

"ஐரோப்பிய ஒன்றிய அரசுகள், மலையக தமிழ் இலங்கை மக்களை கவனத்தில் கொள்ள பிரான்ஸ் வழிகாட்ட வேண்டும்" என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தூதுவர் எரிக் லெவர்டுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரான்ஸ் தூதுவர் தனது கோரிக்கையை ஏற்றுக்கொண்டதாகவும், அதற்கு தேவையானவற்றை தாம் செய்வதாக உறுதியளித்ததாகவும் மனோ எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் தினங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி தூதுக்குழுவை சந்திக்க விரும்புவதாகவும் பிரான்ஸ் தூதுவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் அரசியல் ஆவணத்தை அனைத்து சர்வதேச சமூக பிரதிநிதிகளுக்கும் கையளித்து, கலந்துரையாட தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் தினமொன்றில் சந்திப்பு நடைபெறும் என்றும் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, பெருந்தோட்டப் பெண்களை மையப்படுத்திய ஓர் நிகழ்வை கொழும்பில் பிரான்ஸ் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்



மேலும் கூறியுள்ளதாவது.

இங்கே வளவாளர்கள் அழைக்கப்பட்டு, தேயிலை பெருந்தோட்டங்களில் பணி செய்யும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடியமைக்காக பிரான்ஸ் தூதரகத்துக்கு நன்றி கூறுகின்றேன். இங்கே வளவாளர்களாக உரை நிகழ்த்திய பெ. முத்துலிங்கம், பிரியதர்ஷினி, சோமரத்ன, அனுஷா சோமசுந்தரம் ஆகியோர் மலையகத்தில் பெருந்தோட்ட மக்கள் படும்பாட்டை மிக சிறப்பாக விவரித்தனர்.

அவற்றை கேட்டுக்கொண்டிருந்த போது, குறிப்பாக கலைப்போராளியாக அனுஷா நிகழ்த்திய உரையை செவிமடுத்த போது, எனக்கு வேதனையும் ஆத்திரமும் விரக்தியும் ஒருங்கே ஏற்பட்டது. ஆனால், என் மனதில் வைராக்கியம் மென்மேலும் உறுதியானது. தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவராக நான் என் கடமையை முழு நாட்டுக்கும் செய்வேன். மிகவும் பின்தங்கிய பெருந்தோட்ட மக்களுக்காக அதிகம் செய்வேன்.

முதற்கட்டமாக மலையக தமிழர்களின் அரசியல் சமூக அபிலாஷைகளை நாம் சர்வதேச மயப்படுத்த தீர்மானித்துள்ளோம். இந்திய வம்சாவளி மலையக தமிழர் அபிலாஷைகளை தேசிய, சர்வதேச அரங்குகளில் முறைப்படி முன்வைக்க நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். அது படிப்படியாக நடக்கும். இதில் நான் பிரதான பாத்திரம் வகிக்கிறேன். எதிர்வரும் வாரங்களில் நாம் இது தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுப்பதை நாடு பார்க்கும்.

இந்நாட்டில் வாழும் ஏனைய மக்களை பற்றி அறிந்துள்ள சர்வதேச சமூகம் இனி மலையக தமிழ் மக்கள் பற்றி அறிய வேண்டும். மலையக தமிழர் இல்லாமல் இலங்கை பற்றிய தகவல் முழுமையடையாது. மலையக மக்கள் படும்பாட்டை இன்று நீங்கள் அறிய விரும்புவது நன்கு தெரிகிறது. இது ஒரு புது நகர்வு. இதை நான் அர்த்தமுள்ளதாக மாற்றுவேன்.

ஐரோப்பிய ஒன்றிய அரசுகள், மலையக தமிழ் மக்களை கவனத்தில் கொள்ள பிரான்ஸ் வழிகாட்ட வேண்டும். தூதுவர் எரிக் லெவர்டின் இதுபற்றிய ஆர்வம் என்னை உற்சாகத்துக்கு உள்ளாகியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய அரசுகள், மலையக தமிழ் மக்களை கவனத்தில் கொள்ள பிரான்ஸ் வழிகாட்ட வேண்டும் என உங்களை கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## தமிழகத்துக்கு தப்பிச்சென்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்

**(மன்னார் நகர் செய்தியாளர்)**

இலங்கையில் தேடப்பட்டு தமிழகத்துக்கு தப்பிச் சென்ற நிலையில் கைது செய்யப்பட்ட கொழும்பைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று (10) இராமநாதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இவரை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி விஜய் ஆனந்த் உத்தரவிட்டார்.

கொழும்பைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரான அத்தநாயக்க சமந்த பிரதீப் குமார் பண்டார (வயது 32) என்ற இவர் இலங்கை துறைமுக பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டு குறித்த பொலிஸ் நிலையத்தில் இருந்த சுமார் 23 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மாயமான நிலையில், அது தொடர்பில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில், பொலிஸாரிடமிருந்து தப்பித்துக்கொள்ள பிரதீப் குமார் கடந்த 2020 ஆம் ஆண்டு செப்டெம்பர் 04ஆம் திகதி தனுஷ்கோடி பகுதிக்கு சென்றுள்ளார்.

அவர் அங்கு கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இந்நிலையில், இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்றபோது மீண்டும் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவையடுத்து பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மீண்டும் அவர் திருச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஆகியோர் நேற்று முன்தினம் (09) கண்டி நகரில், பகற்போசன வேளையில் பரஸ்பரம் கலந்துரையாடினர். மலையகத் தலைநகரில் உயர் ஸ்தானிகர் இரு நாட்களைப் பயன்படுத்த முன்வந்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகவும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஹக்கீமிடம் தெரிவித்துள்ளார்.

# மகாமாயா மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பிரபஞ்சம் நிகழ்ச்சித்திட்டத்தின் 17ஆவது கட்ட நிகழ்வு

நவீன உலகில் டிஜிட்டல் எதிர்காலத்துக்காக இந்நாட்டின் சிறுவர் தலைமுறையை தொழில்நுட்ப திறமையாலும், ஸ்மார்ட் கணினி திறமையாலும், அறிவை அடிப்படையாகக் கொண்ட நவீன தொழில்நுட்பத்தின் மூலம் இணைத்து பூரணத்துவத்தை வழங்கும் நோக்குடன் எதிர்க்கட்சித் தலைவரின் எண்ணக்கருவுக்கு அமைய, நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு டிஜிட்டல் கணினி உபகரணங்களை வழங்கும் பிரபஞ்சம் நிகழ்ச்சித்திட்டத்தின் 17ஆவது கட்ட நிகழ்வு நேற்று (10) நடைபெற்றது.

விசேடமாக சர்வதேச மகளிர் தினத்தையொட்டி எம்மால் ஏழு நாள் பிரபஞ்சம் வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகிறது.

இந்நாட்டு சிறுவர்கள் டிஜிட்டல் உலகில் தலைநிமிர்ந்து செயற்படும் நோக்கில் செயற்படுத்தப்படுகின்றன. டிஜிட்டல் வகுப்புக்கான நவீன கணினி தொழில்நுட்ப திரைகள் மற்றும் நவீன கணினிகளை வழங்கும் பிரபஞ்சம் திட்டத்தின் 17ஆவது கட்டமாக, 08 இலட்சத்து 46ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைக்கான கணினி திரைகள் மற்றும் கணினி உபகரணங்களை பப/ ஜய/ மகாமாயா மகளிர் கல்லூரி அதிபர் எம்.சமிலா குமாரியிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான இத்தாலி நாட்டுத் தூதுவர் ரீடா கியுலியானா மனெல்லாவும் ஐக்கிய மகளிர் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிலரும் கலந்து கொண்டனர்.





இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று முன்தினம் (09) சம்மாங்கோடு பள்ளிவாசலுக்கு சென்றார். அங்கு அவர் நிர்வாகிகளுடன் பல விடயங்களை கலந்துரையாடினார்.

உக்ரைன் மீதான சண்டைக்குப் பின்னர் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை பலம் வாய்ந்த நாடுகள் விதித்து வருகின்றன. எரிவாயு, கோதுமை, உலை எண்ணெய் உட்பட்ட பலவற்றிற்காக ரஷ்யாவை நம்பியிருந்த நாடுகளும் ரஷ்யாவை வெறுக்க ஆரம்பித்துள்ளன. ரஷ்யாவை தனிமைப்படுத்துகிறோம் அல்லது தண்டிக்கிறோம் என்று கூறும் இந்த பலம் வாய்ந்த நாடுகள் எல்லாம் யோக்கியம் மிக்கவையல்ல. ரஷ்யா மீது பொருளாதார யுத்தம் நடத்தப்படுவதாக அதன் ஜனாதிபதி புட்டின் பகிரங்கமாக அறிவித்துள்ளார். பொருளாதாரத் தடைகளை விதித்த அந்த நாடுகள் மீது புட்டினும் தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்தலாம். ஆனால், இப்போது புட்டின் காக்கும் அமைதியை நோக்குகையில், இந்தத் தடைகள் ரஷ்யாவுக்கு பெரிதாக பின்னடைவைத் தரும் வாய்ப்பில்லை. அதேசமயம், உலகின் முக்கிய நிறுவனங்களுக்கு தமது விற்பனைச் சந்தையில் பாதிப்பைத் தரும்.

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதலை முழு உலகமும் கண்டித்து வருகிறது. அதேசமயம், இந்தப் போரின் மறுபக்கமாக, சர்வதேச வர்த்தக நிறுவனங்களின் எதேச்சாதிகார நடவடிக்கை பெரியளவில் விவாதிக்கப்படாமல் இருக்கிறது.

தனது முன்னாள் கூட்டாளியும், அண்டை நாடுமான உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி 24இல் திடீரென போரைத் தொடங்கியது. சொல்லப்போனால் இது போரே அல்ல. உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஒருதலைபட்சமான ஆக்கிரமிப்புத் தாக்குதல்தான் இது.

ரஷ்யாவுக்கு எதிரான நேட்டோ கூட்டமைப்பில் இணைய உக்ரைன் முயன்றதே இந்தத் தாக்குதலுக்குக் காரணம். கடந்த இரு வாரங்களில் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். இந்தத் தாக்குதலைக் கண்டித்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், கனடா உள்ளிட்ட நாடுகள், ரஷ்யாவுக்கு எதிராக பல தடைகளை விதித்துள்ளன. ரஷ்யாவுடனான விமானப் போக்குவரத்து, வர்த்தக நடவடிக்கைகள், இரு தரப்பு உறவுகளை நேட்டோ கூட்டமைப்பு நாடுகள் இரத்துச்செய்வதாக அறிவித்துள்ளன. ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளையும் இந்நாடுகள் அறிவித்துள்ளன. இவை நியாயமானவையே.

அதேசமயம், ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளுக்குக் கட்டுப்பட்டு, சில சர்வதேச நிதி சேவை நிறுவனங்களும் ரஷ்யாவுடனான தங்கள் சேவையை முடக்கி வைத்துள்ளன. குறிப்பாக, "விசா", "மாஸ்டர் கார்ட்", "அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்" ஆகிய சர்வதேச கடன் பற்று அட்டைகளை செயற்படுத்தும் நிதிசேவை நிறுவனங்கள், ரஷ்ய நாட்டுடனான தங்கள் செயற்பாட்டை நிறுத்திவைத்துள்ளன. மேலோட்டமாக பார்த்தால் இதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியாது. ஆனால், தங்கள் சேவையை ரஷ்ய மக்களுக்கு நிறுத்திவைக்க சர்வதேச

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 11ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# மேற்குலகின் ஓரவஞ்சனை

நிதிச்சேவை நிறுவனங்களுக்கு அதிகாரமுள்ளதா என்ற கேள்வி எழுகிறது. "விசா", "மாஸ்டர் கார்ட்", "அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்" ஆகியவை அமெரிக்காவைத் தலைமையிடமாகக்கொண்டவை. அதேசமயம், இவற்றின் வாடிக்கையாளர்கள் உலகம் முழுவதும் இருக்கிறார்கள். அந்த வாடிக்கையாளர்களின் நிதிச் செயற்பாடுகளில் உதவுவதன் மூலமாக பல கோடி டொலர்களை இவை ஈட்டுகின்றன. இந்த உறவு, வாடிக்கையாளர் சேவை தொடர்பானது.

நாடுகளிடையிலான ஒப்பந்தங்கள் இதற்குக் காரணமாக இருந்தாலும், வாடிக்கையாளர் சேவையே அடிப்படை அலகு. தற்போது அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நடைபெறும் மறைமுக யுத்தத்துக்காக இந்த நிறுவனங்கள் அமெரிக்காவுக்கு சாதகமாகச் செயற்படக்கூடாது. ஏனெனில், இந்தத் தடைகள் ஐ.நா. சபையால் விதிக்கப்பட்டவையல்ல. ஐ.நா. சபையால் ரஷ்யாவுக்கு எதிராக இன்னமும் தீர்மானம் நிறைவேற்ற முடியாத சூழலில், நேட்டோ நாடுகளின் கட்டளைப்படி சர்வதேச நிதி நிறுவனங்கள் இயங்குவது, அவற்றின் நம்பகத் தன்மையைப் பாதிக்கும்.

உலகளவில் சீனா தவிர்த்து 200இற்கும் மேற்பட்ட நாடுகளின் பண அட்டை வர்த்தகத்தில் 90 வீத பங்களிப்பவை அமெரிக்காவைச் சேர்ந்த இந்த மூன்று நிறுவனங்கள்தான். சீனா மட்டுமே தனக்கென்று பிரத்தியேகமாக 'யூனியன்பே' என்ற பண அட்டையைக் கொண்டுள்ளது. பெப்ரவரி 26இல் நேட்டோ நாடுகள் அறிவித்த பொருளாதாரத் தடையை ஏற்று, கடந்த மார்ச் 5இல் இந்த சர்வதேச நிதிச்சேவை நிறுவனங்கள் தங்கள் ரஷ்யா தொடர்பான பண அட்டைகளின் செயற்பாட்டை முடக்கிவைப்பதாக அறிவித்தன. இந்தப் பண அட்டைகளுக்கு ரஷ்யாவின் வர்த்தகப் பங்களிப்பு உலகளவில் சுமார் 10 சதவீதமாகும்.

இதன் காரணமாக, ரஷ்யாவிலுள்ள தானியங்கிப் பண இயந்திரங்களிலும் (ஏ.ரி.எம்.), விற்பனை முனையங்களிலும் (பி.ஓ.எஸ்.) நிதிப் பரிமாற்றம் தடைப்பட்டதால் இலட்சக்கணக்கான ரஷ்ய மக்கள் பாதிக்கப்பட்டனர். தங்கள் ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எதிரான நேட்டோ நாடுகளின் எதிர்ப்புக்காக, தங்கள் பண அட்டைகளை சர்வதேச நிறுவனங்கள் முடக்கியது ஏன் என்று அவர்கள் கோபமடைந்ததில் நியாயம் இருக்கிறது.

இதேபோன்ற அனுபவம் 2014இலும் ரஷ்யாவுக்கு ஏற்பட்டது. அப்போதும் ரஷ்ய - உக்ரைன் போர்ச்சூழல் காரணமாக மேற்கத்திய நாடுகள் விதித்த பொருளாதாரத் தடையின்போது, "விசா", "மாஸ்டர் கார்ட்" நிறுவனங்கள் செயற்பட மறுத்ததால் ரஷ்யர்கள் அவதிக்குள்ளாகினர்.

அதன் எதிரொலியாக ரஷ்யாவின் முதன்மை வங்கியான ஸ்பெர் வங்கி, 2015இல் ரஷ்யாவுக்கென பிரத்தியேகமான "மிர்" என்ற கடன் பற்று அட்டைகளை உருவாக்கியது. 2021ஆம் ஆண்டிலேயே ரஷ்யாவின் பண அட்டை வர்த்தகத்தில் 32 சதவீதத்தை "மிர்" பிடித்துவிட்டது. "மிர்" இருப்பதால்தான் தற்போது ரஷ்யர்கள் 2014ஆம் ஆண்டுபோல கடுமையாக பாதிக்கப்படவில்லை. எனினும், முதல் மூன்று நாட்களுக்கு அதன் தாக்கம் இருந்தது.

தவிர, இந்தியாவின் "ரூபே", சீனாவின் "யூனியன்பே" பண அட்டைகளுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளவும் ரஷ்ய அரசு தயாராகி வருகிறது. உலகை ஆட்சிசெய்யத் துடிக்கும் நாடுகளுக்குக் கட்டுப்பட்ட சர்வதேச நிறுவனங்கள் வர்த்தக நெறி பிறழ்கையில், ஒவ்வொரு நாட்டுக்கும் தமது நிதிச் சுதந்திரத்தையும், பொருளாதாரத்தையும் காக்கவேண்டிய பொறுப்பு கூடுகிறது. இன்று ரஷ்ய மக்களுக்கு ஏற்பட்ட பண அட்டை அவதி, நாளை பிற நாட்டு மக்களுக்கும் ஏற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

சுருக்கமாக சொல்லப்போனால் ரஷ்யாவை மேற்குலகம் இறுக்குவதால் சீனா உட்பட்ட மேற்குலக எதிர்ப்பு நாடுகளின் கூட்டு ஒன்று உருவாகும் வாய்ப்பு இருக்கிறது. சர்வதேச பொலிஸ்காரன்போல் அமெரிக்க எந்நாளும் நடந்துகொள்ள முடியாத நிலை வரலாம். ரஷ்யாவை தனிமைப்படுத்துவதாக நினைத்து மேற்குலகம் தன்னை தனிமைப்படுத்திக்கொண்டிருக்கிறது.

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்குக் குடியுரிமை




# என்ன சிக்கல்?

தமிழகத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அகதிகளாகத் தங்கியிருக்கிற இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கவேண்டுமென தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றன. ஆனால், முன்னர் ஆட்சியிலிருந்த மன்மோகன் சிங் அரசும், இப்போதைய மோடி அரசும் சாதகமான பதிலைக் கொடுக்கவில்லை. தமிழகத்துக்கு 1964இற்குப் பிறகு, தாயகம் திரும்பிய அகதிகளும், 1983இற்குப் பிறகு 'தஞ்சம் தேடிய அகதிகளும்' வந்தார்கள்.

1964இல் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவும், இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும் மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஆங்கிலேயரின் ஆட்சியின்போது குடியேற்றப்பட்ட 'மலையகத் தமிழர்கள்' என அழைக்கப்படும் தோட்டப்பகுதியில் வாழ்ந்த 5 இலட்சத்து 25 ஆயிரம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தாயகம் திரும்பிய அகதிகளாக வந்தார்கள். இதற்குப் பதிலாக இலங்கையிலிருந்த 3 இலட்சம் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு இலங்கையில் குடியுரிமை வழங்கப்பட்டது. இரு சாராரும் தீர்வு காணாத ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்கள் 'நாடற்றவர்களாக' இலங்கையில் இருந்தார்கள். 'நாடற்றவர்கள்' (Stateless) என்ற சொல்லின் பொருளையும், அச்சொல்லின் பின்னால் வாழ்ந்த மக்களின் துன்பங்களையும் அரசியல்வாதிகளும், பெரும்பான்மையான மக்களும் உணர்ந்திருக்கவில்லை.

ஆங்கிலேயர்கள் இந்தியாவையும், இலங்கையையும் ஆண்டபோது, கோப்பி, தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக தமிழகத்திலிருந்து மக்களைத் தொழிலாளர்களாகக் கொண்டுசென்றனர். 1827இல் 10 ஆயிரம் தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டதோடு அவர்களின் வருகை தொடங்கியது. இதனால் 1911இல் தோட்டப் பகுதியில் 5 இலட்சத்து 30 ஆயிரத்து 983 தமிழர்கள் இருந்தார்கள். 1936இல் இத்தொகை 11 இலட்சத்து 23 ஆயிரமாகக் கூடியது.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. 1949இல் அப்போதைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க கொண்டுவந்த பிரஜாவுரிமை சட்டத்தால் சுமார் 10 இலட்சம் தோட்டப்பகுதித் தமிழர்கள் நாடற்றவர்களானார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், 1947இல் நடந்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு வாக்களித்து, ஏழு இந்திய வம்சாவளித் தமிழர்களை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்தவர்களே புதிய சட்டத்தில் நாடற்றவர்களானார்கள். இச்சட்டம் இலங்கையில் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடனேயே கொண்டுவரப்பட்டது.

இச்சட்டத்தால் நாடற்றவர்கள் தொழிலாளர்களாக வேலை செய்து வாழலாம். உயர்கல்வி இல்லை. சிறு வர்த்தகம்கூடத் தொடங்க முடியாது. நாட்டை விட்டுப் போக முடியாது. சுருக்கமாகச் சொன்னால், தோட்டங்கள் என்ற திறந்தவெளிச் சிறையில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் இந்தியாவையே அறியாதவர்கள். இலங்கையில் பிறந்தவர்கள். இவர்களில் 1940இற்குப் பிறகு குறைந்த எண்ணிக்கையிலானவர்களே இலங்கை வந்தவர்கள். இவர்களை உள்ளடக்கியதே சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும், அதற்குப் பிறகு செய்யப்பட்ட அகதிகள் குறித்த ஒப்பந்தமும்.

நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் வாழ்ந்த, அங்கேயே பிறந்த மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கியதன் உள் நோக்கமே, இலங்கையில் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதேயாகும். இதனைச் செய்வதற்காக சிங்கள அரசியல்வாதிகள் கட்சி வேறுபாடுகளைத் தாண்டிக் கைகோர்த்தனர். இதற்கு அப்போதைய தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் உள்ளிட்ட சிலரும் கை தூக்கினார்கள். எஸ்.ஜே.வி.செல்வநாயகம் சட்டத்தை எதிர்த்தார். ஆனாலும், சட்டம் அமுலாகி, அந்த மக்கள் நாடற்றவர்களாக வாழ்ந்தார்கள். 1958, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிராக நடந்த இனக் கலவரத்தில் அந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

1983இற்குப் பிறகு, இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தால் பாதிப்படைந்த இலங்கைத் தமிழர்கள் 'அகதிகளாக' தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். இவர்களில் இந்திய வம்சாவளித் தமிழர்களும் அடங்குவார்கள். ஆனால், அவர்களில் பெரும்பான்மையானோர் இலங்கை திரும்பிவிட்டனர். ஏனைய இலங்கைத் தமிழர்கள், தமிழக அகதிகள் முகாம்களில் இருக்கிறார்கள். இவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்துக்கும் மேலே இருக்கும். எப்படிப் பார்த்தாலும், இவர்களின் அகதி வாழ்க்கை தொடங்கி சுமார் 40 ஆண்டுகளாகிவிட்டன. இவர்களின் முகாம் வாழ்க்கை மோசமானதென்று குற்றச்சாட்டுகள் வந்துகொண்டே இருக்கின்றன. இதே காலகட்டத்தில் வேறு நாடுகளுக்குச் சென்ற தமிழ் அகதிகள், செல்வ வளத்தோடும், அவர்களின் பிள்ளைகள் உயர் பதவிகளிலும் இருப்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். ஆனால், தமிழ்நாட்டிலுள்ள அகதிகளின் நிலையோ கேள்விக்குறியாக இருக்கிறது.

ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பிறகு, மத்திய, மாநில அரசுகளின் புலனாய்வு அமைப்புகளின் கெடுபிடி கடுமையாக ஆனது. மொத்தத்தில், அவர்களின் வாழ்க்கை துன்பக்கேணியைப் போன்றது. இந்நிலையில், அவர்களுக்குக் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற 'அரசியல்' சூடுபிடித்துள்ளது. அதேநேரத்தில், இலங்கைக் குடியுரிமை கொண்டவர்களான இவர்களைத் திரும்ப அழைப்பதில் இலங்கை அரசு அக்கறையே காட்டவில்லை. அதற்கு முக்கிய காரணம், இந்தியாவுக்குள் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களை அகதிகளாக அனுப்பி வைத்த அரசியல் தந்திரமேயாகும். இந்நிலையில், இப்போது அகதிகளாக இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கினால், அது இலங்கை அரசுக்கு மகிழ்ச்சியானதாக இருக்கும். அகதித் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவதால்,

1. இலங்கைத் தமிழரின் மக்கள் தொகையில் வீழ்ச்சி உருவாகும்,
2. அவர்கள் வாழ்ந்த இடங்கள் சிங்கள ஆக்கிரமிப்புக்கு ஆளாகும்,
3. நாடாளுமன்ற உறுப்பினர் தொகை குறையும்.

ஏற்கெனவே, ஒப்பந்தத்தின் மூலம் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகளைத் தமிழகம் உள்வாங்கியிருக்கிறது. கச்சதீவு கைமாறிப் போய்விட்டது. முள்ளிவாய்க்கால் யுத்த முடிவுக்குப் பிறகும் அரசியல் முடிவும் வரவில்லை. சீனர்களின் ஆதிக்கம் இலங்கையில் அதிகமாகியிருப்பதோடு, சீனர்களின் குடியேற்றமும் அதிகரித்துள்ளது. சீனர்களை அழைக்கும் இலங்கை அரசு, தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர்கள் குறித்து மௌனம் சாதிப்பதன் பின்னணியை உணர வேண்டும். ஆகவே, தமிழகத்தில் தங்கியிருக்கும் அகதிகளின் நிலையை இரு வகையில் கையாளலாம்:

**1. இந்தியாவில் தங்க விரும்புபவர்களுக்கு மட்டும் குடியுரிமை வழங்கலாம்.**
**2. மற்றவர்கள் தாயகம் திரும்புவதற்கு இலங்கை அரசோடு பேசி முடிவு காண வேண்டும்.**

இப்பிரச்சினைக்கு முடிவு காணும் வரை,

**1. தமிழகத்தில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகளுக்குத் தனியான அடையாள அட்டை (எப்போது வந்தார்கள், எங்கே இருக்கிறார்கள் என்பது போன்ற தகவல்களுடன்) வழங்க வேண்டும்.**
**2. தனியாரிடம் வேலைசெய்ய அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டும்.**
**3. மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்க வேண்டும்.**
**4. வாழ்வாதாரத்துக்கான நிதி, உணவுப் பொருட்களை வழங்க வேண்டும்.**
**5. நாடு திரும்புகிறவர்களுக்கு ஒரு தொகை கொடுத்தனுப்ப வேண்டும்.**

இவற்றையெல்லாம் உணராமல் குடியுரிமை வழங்குவது குறித்து பேசாமலிருப்பது இலங்கை அரசுக்கு மறைமுகமாக உதவி செய்வதாகும். எதிர்காலத்தில் அகதிகளாக இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்குப் போனால், அவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளும். அதன்மூலம், இலங்கையில் தமிழர் மக்கள்தொகையைக் குறைக்க முடியும் என்ற தந்திரத்துக்குப் பச்சைக்கொடி காட்டுவதாக முடியும்.

• மாத்தளை சோமு,
எழுத்தாளர்,
அவுஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்.
தொடர்புக்கு: mathtalai@gmail.com
நன்றி - இந்து தமிழ்

## தவக்கால சிந்தனை

# கடைப்பிடித்துக் கற்பிக்கிறவர்!



இறையாட்சியின் செய்திகளை அறிவிக்கின்றவர்களாக வாழவே இயேசு சீடர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அச்சீடர்களை இரு பிரிவினராகப் பிரிக்கிறார் இயேசு. அவரது கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி, அவ்வாறே பிறருக்கும் கற்பிக்கிறவர்கள் விண்ணரசில் சிறியவர் என அழைக்கப்படுவர். ஆனால், அக்கட்டளைகளைக் கடைப்பிடித்து, அப்படியே பிறருக்கும் கற்பிக்கிறவர்கள் பெரியவர் எனப்படுவர்.

இன்றைய திருச்சபையில் நாம் சிறியோர் பலரைப் பார்க்கிறோம். ஆனால், கடைப்பிடித்துக் கற்பிக்கும் பெரியோரைக் காண்பது அரிதாகவே உள்ளது. இறைவனின் கட்டளைகளை முழுமனதோடு கடைப்பிடிப்பதென்பது மிகப் பெரிய சவால். அதற்கு இறையாசி தேவை. கடைப்பிடிப்பதைப் பிறருக்கு அறிவிப்பதே நற்செய்தி அறிவிப்புப் பணி. அப்பணியில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோமாக.

# இன்றைய நாளில்...

- 1702 – முதலாவது ஆங்கில நாளிதழான 'த டெய்லி குராண்ட்' லண்டனில் வெளியிடப்பட்டது.
- 1812 – சேர் ரொபர்ட் பிரவுன்ரிக் பிரித்தானிய இலங்கையின் 3ஆவது ஆளுநராக நியமிக்கப்பட்டார் .
- 1902 – இலங்கையில் காங்கேசன்துறை முதல் சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப் பாதையமைக்கப்பட்டது.
- 1905 – இலங்கையில் காங்கேசன்துறை முதல் மதவாச்சி வரையான புகையிரதப் பாதையமைக்கும் பணி முடிவடைந்தது.
- 1918 – ரஷ்யாவின் தலைநகரம் பெத்ரோகிராட்டில் இருந்து மொஸ்கோவுக்கு மாறியது.
- 1983 – பாகிஸ்தான் அணுகுண்டு சோதனையை வெற்றிகரமாக பரிசோதித்தது.
- 1990 – லித்துவேனியா சோவியத்திடம் இருந்து தன்னிச்சையாக விடுதலையை அறிவித்தது.
- 2007 – தென் அமெரிக்காவின் வடகிழக்கிலுள்ள கயானா விண்வெளி ஏவுதளத்தில், ஆரியான்-5 ரொக்கெட் ஏவப்பட்டு, வெற்றிகரமாக அது இன்சாட்-4பி என்ற இந்திய செய்மதியையும், ஸ்கைநெட்-5ஏ என்ற பிரித்தானியாவின் துணைக்கோளையும் சுமந்து சென்றது.
- 2011 – ஜப்பானின் வட கிழக்குப் பகுதியில் 8.9 ரிக்டர் அளவுக்கு பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆழிப்பேரலையாக உருவெடுத்தது. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். உலகின் 2ஆவது பெரிய அணு உலைப்பேரழிவும் இடம்பெற்றது.

## நக்கல் நமசிவாயம்

***தேவையற்ற சாமான் எண்டு தலை சீவுற சீப்பு இறக்குமதிக்கும் தடை போட்டிருக்கிறாங்கள்...! சீப்பை ஒளிச்சா கலியாணம் நிக்குமா எண்ட கதையப் போல் நெருக்கடிக்கு தீர்வு எண்டு மேலும் பிரச்சினைய தேடிக்கொண்டிருக்கிறாங்கள்..!***



# இரத்மலானையிலிருந்து மாலைதீவுக்கான விமான சேவை 27ஆம் திகதிமுதல் ஆரம்பம்






(அஷ்ரப் ஏ சமத்)

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பு - மாலைதீவுக்கான முதலாவது மாலைதீவு எயாலைன் விமானம் புறப்படுகின்றது. இந்த விமான சேவைக்கான பிரவேச சீட்டுகளை இலங்கையிலுள்ள நவலோக்க விமான ரவல்ஸ் சேவை நிறுவனம் செயற்படுத்துகின்றது.

இலங்கையில் பழமைவாய்ந்ததும் முதலாவது விமான நிலையமுமான இரத்மலானை விமான நிலையம் 54 வருடங்களுக்குப் பிறகு தேசிய விமானநிலையமாக 2022இல் மாற்றப்பட்டதாக விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் டி.வி.சாரக்கா தெரிவித்தார்.

இரத்மலானை விமான நிலையம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இரத்மலானை விமான நிலையத்தில் நேற்று (10) இராஜாங்க அமைச்சர் டி.வி.சாரக்கா தலைமையில் நடைபெற்றது.

இவ்வூடக மாநாட்டில் மாலைதீவு உயர் ஸ்தானிகர் ஓமர் அப்துல் ரஸாக், இலங்கை விமான நிலைய அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) ஜி.ஏ.சந்திரசிறி, விமான நிலைய விமான அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் டெரிடர் டி.லிவாரா, நவலோக்க விமான ரவல்ஸ் சேவை பொது முகாமையாளர் ரம்லி விலாகாசிம் உட்பட அமைச்சின் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு பணிப்பாளர் டெரிடர் டி லிவாரா மேலும் தெரிவிக்கையில்,

இரத்மலானை விமான நிலையம் கடந்த 54 வருடங்களுக்குப் பிறகு தேசிய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. தெஹிவளை, கல்கிசை, நுகேகொடை பகுதிகளில் கல்வி பயில்வதற்காகவும், சுற்றுலாத்துறை, வைத்தியம் ஆகியவற்றுக்காகவும் 12 ஆயிரம் மாலைதீவு மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் நாளாந்தம் பிரயாணங்களை மேற்கொள்கின்றனர். இதற்காக எதிர்வரும் 27ஆம் திகதி முதலாவது மாலைதீவு விமானம் மாலையிலிருந்து இரத்மலானை விமான நிலையத்திற்கு வந்தடையும். இந்த விமானங்கள் ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய கிழமை நாட்களில் காலை 06.00 மணிமுதல் 08.40 மணிக்கும், இரத்மலானையிலிருந்து மாலைக்கு 09.40 மணிமுதல் 11.20 மணிவரையான காலப்பகுதியில் மூன்று நாட்களுக்கு புறப்படும்.

இதற்காக இரத்மலானை விமான நிலையத்தில் சுங்கப் பிரிவு, போக்குவரத்து, சுற்றுலா, உணவுப் பிரிவு, வங்கி போன்ற சகல வசதிகளையும் விமான நிலைய அதிகாரசபையே செயற்படுத்தப்படுகின்றது. விமானத்தின் ஓடுபாதைக்காக 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கி விமான நிலைய அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

விமானநிலையத்திற்கு ஒன்றரை மணித்தியாலயங்கள் முன்பாகவே சமுகமளிக்க முடியும். மாலைதீவு - கொழும்பு ஒரு வழிப்பாதைக்காக 45 ஆயிரம் ரூபா பிரவேச சீட்டு விற்பனையாகும். ஒரு விமானத்தில் 50 - 70 ஆசனங்கள் உள்ளன. இதனால் இலங்கைக்கு அந்நியநாட்டுச் செலாவணி கிடைக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## தங்கச் சங்கிலிகளை அறுத்தெடுத்த குற்றச்சாட்டில் கைதான 09 பேருக்கு

# விளக்கமறியல் நீடிப்பு!

(யாழ் நிருபர்)

திருநெல்வேலி ஆலயத்தில் தங்கச் சங்கிலிகளை அறுத்துச் சென்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள 09 பெண்களையும் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருநெல்வேலி பகுதியிலுள்ள விநாயகர் ஆலயம் ஒன்றில் கடந்த முதலாம் திகதி காலை இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்கள் மத்தியில் ஊடுருவிய திருட்டுக் கும்பல் ஒன்று நான்கு பெண்களின் சங்கிலிகளை அறுத்துச் சென்றுள்ளனர்.

சங்கிலிகளை பறிகொடுத்த பெண் பக்தர்கள் அது தொடர்பில் ஆலய இளைஞர்களிடம் தெரிவித்ததையடுத்து துரிதமாக செயற்பட்ட இளைஞர்கள், ஆலயத்திற்கு வந்திருந்த சந்தேகத்திற்கு இடமானவர்களை அவதானித்துள்ளனர்.

இதன்போது சந்தேகத்திற்கு இடமான முறையில் ஆலய வளாகத்தில் நடமாடிய சில பெண்களை விசாரித்தவேளை அவர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனை அறிந்துகொண்டுள்ளனர்.

அதனையடுத்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் 09 பெண்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

அவர்களை ஆலயத்தில் மறித்து வைத்தவாறே சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் , 09 பெண்களையும் தமது பாதுகாப்பில் எடுத்து அவர்களை கைதுசெய்து விசாரணை செய்துள்ளனர்.

இதன்போது அவர்கள் தாங்கள் கொழும்பு உள்ளிட்ட வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனக் கூறியுள்ளனர். அவர்களை பரிசோதனை செய்தவேளை அவர்களில் ஒருவரின் உடைமையிலிருந்து சங்கிலி ஒன்று மீட்கப்பட்டது. அதேவேளை, குறித்த கும்பலை ஆலயத்திற்கு அழைத்து வந்து இறக்கிவிட்ட முச்சக்கரவண்டி இரண்டினை அடையாளம் கண்டுள்ளனர். அதன் அடிப்படையில் முச்சக்கரவண்டி சாரதிகளை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அத்துடன், குறித்த பெண்களுடன் சில ஆண்களும் ஆலயத்திற்கு வந்திருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவித்தனர்.

09 பெண்களிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவர்களை கடந்த 2ஆம் திகதி யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவர்களை நேற்று வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கு நேற்று (10) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 09 பெண்களையும் தொடர்ந்து எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, குறித்த பெண்களை ஆலயத்திற்கு அழைத்து வந்து இறக்கிவிட்ட இரண்டு முச்சக்கரவண்டிகள் தொடர்பிலும் இதுவரையில் தகவல்கள் தெரியாத நிலையில் கோப்பாய் பொலிஸார் தொடர்ந்து அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







இலங்கைக்கு வருகை தந்துள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசக்கவா நேற்று நிதியமைச்சில் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தலைமையிலான குழுவை சந்தித்து பேச்சு நடத்தினார்.

# நிக்கவெரட்டியவில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் மகளிர் மாநாடு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்டம், நிக்கவெரட்டிய தேர்தல் தொகுதி மகளிர் மாநாடு அண்மையில் ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தலைமையில் நிக்கவெரட்டியவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோகில ஹர்ஷனி குணவர்தன, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள திஸாநாயக்க, குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யு.கே.சுமித் உடுகும்புர உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 10.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 071 2712 | 080 3631 |
| கனேடியன் டொலர் | 084 1581 | 1 3 0142 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 28 4470 | 30 37 0 |
| யூரோ | 168 563 | 18 11 1 |
| ஜப்பான் யென் | 1 05 0 | 1 1465 |
| சிங்கப்பூர் டொலர் | 074 050 | 081 3647 |
| ஸ்ரேலிங் பவுன் | 22 2101 | 232 4140 |
| சுவிஸ் பிராங் | 16 870 | 170 6813 |
| ஐ.அ.டொலர் | 138 85 2 | 148 8888 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 5 7 1502 |
| குவைட் | குவைட் தினார் | 644 0282 |
| ஓமான் | ஓமான் றியால் | 484 5586 |
| கட்டார் | கட்டார் றியால் | 51 7060 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 50 0174 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 51 3263 |

# ராமன்ய மகா நிகாயவினால் எதிர்க்கட்சித் தலைவருக்கு கௌரவ நாமம் வழங்கிவைப்பு

ஸ்ரீலங்கா ராமன்ய மகா நிகாயவினால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு சாசன கீர்த்தி தேசாபிமானி ஸ்ரீலங்கா ஜனரஞ்சன கௌரவ நாமம் வழங்கப்பட்டுள்ளது.

சமூக, கலாசார மற்றும் சமய ரீதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் மேற்கொள்ளப்படுகின்ற தொடர்ச்சியான சேவைகள் விசேடமாக பாராட்டப்பட்டதோடு அப்பணிகளை கௌரவிக்கும் முகமாக ஸ்ரீலங்கா ராமன்ய மகா நிகாயவினால் இந்த நாமம் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, பிரதி அமைச்சராக மற்றும் தற்போது எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாசவினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் விசேடமாக கவனிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியின்போது மிகக்குறுகிய காலம் கலாசார அமைச்சராகவும் சேவையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அக்காலகட்டத்தில் சமய மற்றும் கலாசார அமைச்சராக மிக முக்கியமான பல சேவைகளை ஆற்றினார்கள்.

சசுனட அருன, சிசு தகம் செவன, எதிர்க்கட்சியின் மூச்சு, பிரபஞ்சம் போன்ற வேலைத்திட்டங்கள் ஊடாக பாரிய சேவைகளை ஆற்றிக்கொண்டுள்ள சஜித் பிரேமதாச இதற்கு முன்னர் ஷியாமோபாலி மகா நிகாயவின் மல்வத்து பிரிவெனாவால் சாசன தீபன அபிமானி ஸ்ரீலங்கா ஜனரஞ்சன நாமம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பிரதான நிவாக சங்கரு சபையினால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு "சாசன கீர்த்தி தேசாபிமானி ஸ்ரீலங்கா ஜனரஞ்சன" என்ற கௌரவ நாமம் தொடர்பிலான பத்திரம் கையளிக்கும் நிகழ்வு இன்று (11) பி.ப. 2.30 மணிக்கு கொழும்பு 05, நாரஹேன்பிட்டி, எல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா ராமன்ய மகா நிகாயவின் மகா சங்கத்தின் தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

# பதுளையில் இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி 640 பேர் பலி

(பதுளை நிருபர்)


பதுளை மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஆரம்பம்முதல் 10-03-2022 வரையிலான காலப்பகுதியில் கொவிட் தொற்றுக்கிலக்காகி சிகிச்சை பலனின்றி 640 பேர்வரை உயிரிழந்துள்ளதாக பதுளை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10-03-2022இன் 24 மணித்தியாலங்களுக்குள் கொவிட் தொற்றினால் பண்டாரவளை, ஹப்புத்தளை, மகியங்கனை, ரிதிமாலியத்தை ஆகிய நான்கு இடங்களில் தலா ஒவ்வொருவர் என்ற அடிப்படையில் நான்கு பேர் மரணமாகியுள்ளனர். அத்துடன், பதுளை - 04, பண்டாரவளை - 01, ஹாலி-எல - 05, ஹப்புத்தளை - 01, கந்தகெட்டிய - 03, லுணுகலை - 01, மகியங்கனை - 03, மீகாகியுல - 01, பசறை - 01, ரிதிமாலியத்தை - 02 என்ற வகையில், இந்த 24 மணித்தியாலங்களில் 22 பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் 10-03-2022 வரையில், பதுளை - 85, பண்டாரவளை - 78, எல்ல - 15, ஹல்துமுள்ளை - 25, ஹாலி-எல - 58, ஹப்புத்தளை - 46, கந்தகெட்டிய - 09, லுணுகலை - 18, மகியங்கனை - 88, மீகாகியுல - 17, பசறை - 41, ரிதிமாலியத்தை - 24, சொரணாதொட்டை - 13, ஊவா, பரணகமை - 41 பேர், வெலிமடை - 82 பேர் என்ற வகையில் 640 பேர் கொவிட் தொற்றினால், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளவர்களாவர்.

ஆரம்பம்முதல் இதுவரையில் 37 ஆயிரத்து 34 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகி, படிப்படியாக சிகிச்சைகளின் பின்னர் பெரும்பாலானோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அவர்களில் மூவாயிரம் பேர் மட்டுமே வீடுகளிலும், கொவிட் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## தத்துவம் தங்கராசு



எனக்குத் தெரிந்த ஒருவர்... தலைமுடி வெட்டவென தெரிந்த சலூனுக்குச் செல்ல போன் செய்திருக்கிறார். அங்கே கரண்ட் இல்லை என்று பதில் சொன்னாராம் சலூன்காரர். அப்படியானால் ஜெனரேட்டர் பாவிக்கலாமே என்று கேட்க அதற்கு டீசல் இல்லை என்று சொன்னாராம் சலூன்காரர். அப்படியானால் வீட்டுக்கு வாருங்கள் என்று கூற, அதற்கு பைக்கிற்கு பெற்றோல் இல்லையே என்று பதில் கொடுத்தாராம் சலூன் அண்ணன்.

நாட்டின் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. சமையல் எரிவாயு சிலிண்டர் இல்லாமல் சலூன் கடை அண்ணன் எப்படி சமாளிக்கிறாரோ தெரியவில்லை. அதை விடுங்கள்...

அரசாங்கம் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை தடைசெய்து பட்டியலொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தலை சீவும் சீப்பை தடை செய்துள்ளது. வேலைவெட்டி இல்லாதவன் பூனையை பிடித்து சிரைத்தானாம் என்ற பழமொழி ஒன்று ஊர்களில் உள்ளது உங்களுக்குத் தெரியும். இன்றைய அரசாங்கத்தின் செயற்பாடும் அப்படித்தான்.

எவ்வளவோ வேலைகளை செய்யவேண்டியுள்ளதுஅவற்றையெல்லாம் விடுத்து என்னென்னவோ செய்துகொண்டிருக்கிறது இந்த வீணாய்ப்போன அரசாங்கம்...

LK Newspapers Viber Community

# மாணவியின் கொலைக்கு நீதிக்கோரி ஹாலி-எலயில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்





(பதுளை நிருபர்)

உடுவர பெருந்தோட்ட கீழ்ப்பிரிவைச் சேர்ந்த தர்மராஜா விதியா என்ற மாணவி கடந்த 08ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் கொலையாளிக்கு தண்டனை வழங்கக் கோரியும் நேற்று (10) ஹாலி-எல நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் இயங்கும் ஆசிரிய தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் இவ்வார்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த தர்மராஜா விதியா கோடரியினால் தாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டார். இதையடுத்து கொலைச் சந்தேக நபராக இனங்காணப்பட்ட இராமையா திபாகரன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றிருந்தார்.

இவரைக் கைதுசெய்ய நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு, தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று முன்தினம் 08ஆம் திகதி அதிகாலை உடுவர ரயில் நிலையத்துக்கு அருகில் தலைமறைவாகியிருந்த நிலையில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

நீண்டநேர பொலிஸ் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் மாலை பதுளை நீதவான் நீதிமன்றில் நீதிபதி சமிந்த கருணாதாச முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, சந்தேக நபரை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், தொடர்ந்து புலனாய்வு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கும்படி, ஹாலி-எல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ருவன் குணதிலக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில், தனது காதலுக்கு சாதகமான பதில் வழங்காமல் தன்னை விதியா ஏமாற்றியதால், ஆத்திரம்கொண்டே கோடரியினால் தாக்கி கொலைசெய்ததாக தெரிவித்துள்ளார்.

# சுத்தமான குடிநீரின்றி ப்ரவுண்ஸ்விக் தோட்ட மக்கள் பெரும் அவதி

## தோட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த கோரிக்கை





(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சி காலநிலை நிலவிவருவதால் சுத்தமான குடிநீர் இல்லாமல் மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர். ஆர்.பி.கே. பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா ப்ரவுண்ஸ்விக் தோட்டத்தில் 250 குடும்பத்தினரை கொண்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் குடிநீர், நீர்த்தாங்கி மூலமே வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த பல காலங்களாக இவ்வாறு நீர் வழங்கப்பட்டபோதிலும் இடைக்கிடை நீர்த்தாங்கி வரும் வாகனம் பழுதடைந்து வரும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

சுமார் பல ஆண்டுகளாக உபயோகிக்கும் இந்த பழைய வாகனம் மூலமே தற்போதும் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும், மாதத்தில் பல நாட்கள் இந்த வாகனம் பழுதடைந்து விடுவதால், இத் தோட்ட மக்கள் குடிநீரின்றி வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குடிநீர்த் தட்டுப்பாட்டால் அத் தோட்டத் தொழிலாளர்கள் தங்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவும், தாங்கள் வேலைக்கு செல்லவும் முடியாத நிலைமையும் ஏற்படுவதாகவும் இது குறித்து சம்பந்தப்பட்ட தோட்ட அதிகாரிகள் முன்வந்து சுத்தமான குடிநீரை பெற்றுத் தர ஆவன செய்யவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

தற்போது நீர்த்தாங்கி மூலம் வழங்கப்படும் குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்படாமல் வழங்கப்படுவதால் டெங்கு, மலேரியா, வயிற்றோற்றம் போன்ற பல நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாக தோட்டத் தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# வீதிவிளக்குகளை இரவு நேரங்களில் எரிய விடுவதை முற்றாக தவிர்க்குக!

## மாத்தளை மாநகர சபை முதல்வர் கோரிக்கை

(மாத்தளை நிருபர்)

மின்சாரத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய உள்ளூராட்சி அமைப்புகளுக்குட்பட்ட வீதி விளக்குகளை இரவுநேரத்தில் எரியவிடுவதை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறு மாத்தளை மாநகர சபை முதல்வர் சந்தனம் பிரகாஷ் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றிலிருந்து இச்செயற்பாட்டை உடனடியாக அமுல்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாத்தளை மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று (10) மாத்தளை மாநகர கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மாத்தளை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சகல வீதி விளக்குகளையும் இரவுநேரத்தில் செயலிழக்கச் செய்யவுள்ளதோடு மாத்தளை நகரின் பிரதான வீதி, ராஜ வீதி, கொங்காவலை உட்பட நகருக்குள் இருக்கும் சில வீதிகளில் மாத்திரம் வீதி விளக்குகளை செயற்படுத்திடவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு காரணமாக குறிப்பிட்ட சில நேரங்கள் மாத்திரம் மெழுகுவர்த்திகளை உபயோகிக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அசுர வேகத்தில் அதிகரித்துச் செல்வது குறித்தும் சமையல் எரிவாயு, குழந்தைகளுக்கான பால்மா, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றினால் அரசு முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் அசாதாரண சூழ்நிலையில் இருந்தும் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க சுயநல அரசியல் வேறுபாடுகளை மறந்து சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய காலம் தற்போது உருவாகியுள்ளது. எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சென். மேரிஸ் தேசிய கல்லூரியில் இலவச கல்விக் கருத்தரங்கு

## 'அன்போடு ஒருநாள்' அமைப்பினரால் ஏற்பாடு

'உயரப் பறக்க சிறகுகள் கொடுப்போம்' எனும் தொனிப்பொருளில் 'அன்போடு ஒருநாள்' அமைப்பு ஏற்பாடு செய்துள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு எட்டியாந்தோட்டை சென். மேரிஸ் தேசிய கல்லூரியில் அதிபர் கனகசுந்தரம் சாந்தகுமார் தலைமையில் எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இவ்விரு நாட்களும் காலை 08 மணிமுதல் மாலை 04 மணிவரை தமிழ், கணித பாட கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

முதல்நாள் இடம்பெறும் தமிழ்மொழியும் இலக்கியமும் பாட கருத்தரங்கை பிரிலியன்ட்வே சர்வதேச பாடசாலையின் தமிழ்ப் பிரிவு தலைவர் எம். மதன், கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியின் ஆசிரியர் வீ. ஜெயசீலன் ஆகியோர் நடத்தவுள்ளனர்.

அத்துடன், மறுநாள் நடைபெறவுள்ள கணிதப் பாட கருத்தரங்கை ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியின் ஆசிரியர் கே. சிவநேசன், ஹட்டன் ஹென்பீல்ட் தமிழ் வித்தியாலய ஆசிரியர் எம். ஜெயரூபன் ஆகியோர் முன்னெடுக்கவுள்ளனர்.

இதேவேளை, சென். மேரிஸ் தேசிய கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் ஊடகக் கற்கையை தொடரும் மாணவர்களுக்கான ஊடகவியல் அறிமுகம் தொடர்பான விசேட செயலமர்வும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்கள்

(டி.சந்ரு செ.திவாகரன்)



நாட்டில் எரிவாயு சிலிண்டருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் நிலையில், எரிவாயு சிலிண்டர் கொள்வனவுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். அதிகாலை ஐந்து மணிமுதல் வரிசையில் காத்திருந்தும் கூட பலராலும் எரிவாயுவினைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

அத்துடன், தமது பிரதேசங்களைத் தவிர்த்து மிக நீண்டதூரம் பயணம் செய்தும் அதிக செலவு செய்தும் எரிவாயு கொள்கலன்களைப் பெற்றுக்கொள்கின்றனர். இதேவேளை, நுவரெலியா மற்றும் நானுஓயாவில் சில உணவகங்களில் எரிவாயுவை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதால் மூடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வரிசையில் காத்திருந்த ஒருவர், சகல விடயங்களுக்கும் நீண்டவரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. இரண்டு மூன்று நாட்களாக வந்துசெல்கின்றோம். ஆனால், எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்ள முடியாமல் ஏமாற்றத்துடனேயே வீடு திரும்ப வேண்டிய நிலை உள்ளது.

எரிவாயு சிலிண்டர் இல்லை, உண்பதற்கு உணவு இல்லை. ஒரு பக்கம் எரிபொருளுக்கான நீண்டவரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. நீண்டவரிசையில் காத்திருந்தும் எரிவாயு சிலிண்டர் கிடைக்குமா என்பது சந்தேகமே என தெரிவித்தார்.

# சென்கூம்ஸ் தோட்டத்தில் குளவிக்கொட்டி ஒருவர் பலி

(தலவாக்கலை நிருபர்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்கூம்ஸ் தோட்டத்தில் நேற்று முன்தினம் (09) மாலை குளவிக்கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளார். சென்கூம்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 04 பிள்ளைகளின் தந்தையான சவரி அந்தோனி ஜோசப் (வயது 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது மனைவியும் மகளும் சென்கூம்ஸ் 7ஆம் இலக்க மலையில் விறகு சேகரித்துக் கொண்டிருந்தபோது சேகரித்த விறகை சுமந்துவர சென்றபோது அங்கு மரமொன்றிலிருந்த குளவிக் கூடொன்று கலைந்து இவரை கொட்டியுள்ளது. இதனையடுத்து பிரதேசவாசிகளால் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மக்களை இனவாதம் பேசி பிரிப்பவர்கள் நண்பர்களாகவே இருக்கின்றனர்

## ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் பிரதீப்

ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றுவதற்காக நாட்டில் இனவாதத்தைத் தூண்டிவிட்டு மக்களைப் பிரித்து வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைக்கிறார்கள். தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் நண்பர்களாக இணைந்தே நாட்டை கொள்ளையடித்து சீரழிக்கிறார்கள் - என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

'சீரழிந்த தேசத்தை கட்டியெழுப்புவதற்கான தீர்வு' எனும் தொனிப்பொருளில் காவத்தை வியாபாரக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மக்களாகிய எம்மை இனவாதம் பேசி பிரிக்கின்றார்கள். இனியும் நாம் சிந்தித்து செயல்படாவிட்டால் எதிர்கால சந்ததிக்கு சிறந்த நாட்டை எமக்கு வழங்க முடியாமல் போகும். நாம் அனைவரும் ஒரு நாள் குற்றவாளிக்கூண்டில் நிற்க வேண்டிவரும். இனியாவது சிந்தித்து செயல்படுவதன் மூலம் தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்தி மாற்றத்தை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும் - எனக் கூறினார்.





கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த, மக்களுக்கு ஆட்சி மாற்றம் தற்போது தேவைப்படுகின்றது. அதற்காக சஜித் தலைமையிலான அரசியல்வாதிகளிடம் ஆட்சியை ஒப்படைக்க முடியாது. எனவேதான் ஊழலற்ற திறன்வாய்ந்த தேசிய மக்கள் சக்தி என்ற ஓர் அமைப்பை ஆரம்பித்துள்ளோம். நாட்டை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதற்கு எங்களால் மட்டும் முடியாது, பொதுமக்களாகிய நீங்களும் பங்காளர்களாக மாறவேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பி சிறந்த நாடாக மாற்ற வேண்டுமென்றால் ஊழலற்ற நேர்மையான ஆட்சியாளர்களை நாம் தெரிவுசெய்ய வேண்டும் 74 வருடங்களாக எமது நாட்டை ஆட்சிசெய்த அனைவரும் மிகப்பெரிய ஊழல்வாதிகளே. எனவேதான் நாடு இந்தளவு சீரழிந்து போயுள்ளது. எனவே, ஆட்சிமாற்றம் என்பது அவசியம் தேவைப்படுவதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால்காந்த தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இரத்தினபுரி மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சாந்த பத்மகுமார, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப், பிரதேச சபை உறுப்பினர்கள், புத்திஜீவிகள் அமைப்பின் இரத்தினபுரி மாவட்ட தலைவர், வைத்தியர் ஜயசூரிய மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் 8ஆவது ஒன்றுகூடல் மாநாடு இன்று

(நுவரெலியா நிருபர்)

உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் 8ஆவது ஒன்றுகூடல் மாநாடு இன்று (11) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஆரம்பமாகவுள்ளது. குறித்த மாநாடு இரண்டு தினங்களுக்கு நடைபெறவுள்ளதாக உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் ஜெ.செல்வமார் தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பமாகவுள்ள தொடக்க விழாவின் தலைமை அதிதியாக தமிழ்நாடு சட்டமன்றத் தொழில் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து சிறப்பிக்கவுள்ளார். வரவேற்புரையை உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் ஜெ.செல்வமார் நிகழ்த்துவார்.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வில் உலகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள் பங்குபற்றும் நேரடி மற்றும் இணையவழி நிகழ்வில் இலங்கை சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், வேலுசாமி இராதாகிருஷ்ணன், வேலுகுமார், அமைச்சர் ச.வியாழேந்திரன், சுரேன் ராகவன் மற்றும் எச்.எம்.மொஹமட் ஹரீஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களான வைகோ, ஆர்.எஸ்.பாரதி, தொல். திருமாவளவன், டாக்டர் கலாநிதி வீராச்சாமி ஆகியோரும் மலேசிய நாட்டின் அமைச்சர் எம்.சரவணன், மலேசிய துணை முதல்வர் பி.ராமசாமி, பிரிட்டன் மாகாண அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் சசீந்திரன் முத்துவேல் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்த சங்கரி, அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரான ராஜா கிருஸ்ணமூர்த்தி, நியூசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினரான வனுஷி வால்டர் உட்பட 12 நாடுகளைச் சேர்ந்த 152 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நாளை (12) தமிழ்த்திரை நட்சத்திரங்கள் பங்குபற்றும் 'எடிசன் திரை விருதுகள் 2022' நடைபெறவுள்ளது. இதன்போது திரைத்துறையில் பல விருதுகள் வழங்கப்படவுள்ளன.



தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பாடசாலையின் தரம் 9 மாணவர்களின் செயன்முறை தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தும் வகையில் மாணவர்களின் செயற்பாட்டு கண்காட்சியொன்று பொறுப்பாசிரியர் திருக்கேதீஸ்வரியின் வழிகாட்டலின்கீழ் நேற்று (10) பாடசாலையின் வகுப்பறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(படங்கள்:- தலவாக்கலை நிருபர்)

தமிழன்
# வணிக உலகம்
Business world
www.thamilan.lk

# மக்கள் வங்கியின் ஒருங்கிணைந்த நிதியுதவி 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் இலங்கை ரூபா ஒரு ட்ரில்லியனைக் கடந்தது

- ★ ரூ. 236.8 பில்லியன் ஒருங்கிணைக்கப்பட்ட மொத்த வருமானம் மற்றும் ரூ.37.2 பில்லியன் ஒருங்கிணைந்த வரிக்கு முந்திய இலாபம்.
- ★ தொழிற்றுறையில் மிகப்பெரிய கொவிட் -19 நிவாரணத்தை விரிவுபடுத்துகிறது.
- ★ அரசாங்கத்தின் பொருளாதார மறுமலர்ச்சி முயற்சிகளுக்கு ஆதரவாக பல தொழிற்றுறைகளுக்கு முதலிடம் வழங்கி, பல கடன் வசதித் தயாரிப்புகளை வழங்குகின்றது.
- ★ 2021ஆம் ஆண்டில் டிஜிட்டல் பரிவர்த்தனையில் ரூ. ஒரு ட்ரில்லியனுக்கும் அதிகமாக செயற்படுத்துகிறது.
- ★ 7% வாடிக்கையாளர்கள் தங்கள் பரிவர்த்தனைகளை டிஜிட்டல் முறையில் மேற்கொள்கின்றனர்.
- ★ இத்தொழிற்றுறையில் அதிகமாக பதிவிறக்கம் செய்யப்படும் app Mf People's Wave விளங்குகிறது.
- ★ Lanka Pay National Card திட்டத்தினை இலங்கையில் முதன்முறையாக வழங்கிய மற்றும் கையகப்படுத்திய வங்கி.

மக்கள் வங்கியானது டிசம்பர் 31, 2021 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான முடிவுகளை இன்று அறிவித்தது. ஒருங்கிணைந்த மொத்த செயற்பாட்டு வருமானம் ரூ. 110.7 பில்லியனை எட்டியது மற்றும் மொத்த செயற்பாட்டு செலவினங்கள் ரூ. 50.5 பில்லியனை எட்டியது. இதில் 2020ஐ விட முறையே 21.9% மற்றும் 14.9% அதிகமாகும். ஒருங்கிணைக்கப்பட்ட வரிக்கு முன்னரான மற்றும் வரிக்குப் பின்னரான இலாபங்கள் முறையே ரூ. 37.2 பில்லியன், ரூ. 28.1 பில்லியன். இது 51.1% மற்றும் 74.6% வளர்ச்சியைக் குறிக்கிறது. வங்கியின் தனித்துவமான அடிப்படையில் புள்ளி விவரங்கள் முறையே ரூ. 30.4 பில்லியன் மற்றும் ரூ.23.7 பில்லியன். இது 2020 ஐ விட 43.2% மற்றும் 67.3% அதிகரித்தது. வருமான வளர்ச்சி முதன்மையாக நிகர வட்டி வருவாயிலிருந்து உருவானதாகும். இது மொத்த செயற்பாட்டு வருமானத்தில் 90.0%இனை நெருங்கியது. அத்தோடு வங்கியின் கடன் மற்றும் முதலீட்டுப் பட்டியலின் வளர்ச்சிக்கேற்ப 30.2% வளர்ச்சியைக் கண்டிருந்தது. அதேநேரம் அதன் கட்டண வருமானம் 23.4% அதிகரித்து, ரூ. 9.0 பில்லியனை எட்டியது. வங்கியின் நிதியிடா வருமான ஆதாரங்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இது பிரதிபலிக்கிறது.

செலவு வளர்ச்சி பெரும்பாலும் நேரடி வணிக வளர்ச்சியுடன் தொடர்புடையது. 2019 உடன் ஒப்பிடுகையில், 2020இல் 54.3% மற்றும் 2019இல் 61.8%. 2021இல் வங்கியின் செலவு மற்றும் வருமான விகிதம் 51.1% இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. தொழிற்றுறையில் காணப்படும் நுண்ணிய பொருளாதாரங்களை பிரதிபலிக்கும் வகையில் வங்கி அளவிலான குறைபாடு கட்டணங்கள் அதிகரித்தன.

கடந்த ஆண்டில் வங்கியானது கிராமிய அபிவிருத்தியில் முதலீடு செய்தது. மேலும் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு (SMEs) ஆதரவளித்ததோடு பெண் தொழில்முனைவோரையும் ஊக்கப்படுத்தியது. 2021ஆம் ஆண்டின் இறுதியில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களினூடாக அதன் வேறுபட்ட கடன் வசதிகள் மூலம் அது ரூ. 63.0 பில்லியன் வரை நீட்டிக்கப்பட்டது. இது ஏறத்தாழ ரூ. 1.9 பில்லியன் உள்ளடக்கியவாறு அதன் திட்டங்கள் மூலம் விவசாயம், தகவல் தொழில்நுட்பம், பண்டங்கள் கொண்டுசெல்லல், உற்பத்தி, தேயிலை மற்றும் சுற்றுலா என்பவற்றின் வணிக மீள்பார்வைக்கு உதவியது. சிறு விவசாய வணிக பங்காளிகளுக்காகவே குறைந்த வட்டி வீதங்களைக் கொண்ட கடன் திட்டத்தினைப் பெற்றுக்கொடுத்தது. இது 5000 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதுடன், ஆரம்பத் தொகையாக ரூ. 1.0 பில்லியனும் வழங்கப்பட்டது. உள்நாட்டு பசளை தயாரிப்பினை ஊக்குவித்திடும் வகையில் வங்கியானது சுபூமி கடன் வசதித் திட்டத்தினையும் அறிமுகப்படுத்தியது. இது மில்லியன் வகையிலான தொகைக்கு நீடிக்கப்பட்டதுடன், பெண் தொழில்முனைவோரையும் மேம்பாட்டுக்கு ஊக்குவித்திடும் வகையில் அமைந்திருந்தது. மேலும் வங்கியானது மேலதிக கடன் திட்டங்களை விவசாயம் மற்றும் கைப்பணி தொழிற்றுறைகளில் சுயதொழில் செய்வோருக்கு உதவிடும் வகையில் அறிமுகப்படுத்தியது. மேலும் நாட்டின் தகவல் தொழில்நுட்பத்துறைக்கு ரூ. 6.0 பில்லியன் தொகையை வழங்கியது. ஏற்கனவே ரூ. 750.0 பில்லியன் தொகையானது கையளிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட கடன் வசதிகள் என பார்க்கும்போது வீட்டு மற்றும் கட்டட துறைக்கு வங்கியானது 2021ஆம் ஆண்டில் 10,000இற்கும் அதிகமான வீட்டுக் கடன் வதிகளை வழங்கியுள்ளதுடன், அது ரூ. 185.8 பில்லியனுக்கும் அதிகமானதாகும். இதற்கு மேலதிகமாக 2021ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 5.5 பில்லியன் தொகையை இராணுவத்தில் ஊனமுற்ற - ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கும், ரூ. 68.5 பில்லியன் தொகையை அரசாங்க ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்பட்டது. கலைஞர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில் நிபுணர்களுக்கு உதவிடும் வகையில் ரூ. 550.0 மில்லியன் தொகையை வங்கி வழங்கியுள்ளது. மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவிடும் வகையில் வங்கியானது ரூ. 350.5 மில்லியன் தொகையில் மடிக்கணினிகளுக்கான கடன் வசதித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

மேலே சொல்லப்பட்ட அனைத்தும், வங்கியின் ஒருங்கிணைந்த கடன் புத்தகம் 12.1%இனால் அதிகரித்து, 2021ஆம் ஆண்டின் இறுதியில் 1990 பில்லியன் ரூபாவை எட்டியது. இருப்பினும் வங்கியின் நிலை 3இல் கடன்கள் 4.3%ஆக இருந்தது (2020: 4.5%). மேலும் மேற்கூறப்பட்ட இரண்டு வருட காலப்பகுதியில் வங்கி சுமார் 453.0 பில்லியன் ரூபா திறைசேரி முறியில் மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. அதன் ஒருங்கிணைந்த வைப்புத் தொகையின் வளர்ச்சி 12.1% ஆக, ரூ. 2,168.7 பில்லியனாக இருந்தது.

2021ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திற்கான மொத்த ஒருங்கிணைந்த வரிகள் மற்றும் ஈவுத் தொகை ரூ. 20.4 பில்லியனாக இருந்தது. இது 2020இல் ரூ. 16.3 பில்லியனாக காணப்பட்டதுடன், 25.1% வளர்ச்சியைக் கண்டது. அதன் ஒருங்கிணைந்த அடுக்கு I மற்றும் மொத்த



மூலதனப் போதுமான அளவு முறையே 13.4% மற்றும் 17.9% ஆக 2021இன் இறுதியில் இருந்தது. (2020: 10.7% மற்றும் 15.6%). வங்கியின் தனித்துவமான அடிப்படையில் முறையே 12.6% மற்றும் 17.8% (2020: 9.5% மற்றும் 15.5%); இவற்றுள் ஒன்று அனைத்து காலத்திலும் நிறுவன ரீதியில் இல்லை. ஆனால், தொழிற்றுறையில் மிக உயர்ந்தது. ஏனைய அனைத்து ஒழுங்கு முறை விகிதங்களும் குறைந்தபட்ச தேவைக்கு மேல் பராமரிக்கப்பட்டன.

இந்த முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ,

"முன்பு காணப்படாத சூழ்நிலைகளில் வங்கியின் முடிவுகள் குறித்து நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஒரு சேவை வழங்குனராக கடந்த இரண்டு வருட காலமாக எமது வாக்குறுதியை வழங்கிடவும் அதை நிறைவேற்றிட வேண்டிய எமது திறனும் இறுதிச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளது. ஒரு தேசிய நிறுவனமாக நாம் எமது வெற்றியை ஒரு பொதுவான மேல்நிலை அல்லது அடிமட்டக் கோட்டால் அளவிடுவதில்லை. ஆனால், எமது தேசிய மதிப்பின் அடிப்படையில் இந்த இக்கட்டான காலங்களில் நமது பின்னடைவு மற்றும் ஒட்டுமொத்த செயற்திறனுக்கான அளவு மற்றும் தரமான கண்ணோட்டத்தில் சுய - சான்றிதழளிக்கும் எங்கள் முடிவுகள் குறிப்பாக எமது உற்பத்தித் திறன் மற்றும் செயற்திறன்களை உள்ளடக்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்தும் எங்கள் வேலை இன்னும் வெகு தொலைவில் உள்ளது என்பதை உணர்த்துகிறது. எமது எந்த வெற்றியிலும் திருப்தியடையாமல் அரசின் பொருளாதார மறுமலர்ச்சி திட்டத்தில் கவனம் செலுத்தி முழுமையான அர்ப்பணிப்புடன் நாம் இருக்கின்றோம். முன்னால் இருக்கும் சவால்களை கருத்திற்கொண்டு நாம் மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருக்கின்றோம். ஒற்றுமையாக எம்மால் முடியும்" - என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த நேரத்தில் நெருக்கடிமிக்க காலத்திலும் அவர்கள் தலைமை தாங்கியமைக்காக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோருக்கு பணிப்பாளர் சபையின் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு மத்திய வங்கியின் ஆளுநர், ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகியோருக்கு இது தொடர்பான அனைத்து விடயங்களிலும் ஆதரவு மற்றும் வழிகாட்டல்களை வழங்கியமைக்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முக்கியமாக எமது அனைத்து வாடிக்கையாளர்கள், தற்போதைய மற்றும் முன்னாள் ஊழியர்கள் அனைவருக்கும் - நன்றிகள்! வங்கியின் வெற்றி உங்களுடையது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நிறுவனத்தின் மீது உங்களுக்குள்ள தொடர்ச்சியான நம்பிக்கையானது இதுவரையில் கண்டிராத வகையில் நாட்டுக்கு சேவை செய்ய எங்களுக்கு உதவியதோடு வங்கி மற்றும் நிதிச் சேவைகள் துறையில் எங்களை வேறுபடுத்தி அடையாளப்படுத்தவும் உதவியது" - என்றார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு கருத்து தெரிவிக்கையில், "2020 சவாலான ஓர் ஆண்டென நீங்கள் கருதினால், 2021ஆனது வேறு மட்டத்தில் இருந்தது. செயற்பாட்டு ரீதியாக இது எமது அர்ப்பணிப்பு, எமது ஒழுக்கம், எமது உறுதிப்பாடு, எமது வலிமை மற்றும் முக்கியமாக எங்கள் தொழில்நுட்ப திறன்களை தொடர்ந்து சோதித்தது. பெருந்தொற்றானது அனைத்து விடயங்களையும் விரைவுபடுத்தியுள்ளது. அனைத்தையும் தொடுகையற்றதாக்கியது. அனைத்தையும் தொலைவுபடுத்தியது மற்றும் அனைத்து விடயங்களையும் டிஜிட்டல்மயமாகியது. எனவே, 2021ஆம் ஆண்டைப் பயன்படுத்தி எமது டிஜிட்டல் வாடிக்கையாளர்களுக்கான புதிய வாடிக்கையாளர்களில் கவனம் செலுத்தவும், எமது வாடிக்கையாளர்களுக்கு உதவிட புதிய தீர்வுகளை அறிமுகப்படுத்தவும், எமது ஒட்டுமொத்த டிஜிட்டல் தளத்தை விரிவுபடுத்தவும், எமது வர்த்தக நாம மதிப்பை அதிகரிக்கவும், புதிய உறவுகளை உருவாக்கவும் என இவையனைத்தும் இறுதியாக மேம்பட்ட செயற்திறனை மற்றும் விநியோகத்தினை மேம்படுத்தவும் எம்மை வழிநடத்திடும். மேலும் எமது உற்பத்தித் திறன் மற்றும் செலவு வினைத்திறனை மேலும் மேம்படுத்துவது, நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு ஏற்கனவே நடைபெற்றுவரும் பல நடவடிக்கைகளை நிறைவு செய்வதோடு அவை முன்னோக்கிச் செல்வதற்கான முக்கிய அம்சங்களாகவும் விளங்குகின்றன" - என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "2022, ஒரு வரையறுக்கும் ஆண்டாக இருக்கும் என நாம் உறுதியோடும் நம்பிக்கையோடும் எதிர்நோக்குகின்றோம். எம்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும் எமது சேவை வழங்குனர்கள் உட்பட எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பிறபங்குதாரர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்கின்றேன். மேலும் உங்களது ஆதரவை தொடர்ந்தும் நாம் எதிர்பார்க்கின்றோம்" - எனத் தெரிவித்தார்.

மக்கள் வங்கியானது நாடளாவிய ரீதியில் 742 கிளைகள் மற்றும் சேவை நிலையங்களைக்கொண்டுள்ள இலங்கையின் மிகப்பெரிய வங்கித்தடம் கொண்ட, நாட்டின் முதன்மை உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும். 60 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டதுடன் 14.0மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கும், 19.0 மில்லியன் கணக்கு வைத்திருப்போருக்கும் தொடர்ந்தும் சேவை செய்திடும் 8000 ஊழியர்களின் பலத்தால் வங்கி பயனடைகிறது. 1961ஆம் ஆண்டு 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இந்த வங்கியானது "AA- (lka/ Stable)" என்ற தேசிய நீண்டகால மதிப்பைக் கொண்டுள்ளது. இது Fitch Ratings Lanka Ltd இனால் வழங்கப்பட்டதாகும்.

டிஜிட்டல்மயமாக்கல் பலன்களை முழு நாட்டிற்கும் கொண்டு செல்லும் நோக்கில் மக்கள் வங்கி, 2015இல் ஒரு முன்னோடியான டிஜிட்டல் மாற்றப்பயணத்தை மேற்கொண்டது. அப்பொழுதுமுதல் வாடிக்கையாளர்களுக்கு வங்கியுடனான தொடர்புகளின் ஒவ்வொரு கட்டத்திலும் மேம்பட்ட வசதி, வேகம் மற்றும் செயற்திறனை வழங்கிடும் பல்வேறுபட்ட டிஜிட்டல் வங்கித் தீர்வுகளை வழங்கி வந்துள்ளது. தகவல் பாதுகாப்பிற்கு மிக உயர்ந்த சர்வதேச அங்கீகாரமான ISO/IEC 27001:2013 சான்றிதழைப் பெற்றுள்ள இலங்கையின் முதலாவதும் ஒரே வங்கியுமாக மக்கள் வங்கி விளங்குகின்றது. மேலும் நாட்டின் கிராமப்புற பகுதிகளுக்கும் டிஜிட்டல் நிதிச்சேவைகளின் ஊடுருவலை எளிதாக்குவதில் முன்னணியில் இருப்பதை எண்ணி மக்கள் வங்கி பெருமைப்படுகிறது.

அத்தோடு ஒரு டிஜிட்டல் சமூகமாக தேசத்தின் பரிணாமத்தை ஆதரிப்பதில் ஒப்பற்ற வெற்றிகளையும் பதிவுசெய்துள்ளது.

# SLT-MOBITELஇன் தேசிய மர வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் உமந்தாவ பகுதியில் முன்னெடுப்பு

தேசிய தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தேசிய நாட்டிலுப்பை மர நடுகைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை மெல்சிறிபுர, மதபொல பிரதேசத்தைச் சேர்ந்த உமந்தாவ சர்வதேச பௌத்த கிராமத்தில் அண்மையில் ஆரம்பித்திருந்தது. வளியின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் காலநிலை மாற்றத்தை தடுத்து நிலைபேறான எதிர்காலத்தை ஏற்படுத்தும் நோக்குடன் இந்தத் திட்டத்தை SLT-MOBITEL முன்னெடுக்கின்றது.

இந்த நடவடிக்கையில் SLT-MOBITEL சார்பாக அதன் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களான வட மத்திய மற்றும் வடமேல் மாகாணத்துக்கான SLT பொது முகாமையாளர் சமந்த ஜயசிங்க, சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி, வடமேல் (கிழக்கு மாகாணம்) பிரதி பொது முகாமையாளர் பந்துல விதாரம, சந்தைப்படுத்தல் செயற்படுத்தல்கள் பிரதி பொது முகாமையாளர் ஆன் பெர்னாண்டோ, மொபிடெல் பிராந்திய முகாமையாளர் ரன்மல் பொன்சேகா மற்றும் மாவட்ட முகாமையாளர் திரோஷா கருணாரட்ன ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

BG Solar Energy (Pvt) Ltd இன் பொது முகாமையாளர் ரொஹான் குணபால மற்றும் Ekro Lanka Trading முகாமைத்துவப் பணிப்பாளர் சுரஞ்சித் தர்மரட்ன



ஆகியோரும் இந்த இரண்டாம் கட்ட மர நடுகைத் திட்டத்துக்கு பங்களிப்பு வழங்கியிருந்ததுடன், இந்த நிகழ்விலும் பங்கேற்றிருந்தனர்.

நாட்டிலுப்பை மரத்தில் காணப்படும் களைகளை கட்டுப்படுத்துவதில் பங்களிப்பு, சேதன உரத் தயாரிப்பில் பயன்படுத்தக்கூடிய தன்மை, வாயு சுத்திகரிக்கும் ஆற்றல் மற்றும் இயற்கை மருத்துவக் குணங்கள் நிறைந்த தாவரம் என்பதால் இந்த வகை தாவரத்தை மரநடுகைத் திட்டத்துக்காக SLT-MOBITEL தெரிவுசெய்திருந்தது. இரண்டாம் கட்டத்தின் கீழ் உமந்தாவ வளாகத்துக்கு நாட்டின் வெவ்வேறு பாகங்களிலிருந்து விஜயம் செய்திருந்த 75 பௌத்த பிக்குகளுக்கு நாட்டிலுப்பை மரக்கன்றுகள் வழங்கப்பட்டிருந்தன.

காடழிப்பை தவிர்ப்பது மற்றும் வளியிலிருந்து காபனீரொட்சைட் வாயுவை இயற்கையாகவே அகற்றுவது போன்றன இந்தத் திட்டத்தின் பிரதான உள்ளம்சங்களாகும். பச்சை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைப்பது, சிறந்த வாயு தூய்மையாக்கம், நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உயிரியல் பரம்பலை உறுதிசெய்தல், அதிகளவு சேதன உரத் தயாரிப்பு மற்றும் நாட்டிலுப்பை மரங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இந்தத் திட்டத்தினூடாக இலக்குவைக்கப்பட்டுள்ளன. நாட்டப்படும் ஒவ்வொன்று மரக்கன்றினதும் வளர்ச்சியைக் கண்காணிப்பதற்கு SLT-MOBITELஇனால் நவீன தொழில்நுட்ப முறைமை பின்பற்றப்படுகின்றது. 'THURU' மொபைல் அப்ளிகேஷனினூடாக இந்தத் திட்டம் எந்தளவு வெற்றிகரமானதாக அமைந்துள்ளது என்பதை கண்டறியும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.



# யாழ்ப்பாண நகரில் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பு




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண நகரில் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

நேற்றுக் காலைமுதல் யாழ்ப்பாணம், வைத்தியசாலை வீதியிலுள்ள கொட்டடி பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலைக்கு முன்பாக எரிவாயு சிலிண்டர்களுடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதன்போது, பொதுமக்கள் குடும்பப் பங்கிட்டு அட்டையுடன் வெயிலையும் பொருட்படுத்தாது நீண்ட வரிசையில் எரிவாயு சிலிண்டரை பெற்றுக்கொள்வதற்காக காத்திருந்ததுடன், அப்பகுதியில் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு 50 இலட்சம் ரூபா: கனடா புலம்பெயர்ந்த குடும்பம் ஒன்றினால் வழங்கிவைப்பு




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 50 இலட்சம் ரூபா பணம் கனடா நாட்டு புலம்பெயர்ந்த குடும்பம் ஒன்றினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் உயிரிழந்த சீலா சுகுமார் ஞாபகார்த்தமாக சுகுமார் குடும்பத்தினரால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.நந்தகுமார் கருத்து தெரிவிக்கையில், குறித்த உதவி வைத்தியசாலை நலன்புரி சேவைக்கு வழங்கப்பட்டு அதனூடாக இருதய சிகிச்சை பிரிவிற்கு தேவையான இயந்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்படும் - என்றார்.

இதன்போது யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கே.நந்தகுமார், பிரதிப் பணிப்பாளர்களான ச.சிறீபவானந்தராஜா மற்றும் சி.யமுனாநந்தா, கனடா - இலங்கை வர்த்தக அமைப்பின் தலைவர், குலா செல்லத்துரை உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு கனடா - இலங்கை வர்த்தக அமைப்பினால் ஊடக சந்திப்பொன்றும் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்றது.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வு




(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) அனுசரணையில் மன்னார் மாவட்ட பெண்கள் விழிப்புணர்வு சங்கத்தின் ஏற்பாட்டில் நிலைபேறான எதிர்காலத்திற்காக இன்றே பால்நிலை சமத்துவத்திற்காக போராடுவோம் எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (10) காலை 10 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் மற்றும் சிறப்பு விருந்தினராக மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறடோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தின் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலகங்களின் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணி திருமதி புராதனி, பிரதேச ரீதியாக செயல்படும் பெண்கள் குழுவினரும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் குடும்ப அடக்குமுறைகள் தொடர்பாகவும் அதிலிருந்து எவ்வாறு மீள்வது தொடர்பாகவும் தற்சார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டி எழுப்புவது தொடர்பாகவும் வருகை தந்த விருந்தினர்களால் சிறப்புரையாற்றப்பட்டதோடு, சிறுவர்கள் மற்றும் பெண்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சியில் 4 ஆயிரத்து 450 பெண் தலைமை குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி கிடைக்கவில்லை

## யாழ். பெண்கள் சமாச உறுப்பினர்கள் சுட்டிக்காட்டு



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி பிரதேசத்தில் 4,450 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இதுவரை அரசாங்கத்தின் வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லை - என யாழ். மாவட்ட பெண்கள் சமாச உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழில் இடம்பெற்ற அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை அணுகும் நிகழ்வின்போதே பெண்கள் சமாச உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

தென்மராட்சிப் பிரதேசத்தில் 5,583 பெண் தலைமைக் குடும்பங்கள் உள்ளபோதிலும் அதில் 1,133 குடும்பங்களுக்கே இதுவரை வாழ்வாதார உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 4,450 பெண் தலைமைக் குடும்பங்களுக்கு இன்னமும் அந்த வாழ்வாதார உதவி கிடைக்கப்பெறவில்லை. வாழ்வாதாரம் கிடைக்கப்பெற்றவர்களுக்கும் கடந்த 5 வருட காலப்பகுதியில்தான் அந்த உதவி கிடைக்கப்பெற்றுள்ளது.

தென்மராட்சியில் மாத்திரமே இவ்வளவு பெண் தலைமைக் குடும்பங்கள் உள்ளன என்றால் யாழ். மாவட்டத்தில் எவ்வளவு பெண் தலைமை வகிக்கும் குடும்பங்கள் இருப்பார்கள்? அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லை. அதற்கான வழிவகைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தர்களும் பெண் தலைமைக் குடும்பங்களை வெளிப்படுத்தி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# பொதுமக்களுக்கு திறமான சேவையை வழங்குங்கள்

## யாழ். மாவட்ட செயலர் மகேசன் தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறும் நாங்கள் பொதுமக்களுக்கான சேவையினை திறம்பட செயல்படுத்த வேண்டும் - என யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

"யாழ். மாவட்ட கிராம அலுவலர் அலுவலக முகாமைத்துவப் போட்டி - 2021" மாவட்ட மட்ட விருது வழங்கும் நிகழ்வு, மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. அந்நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறும் நாங்கள் பொதுமக்களுக்காக சரியான முறையில் செயற்பட வேண்டும். எனவே, தமது இலக்கினை தவறாது கடமையாற்ற வேண்டும். அத்தோடு எங்களைப் பற்றிய ஒரு சுய பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மக்களுடைய தேவைகளை பூர்த்திசெய்ய அவர்களுக்கு வழங்குகின்ற சேவைகளை உரிய வகையில் வழங்கி மக்களை திருப்திப்படுத்தி செயற்படவேண்டும்.

மக்களை திருப்திப்படுத்துவது என்பது மிகவும் இலகுவான காரியமல்ல. எனவே, பொதுமக்களுடன் இணைந்து இசைந்து செயற்பட வேண்டும். அத்தோடு பொதுமக்களை நீங்கள் திருப்திப்படுத்த முடியாது. திருப்திப்படுத்தாத பட்சத்தில் மக்கள் உங்கள் மீது பிழையான அபிப்பிராயங்களை கொண்டு விடுவார்கள்.

உங்களுடைய அலுவலகங்களை சரியான முறையில் பேண வேண்டும். பொதுமக்கள் இடையேயான உறவு முறையை சரியாக பேணுவதோடு, சக உத்தியோகத்தர்களுடனும் சரியாக பேணி உங்களுடைய திறமைகளை நாளாந்தம் வளப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அத்தோடு தங்களுடைய தொழில் வாண்மையினை நிரூபிக்க வேண்டும். ஒரு கிராமத்தில் நீங்கள் தலைமைத்துவப் பொறுப்பினை ஏற்று சமூக, பொருளாதார இதர செயற்பாடுகளுக்கு பொதுமக்களுக்கு நீங்கள் ஆலோசகராகவும் ஆலோசனையும் வழங்க வேண்டும்.

அத்தோடு அவர்களுக்கு தேவையான விடயங்களை உரிய முறையில் உரிய அணுகுமுறையோடு செயற்படுத்த வேண்டும். சவாலான ஒரு தொழில்தான் இந்த கிராம அலுவலர் தொழிலாகும்.

பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம் சரியாக இயங்க வேண்டுமானால் கிராம மட்டங்களில் கிராம அலுவலர்கள் வினைத்திறனாக செயற்பட்டால் மாத்திரமே மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் திறம்பட செயற்பட முடியும்.

அத்துடன், பொதுமக்களுக்கான சேவையை வழங்க முடியும். எனவே, கிராம சேவையாளர்களான நீங்கள் இந்த விடயத்தை கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும்.

# காணி சுவீகரிப்பு தொடர்பான கடிதங்களை வாபஸ் பெறுங்கள்

## வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம், கீரிமலையில் ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதிகளிலுள்ள காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்க வேண்டும் எனவும் காணி உரிமையாளர்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற வேண்டும் எனவும் நில அளவை திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு பிரதேச சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கில் நகுலேஸ்வரம் ஜே 226 கிராமசேவையாளர் பிரிவில் மக்களுடைய காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை இடம்பெற்றபோது மக்கள் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அது நிறுத்தப்பட்டது.

இந்த நிலைமையில் 2019ஆம் ஆண்டு அப்போதைய வடமாகாண ஆளுநராக இருந்த சுரேன் ராகவன் காணிகளை விடுவிப்பதாக எழுத்து மூலம் தெரிவித்திருந்தும் இன்றுவரை அந்த காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தேவைக்காக அளவீடு செய்ய முயற்சித்தபோது மீண்டும் மக்களால் போராட்டங்கள் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் விடுவிக்கப்படுவதாக கூறப்பட்ட மக்களின் நிலங்களும் நிலஅளவைத் திணைக்களத்தினால் சுவீகரிக்கப்படுவதாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள நிலையில் மக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த இடங்களில் வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஆலயங்கள் உட்பட மயானங்கள் போன்ற முக்கிய இடங்கள் உள்ள நிலையில் இவ்வாறு உதாசீனமாக மேற்கொள்ளப்படும் நிலஅளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகள் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என மக்கள் என்னிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதி காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்க வேண்டும். சம்பந்தப்படாத பொதுமக்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற வேண்டும் எனவும் நில அளவைத் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளேன் - என மேலும் தெரிவித்தார்.

# மாட்டுவண்டியில் மாதாந்த அமர்வுக்குச் சென்ற கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள்



(முல்லைத்தீவு நிருபர்)

எரிபொருள் பற்றாக்குறையைக் கண்டித்து முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் மாதாந்த சபை அமர்வுக்கு மாட்டுவண்டியில் சென்றனர்.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தில் முன்றலிலிருந்து இவ்வாறு சபை உறுப்பினர்கள் மூன்று மாட்டுவண்டிகளில் சபை அமர்வுக்குப் புறப்பட்டிருந்தனர்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன், உபதவிசாளர் ம.தொம்மைப்பிள்ளை, உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், தி.இரவீந்திரன், இ.கவாஸ்கர், க.தவராசா, இ.கஜீதரன், கி.சிவலிங்கம், வை.கெங்காதரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரான இ.ஜெகதீசன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்களான த.அமலன், மோ.விக்கினா ஆகியோர் இவ்வாறு மாட்டுவண்டிகளில் சபை அமர்விற்குச் சென்றிருந்தனர்.

UK Newspaper Viber Community

# லொஹான் ரத்வத்த இராஜாங்க அமைச்சராக நியமனம்



கிடங்குகள், கொள்கலன்கள், முற்றங்கள், துறைமுக விநியோகம் மற்றும் படகு மற்றும் கப்பல் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

லொஹான் ரத்வத்த நேற்று (10) காலை இராஜாங்க அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த இதற்கு முன்னர் சிறைச்சாலை முகாமைத்துவ மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சராக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அனுராதபுரம் சிறைச்சாலை வளாகத்தில் இடம்பெற்றதாக குறிப்பிடப்படும் கைதிகளை அச்சுறுத்தியமை உள்ளிட்ட சம்பவங்களை பொறுப்பேற்று அந்த பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையிலேயே அவர் மீண்டும் புதிய அமைச்சொன்றின் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.



பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட்டு, சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய சட்டமொன்று அதனை பிரதியீடு செய்யவேண்டுமென்ற தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் கடிதமொன்றை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமிழ் அரசியல் தலைமைகளிடம் நேற்று (10) கையளித்தார். இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், எம்.ஏ.சுமந்திரன், வி.இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், வேலு குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இந்திய கடற்றொழிலாளர்களுடன் கச்சதீவில் சிநேகபூர்வ பேச்சு

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் அறிவிப்பு

(யாழ் நிருபர்)

இந்திய கடற்றொழிலாளர்களுடன் கச்சதீவில் சிநேகபூர்வமான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.



கச்சதீவு செல்வதற்கான கோரிக்கை கடிதத்தை நேற்று (09) யாழ்ப்பாண மாவட்ட செயலாளருக்கு கொடுத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கச்சதீவுக்கு இந்திய கடற்றொழிலாளர்களும் வருகிறார்கள் என்பதால் அமைச்சர் மட்டத்தில் பேசி இந்திய கடற்றொழிலாளர்களுடன் சிநேகபூர்வமாக பேச்சுவார்த்தையை மேற்கொள்ள நாங்கள் தீர்மானித்தோம்.

அதனால் 10 கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை நாம் யாழ் மாவட்ட செயலாளரிடம் கையளித்துள்ளோம். கச்சதீவுக்கு செல்வதற்கான மட்டுப்பாடுகள் காணப்படுவதால்தான் இதனை கடற்படையிடம் கையளிப்பதாகவும் தொலைபேசி மூலம் எங்களுக்கு பதில் கிடைக்கும் - என்றார்.

அனுமதி கிடைக்கும் பட்சத்தில் கச்சதீவுக்கு சென்று இந்திய கடற்றொழிலாளர்களுடன் சிநேகபூர்வமான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த தயாராகவுள்ளோம்.

இந்திய கடற்றொழிலாளர்களும் இலங்கை கடற்றொழிலாளர்களும் பேச்சுவார்த்தை நடத்தி எந்தவித ஒரு முடிவையும் எட்டமுடியாது. இந்திய - இலங்கை கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு இருநாட்டு அமைச்சர்களும் பேசியே ஒரு முடிவுக்கு வரவேண்டும் - என்றார்.

# இலங்கை மீனவர்கள் ஐவர் இந்தியாவில் கைது!

(ஜூட் சமந்த)

மீன் பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற மீனவர்கள் ஐவர் இந்திய கடற்கரை பாதுகாப்பு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மீன்பிடித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

'அஜந்த புத்தா 02' என்ற பெயர்கொண்ட இந்த மீன்பிடிப் படகு நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகரொருவருக்கு சொந்தமானதாகும்.

கடந்த 09ஆம் திகதி இந்தியாவின் கன்யாகுமாரிமுனைக்கு அருகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இந்திய கடற்கரை பாதுகாப்பு அதிகாரிகளினால் மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்கள் ஐவரும் படகுடன் இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகம் வரை அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு இந்திய கடற்கரை பாதுகாப்பு அதிகாரிகளினால் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதி!

## அநுராதபுரத்தில் இரண்டு இடங்கள் சுற்றிவளைப்பு: ஐவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் விபசார விடுதியினை நடத்திவந்த இரு இடங்கள் அநுராதபுரம் பொலிஸாரினால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (09) இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம், யாழ்ப்பாண சந்தி மற்றும் அநுராதபுரம், கும்மிச்சங்குளம் பகுதியில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பின்போது சந்தேகத்தின் பேரில் ஐந்து பெண்கள் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதவிய, ராஜாங்கனை, வெலிகந்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 28, 31, 34, 36 மற்றும் 41 வயதுடைய ஐவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.







புனித ஜோசப்வாஸ் மன்றம் 26ஆவது வருடமாக ஒழுங்குசெய்த தவக்கால பெரிய சிலுவைப்பாதை, கொழும்பு மறை மாவட்டத்தின் துணை ஆயர் அன்டன் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. வழமையாக திறந்தவெளியில் நடத்தப்படும் இந்த பெரிய சிலுவைப்பாதையானது கொரோனா அச்சுறுதல் காரணமாக கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# குற்றம் தவிர்

Police Roundup

### பாதாளக் குழு உறுப்பினர் ஒருவர் கைது

வீட்டில் நுழைந்து வீட்டாரை தாக்கி சொத்துகளை சேதப்படுத்திய பாரதூரமான குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின் உறுப்பினர் ஒருவர், யாழ்ப்பாணம் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் (09) யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது, மோட்டார் சைக்கிள்களில் சென்று வீடொன்றுக்குள் அநாவசியமாக நுழைந்து வாள்களை பயன்படுத்தி வீட்டார்களை தாக்கி காயப்படுத்தி, சொத்துகளுக்கு சேதம் விளைவித்த பாரதூரமான குற்றச்செயல்களை புரியும் குழுவின் உறுப்பினர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து வாளொன்றும் மீட்கப்பட்டதாக யாழ்ப்பாணம் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளதுடன், சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

1. யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி மோட்டார்சைக்கிள் திருடியமை.
2. யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 06ஆம் திகதி நபரொருவரை வாளால் தாக்கி காயப்படுத்தியமை.
3. யாழ்ப்பாணம் பிரதேசத்தில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 23ஆம் திகதி நபரொருவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி காயங்களுக்கு உள்ளாக்கியமை.
4. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 23ஆம் திகதி கோப்பாய் பிரதேச வீடொன்றில் புகுந்து வீடு மற்றும் மோட்டார்சைக்கிள் இரண்டை சேதப்படுத்திவிட்டு இன்னுமொரு மோட்டார் சைக்கிளை திருடிச் சென்றமை

ஆகிய குற்றச்செயல்களுடன் இவர் தொடர்புடையர் என்பது சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### வாகனங்கள், தங்க ஆபரணங்கள் திருட்டு பிலியந்தலை

பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகுந்தர பிரதேசத்தில் பிலியந்தலை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது முச்சக்கரவண்டி, மோட்டார்சைக்கிள் மற்றும் தங்க ஆபரணங்களைத் திருடிய சம்பவம் தொடர்பில் தேடப்பட்டுவந்த சந்தேகநபரொருவர் 05 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

போகுந்தர பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு பிலியந்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றிலிருந்து 88 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணம் திருடியமை, முச்சக்கரவண்டி திருடியமை, பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோட்டார் சைக்கிளொன்று திருடியமை மற்றும் மிரிஹான பொலிஸ் பிரிவில் பதிவாகியிருந்த மோட்டார் சைக்கிள் திருட்டு ஆகிய சம்பவங்கள் தொடர்பில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதர்நாநா வத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 06 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதா வீதியில் பொரளை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட மேலுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 04 கிராம் 900 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கைதுசெய்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபரினால் அவரிடமிருந்த கூரிய ஆயுதத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கி காயப்படுத்தியுள்ளார். காயங்களுக்குள்ளான பொலிஸ் அதிகாரி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முவதொர உயன பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கோனஹேன முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 51 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு 14 மற்றும் 15 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23 மற்றும் 50 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

### புதையல் தோண்ட முயற்சித்த 08 பேர் கைது மொனராகலை

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவியகொல கந்த காட்டுப்பகுதியில் மொனராகலை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது புதையல் தோண்ட முயற்சித்த எட்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, புதையல் தோண்ட பயன்படுத்தப்படும் பொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தம்பகல்ல, கண்டி, பேராதெனிய மற்றும் நவ மெதகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்ட எட்டு பேரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். தம்பகல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### கோடாவுடன் ஒருவர் கைது பமுனுகம

பமுனுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுகபே பிரதேசத்தில் பமுனுகம பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 33 லீற்றர் 750 மில்லிலீற்றர் சட்டவிரோத மதுபானம் மற்றும் சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் 10 ஆயிரத்து 140 லீற்றர் கோடா (52 பீப்பாய்) என்பவற்றுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நுகபே, பமுனுகம பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### துப்பாக்கிகளுடன் சந்தேகநபர் கைது வீரகெட்டிய

பொலிஸ் விசேட அதிரடிப்படை தெற்கு மாகாண விசேட சுற்றிவளைப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் வீரகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெமுலக பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டு வீரகெட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மெதமுலன பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் வீரகெட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை - அமெரிக்கக் கூட்டாண்மை உரையாடலின் நான்காவது அமர்வு இம்மாத இறுதியில் நடத்த தீர்மானம்



இலங்கை - அமெரிக்கக் கூட்டாண்மை உரையாடலின் 4ஆவது அமர்வை இந்த மாத இறுதியில் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சங், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸை நேற்று முன்தினம் (09) கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் சந்தித்தார். இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தூதுவர் சங்கை அன்புடன் வரவேற்ற அமைச்சர் பீரிஸ், இலங்கையிலான அவரது பதவிக் காலத்தின்போது தூதுவருடன தொடர்ந்து பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகத் தெரிவித்தார். அமெரிக்காவை ஒரு முக்கிய பங்காளியாக இலங்கை கருதுவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் உயர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் அமெரிக்க நிர்வாகத்துடன் நெருக்கமாகச் செயற்படுவதற்குத் தயாராக இருப்பதாக மீண்டும் வலியுறுத்தினார்.


நாட்டின் சௌபாக்கியத்திற்கு பங்களிக்கும் வகையில், இலங்கையுடன் வலுவான அரசியல் மற்றும் பொருளாதார பங்காளித்துவத்தை மேம்படுத்துவதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக தூதுவர் சங் உறுதியளித்தார். இலங்கையுடனான உறவுகளை ஆழப்படுத்தவும், பரஸ்பர நன்மைகளை வழங்குவதற்காக ஆக்கபூர்வமான மற்றும் வளமான பங்காளியாக விளங்குவதற்கும் அமெரிக்கா விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான பரந்த அளவிலான கலந்துரையாடல்களில் ஈடுபட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் மற்றும் தூதுவர் சங், முக்கியமான உலகளாவிய சமகால பிரச்சினைகள் குறித்து கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர். நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவருகின்ற முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் பீரிஸ் அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கமளித்தார்.

இந்த மாத இறுதியில் இலங்கை - அமெரிக்கக் கூட்டாண்மை உரையாடலின் 4ஆவது அமர்வைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளை இரு தரப்பினரும் வரவேற்றனர்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் ஆகியவற்றின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# சீனாவின் வெளிநாட்டு அலுவல்கள் பிரதிப் பணிப்பாளருடன் இலங்கை துணைத் தூதுவர் சந்திப்பு



இலங்கை துணைத் தூதுவர் அனுர பெர்னாண்டோ அண்மையில் சீனாவின் ஷாங்காய் வெளிநாட்டு அலுவல்கள் அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஃபூ ஜிஹோங்கை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 65ஆவது ஆண்டு நிறைவையும் ரப்பர் - அரிசி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 70ஆவது ஆண்டு நிறைவையும் குறிக்கின்றது. சகோதர நகரங்களான ஷாங்காய் மற்றும் கொழும்பு பல துறைகளில் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளன.

இரு தரப்பினரும் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பின் சாத்தியக்கூறுகள் குறித்து கலந்துரையாடினர். தொற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கும் சீனாவின் பொருளாதார அபிவிருத்திக்கும் ஷாங்காய் முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்து துணைத் தூதுவர் குறிப்பிட்டார்.

சீனா துறைமுக நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான கொழும்பு துறைமுக நகர கூட்டுத் திட்டம் இரு நாடுகளுக்கும் இடையில் அதிக வாய்ப்புகளை உருவாக்கும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான நட்புறவுக்கான தனது உண்மையான விருப்பத்தை பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.



உடல்நலக் குறைவால் உயிரிழந்த இராணுவச் சிப்பாய் விவேக்கின் இறுதிக்கிரியைகள் அண்மையில் அச்சுவேலி இந்து மயானத்தில் இராணுவ மரபுகளுடன் நடைபெற்றன. பாதுகாப்புப் பதவிநிலைப் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின்கீழ், யாழ் பாதுகாப்புப் படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா சிரேஷ்ட அதிகாரியாக இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டார். ( வா. சுதர்ஸ்சன் )

# ஜித்தாவில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சாவடி




சவூதி அரேபிய இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவர் பக்கீர் மொஹிதீன் அம்சா, சவூதி அரேபிய இராச்சியத்தின் ஜித்தாவிலுள்ள வி.எவ்.எஸ். விசா விண்ணப்ப நிலையத்தில் அண்மையில் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புச் சாவடியை திறந்துவைத்தார்.

இந்தச் சாவடி இரண்டு கவர்ச்சிகரமான தொகுதிகளைக் கொண்டிருந்ததுடன், அவற்றில் ஒன்று அழகான இலங்கை வனவிலங்குகளைக் காட்சிப்படுத்துகின்ற அதேவேளை, மற்றொன்று இலங்கையின் மணல் நிறைந்த கடற்கரைகளைக் காட்சிப்படுத்துகின்றது. சுற்றுலா விளம்பர வீடியோக்களும் திரையிடப்பட்டன. இந்த விளம்பரச் சாவடியானது தமது விசா மற்றும் கடவுச்சீட்டுத் சேவைகளுக்காக வி.எவ்.எஸ். நிலையத்திற்கு வருகை தருபவர்களுக்கு இலங்கை குறித்த பயனுள்ள பயணத் தகவல்களை வழங்கும்.

இலங்கை சுற்றுலாவிற்கு ஆதரவான சாவடியை ஏற்பாடு செய்தமைக்காக வி.எவ்.எஸ். அலுவலகத்திற்குதூதுவர் நன்றிகளைத் தெரிவித்தார். இந்த நிகழ்வில் வி.எவ்.எஸ். நிலையத்தின் பிரதிப் பொது முகாமையாளர் ஹொசின் பாலெக், செயற்பாட்டு முகாமையாளர் பஸ்மில் காசிம், (வி.எவ்.எஸ். நிலையம்), வி.எவ்.எஸ். நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் இலங்கைத் தூதரகத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

2020 மற்றும் 2021இற்கு இடையில், கொவிட்-19 உடன் தொடர்புடைய பாதகமான விளைவுகளின் காரணமாக 2019 உடன் ஒப்பிடும்போது சவூதி அரேபியாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், கொவிட் தொடர்பான தடைகளை இலங்கை தளர்த்தியுள்ளதால், 2022இன் தொடக்கத்திலிருந்து சாதகமான வளர்ச்சி காணப்பட்டது



அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்கர்களை இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹ_ல்ட்டன் கண்டியில் சந்தித்தார். ஐக்கிய இராச்சியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான மக்களிடையேயான தொடர்புகளின் முக்கியத்துவம் , மதம் அல்லது நம்பிக்கையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது உட்பட்ட விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

# தேசிய பாடசாலைகள் குறித்து முன்னுக்குப் பின் முரண்பாடான தகவல்கள்

**எம்.எஸ்.அமீர் ஹுசைன்**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் 08 மகளிர் பாடசாலைகளும் 02 கலவன் பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டன. இந்தப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தியதன் பின்னர் அவற்றின் பெயர்ப் பலகைகளை சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக திரைநீக்கம் செய்யப்பட்டதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 10 தேசிய பாடசாலைகளுடன் நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 395ஆக உயர்வடைந்து விட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அவ்வாறு தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளாக கல்முனை மஹ்மூத் பெண்கள் பாடசாலை, ஹட்டன் கெப்ரியல் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை மெதடிஸ் உயர் பெண்கள் பாடசாலை உட்பட 10 பாடசாலைகள் உள்ளடங்குகின்றன.

நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்துக்கமைய இவ்வாறு தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதற்காக அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்துக்கு கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன, கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டதோடு, குறித்த பாடசாலைகளின் அதிபர்களும் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இவ்வாறு குறித்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்டதாக இந்த நிகழ்வு குறித்த பிரதமர் அலுவலக செய்தி அறிக்கை தெரிவிக்கின்றது.

எவ்வாறாயினும், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படுகின்றபோது அவை நேரடியாக மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பின்கீழ் வருவதாக மக்கள் கருதுகின்றனர். மாகாண பாடசாலைகள் அந்தந்த வலயக்கல்விப் பணிமனைகள் ஊடாக கவனிக்கப்பட்டு வருகின்ற அதேநேரம், தேசிய பாடசாலைகள் என்ற வரையறைக்குள் வருகின்றபோது குறித்த தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள கல்வியமைச்சின் பொறுப்பாக மாறுகின்றது.

ஆசிரிய நியமனங்கள், இடமாற்றம், பௌதீக வளப் பகிர்வு உட்பட அனைத்து விதமான கற்றல் மற்றும் கற்பித்தல் உதவிகளும் கல்வியமைச்சின் கீழ் வழங்கப்படவேண்டிய உதவிகளாக மாறுகின்றன. அத்துடன், இந்த உதவிகளை ஏற்கனவே மாகாண சபையின் கீழ் இருந்து வலயக்கல்விப் பணிமனையின் மூலம் பெற்றுவந்தாலும் தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது என்ற அறிவித்தலுடன் அந்த உதவிகள் துண்டிக்கப்பட்டதாக மாறுகின்றன.

ஏற்கனவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ''நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கைத் திட்டத்துக்கமைய, 1000 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டதாக அறிவித்தல் செய்யப்பட்டன. அதன்படி நாட்டில் பல பிரதேசங்களில் மகா வித்தியாலயங்களாகவும் மத்திய கல்லூரிகளாகவும் இருந்த பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

ஆனாலும், அவற்றுக்கான எந்தவிதமான பௌதீக வளங்களும் இதுவரையில் மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. அண்மையில் 1000 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னர் அந்த வரையறைக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு 10 இலட்சம் ரூபா பாடசாலையை அலங்கரித்து அழகுபடுத்தவும், மேலும் 10 இலட்சம் ரூபாவுக்கான உபகரண உதவிகளாக டுப்ளோ இயந்திரம், பொட்டோகொப்பி இயந்திரம், பிரிண்டர் மற்றும் சில விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனாலும் அவை உண்மையாகவே தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டதற்கான எந்தவிதமான எழுத்துமூல ஆவணங்களும் அல்லது அறிவித்தல்களும் வழங்கப்பட்டதாக இல்லை. ஆனாலும், குறித்த மத்திய கல்லூரிகளாக இருந்த அல்லது மகா வித்தியாலயங்களாக இருந்த பாடசாலைகள் 1000 தேசிய பாடசாலைகள் திட்டத்துக்குள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன என்ற அரசியல்வாதிகளின் அறிவித்தலின் பின்னர் பெயர்ப்பலகையில் தேசிய பாடசாலை என்று பெயர் மாற்றத்தை செய்துகொண்டுள்ளன.

ஏற்கனவே நாட்டில் க.பொ.த. உயர்தரத்துக்கான அனைத்து பிரிவுகளும் உள்ள பாடசாலைகள் 1AB பாடசாலைகளாகவும் 1C, Type 2, Type 3 என்ற அடிப்படையில் நான்கு வகையான பாடசாலை வகைகள் உள்ளன. இதற்குள் தேசிய பாடசாலைகளாக இருந்தவை நேரடியாக மத்திய அரசாங்கத்தின் கல்வியமைச்சின் உதவிகளையும் பௌதீக வளங்களையும் பெற்றுவந்த பாடசாலைகளாகும். அத்துடன், இவ்வாறான ஒரு தேசிய பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் செல்வதாக இருந்தால் இன்னுமொரு தேசிய பாடசாலைக்கே இடமாற்றம் பெறவேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கின்றது.

இவ்வாறான ஒரு நிலையிலே 2021ஆம் ஆண்டு 1000 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டன என்ற செய்தி, குறிப்பிட்ட சில பாடசாலை சமூகத்துக்கு ஒருவிதமான மகிழ்ச்சிக்குரிய தகவலாக இருந்தன. ஆனாலும், அவை வெறும் வாய்வழி அறிவித்தலே தவிர இதுவரையில் எந்தவிதமான உத்தரவாத அறிவித்தலும் உத்தியோகபூர்வமாக வழங்கப்படவில்லை என்பதாக அவ்வாறான தேசிய பாடசாலை அந்தஸ்தை பெற்ற கல்லூரிகளின் அதிபர்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் மற்றுமொரு புதிய திட்டமும் முன்னெடுக்கப்படவிருப்பதாக அறிய முடிகின்றது. கொத்தணி பாடசாலை என்ற ஒரு திட்டத்தை அறிமுகம் செய்து அந்தத் திட்டம் மூலம் இவ்வாறாக தேசிய பாடசாலைகளின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள சிறிய பாடசாலைகளை இணைத்து நிர்வாக நடவடிக்கைகளை கவனிக்கும் திட்டத்தை முன்னெடுக்கவிருப்பதாக அறிவிக்கப் பட்டதாகவும் சப்ரகமுவ மாகாண பாடசாலைகளைச் சேர்ந்த சில அதிபர்கள் கூறுகின்றனர். ஆனாலும் மாகாண ஆளுநர் இவ்வாறான திட்டம் பற்றி கலந்துரையாடியுள்ளபோதும் மாகாண கல்விப் பணிப்பாளர்களால் அதற்கான பூரண சம்மதம் தெரிவிக்கப்பட்டதாக அறிய முடியவில்லை.

எதுவாக இருந்தாலும் தற்போதைய நிலையில் தேசிய பாடசாலைகள் பற்றிய சித்தாந்தம் தொடர்பாக பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் கல்வி சமூகத்துக்கு பாரியதொரு குழப்ப நிலை இருந்துவருகின்றது. அதனால் இந்த குழப்பத்தை போக்குவதற்காக கல்வியமைச்சு முதலில் ஏற்கனவே 1000 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்துவது என்ற ஜனாதிபதியின் திட்டத்துக்கமைய அதற்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு உரிய முறையில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தியதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் கடிதங்களை வழங்க வேண்டும். அதன்பின்னர் இந்தப் பாடசாலைகளை கண்காணிப்பது மாகாண சபையா மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சா என்பது தொடர்பாக தெளிவை ஏற்படுத்த வேண்டும். அத்துடன், அவ்வாறு தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்படும் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீக வளங்களை உரிய முறையில் பெற்றுக் கொடுப்பதற்கு கல்வியமைச்சு விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆசிரிய பற்றாக்குறைக்கான தீர்வு, இடப் பிரச்சினைக்கான தீர்வு உட்பட பின்தங்கிய நிலையிலுள்ள பாடசாலைகளை சகல வசதிகளையும்கொண்ட பாடசாலைகளாக அபிவிருத்திசெய்ய போதுமான நடவடிக்கைளை எடுக்கவேண்டும். நகர்ப்புறங்களிலுள்ள பிரதான பாடசாலைகள் எல்லா வசதிகளுடனும் இயங்கி வருகின்ற அதேநேரம், கிராமப்புற பாடசாலைகள் போதுமான வசதிகள் இல்லாமலும் உரிய பாடங்களை போதிக்க தேவையான ஆசிரியர்கள் இல்லாமலும் சிரமங்களுக்கு மத்தியில் கல்வியை முன்னெடுக்கின்ற நிலைமைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

கல்வித்துறையில் தொடரும் இவ்வாறான பாரபட்சங்கள் சகலருக்கும் சமமான முறையில் கல்வி வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற மக்களது கல்வி உரிமையை மீறும் செயலாகும்.

LK Newspapers Viber Community

# கிழக்கு மாகாணத்தின் 1,272 குழந்தைகள் சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களத்தில்





மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிறுவர்களுக்கு வளமான எதிர்காலத்தினை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் துறைசார் திணைக்கள அதிகாரிகளுடனான விசேட செயலமர்வு நேற்று (10) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் திருமதி. நிஸ்வானி றிபாஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜெ.ஜெதா முரளிதரன், மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இதன்போது சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களத்தின் கிழக்கு மாகாண ஆணையாளர் நிஸ்வானி றிபாஸ் கருத்து தெரிவிக்கையில், அநாதைகள், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான சேவையினை ஆற்றிவருகின்ற சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களம் திருகோணமலையில் தலைமைக் காரியாலயத்தினையும், கிழக்கு மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்களிலும் 13 உப காரியாலயங்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இதனூடாக கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து 272 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இவற்றில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான 875 சிறுவர்கள் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் இம்மாகாணத்தில் காணப்படும் 53 சிறுவர் அபிவிருத்தி இல்லங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 31 இல்லங்கள் காணப்படுகின்றன.

இவற்றில் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றுக்குள்ளான சிறுவர்கள் அதிகம் காணப்படுகின்றனர். மேலும் குற்றமிழைத்த பிள்ளைகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் கருணாகரன் கருத்து தெரிவிக்கையில், பெரியோர்களால் சிறுவர்கள் பாதிக்கப்படுவதாக சிறுவர் பராமரிப்பு, பொலிஸ் திணைக்களம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் கடந்தகால அறிக்கைகள் மூலம் நாம் அறிந்துவருகின்றோம். இது ஒரு ஆரோக்கியமான நிலையல்ல. அரசின் கொள்கையின் அடிப்படையில் சிறுவர் பராமரிப்புக்கு மிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. எனவே அனைவரும் ஒன்றிணைந்து இம்மாவட்டத்தில் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் அவர்களை சாதாரண சூழ்நிலையில் வாழவைக்கவேண்டும். அதற்காக துறைசார்ந்த அனைவரினதும் சிந்தனைகளையும் ஒன்று செலுத்தி செயற்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்களப் பிரிவினர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# விடுதலைப்புலிகளால் புதைத்துவைக்கப்பட்ட ஆவணங்கள் திருகோணமலையில் மீட்பு

*(திருகோணமலை நிருபர்)*



திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை பகுதியில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சந்தேகத்துக்கிடமான ஆவணங்கள் சில, நேற்று முன்தினம் (09) மீட்கப்பட்டுள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இப்புத்தகங்கள், விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதில் விடுதலைப் புலிகளால் பாவிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள், நிர்வாகம் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் புத்தகங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர், நிலக்கடலை பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக நிலத்தை பண்படுத்திக் கொண்டிருந்தபோது இந்த ஆவணங்கள் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து, ஈச்சிலம்பற்று பொலிஸாருக்கு காணி உரிமையாளர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து 'ஒன்றுமை ஒன்றியம்' ஒன்றை அமைக்கப்போறதாக யாழ். எம்.பி. விக்கினேஸ்வரன் சொன்னாரல்லோ கொழும்புக்குள முடங்கி இருந்த இவர 2013 வடமாகாண முதலமைச்சராக ஆக்கின கூட்டமைப்பு சம்மந்தர் எலுவா... அவருக்கே ஆப்புவைச்சித்து தனிக்கட்சி அமைத்த நன்றிகெட்ட விக்கியரு. இப்ப ஒற்றுமைய பற்றி கதைக்கிறாரு. அட தம்பி முதலில உனக்கு யோக்கியம் இருந்தா உன்ன அரசியலுக்கு இழுத்துவந்த தமிழ்தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து ஒற்றுமைய காட்டிப்போட்டு இப்பியான கதய சொல்லு! சும்மா சனத்த பேய்காட்டவேணாம்.. விக்கி..

# மனைவியின் கண் முன்னால் கணவன் தூக்கிட்டு தற்கொலை

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலம்பிட்டி திகிலிவட்டை பிரதேசத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான பத்மநாதன் றோந்திரா என்பவர் நேற்று முன்தினம் (09) தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் அண்மையில் திருமணமானவர் என்பதுடன், கணவன் மனைவிக்கிடையில் குடும்பத்தகராறு ஏற்பட்டு வந்ததாகவும் சம்பவ தினத்தன்று வீட்டின் அறையினுள் தனது மனைவியை துணியினால் கட்டி வைத்துவிட்டு, தனது மனைவிக்கு முன்னால் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் க.ஜீவராணியின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்க டொலர் தட்டுப்பாட்டை வாய்ப்பாகப் பயன்படுத்தலாம்

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் யோசனை

*(கிண்ணியா நிருபர்)*

நாட்டில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடியை உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று (10) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர்,

இன்று நாட்டில் டொலர் தட்டுப்பாடு நிலவுகிறது. இதை மறைப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இந்த டொலர் நெருக்கடியை சந்தர்ப்பமாக பயன்படுத்தி உள்ளூர் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். வெளிநாட்டு பொருட்களை நம் நாட்டுக்கு இறக்குமதிசெய்ய எவ்வளவோ டொலர்களை செலவழித்துள்ளோம். இதன்



விளைவாக, எங்கள் உள்ளூர் தயாரிப்புகள் பல வீழ்ச்சி கண்டன என்பதை இப்போது நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நம் நாட்டு பழ மரங்கள் அழுகும்போது, வெளிநாடுகளில் இருந்து வரும் ஆப்பிள், ஆரஞ்சுப் பழங்களை பார்த்துக் கொண்டிருக்கிறோம். நம் நாட்டில் விளையும் பச்சைப்பயறு மற்றும் கௌபியை விற்க முடியாமல், சேனை விவசாயிகள் தவித்து வருகின்றனர். அப்படி இருந்தும் பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. இப்போதே இந்த முறையை நிறுத்திவிட்டு, இந்த டொலர் நெருக்கடியை நமது உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று அவர் மேலும் கூறினார்.

# உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் திருமலையில் சந்தேகநபரொருவர் கைது

*(திருகோணமலை நிருபர்)*

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்குளம் பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் இலுப்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த நபரின் வீட்டைச் சோதனையிட்டபோது, அவரின் வீட்டில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி கைப்பற்றப்பட்டதெனவும் குறித்த நபரை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்ததுடன், சம்பவம் தொடர்பில் நிலாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிகார துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் ஆயுதம் மக்கள் கைகளில்தான் இருக்கின்றது

## கிழக்கின் கேடயம் தலைவர் சபீஸ்

*(மாளிகைக்காடு நிருபர்)*

ஆளுமையுள்ளோர், அறிஞர்கள், ஞானிகள் மீது இல்லாததை இட்டுக்கட்டி ஓரங்கட்ட முயற்சிக்கும் பொறாமையாளர்களின் கெடுதிகள், இமாம் புஹாரி ரஹ்மதுல்லாஹ்வையும் கடுமையாகப் பாதித்திருந்ததாக அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் தலைவரும், ஜும்ஆப் பெரியபள்ளிவாசல் தலைவருமான "கிழக்கின் கேடயம்" எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஜும்ஆப் பெரிய பள்ளி வாசலில் உலமாக்கள் மற்றும் மக்கள் திரளோடு நடந்த 64ஆவது ஸஹிஹுல் புஹாரி தமாம் வைபவத்தில் விசேட உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார். இங்கு பேசிய அவர் குறிப்பிட்டதாவது,

புனித அல்குர்ஆனுக்கு அடுத்ததாக மதிக்கப்படும் ஸஹீஹுல் புஹாரி ஹதீஸ் கிரந்தத்தின் தமாம் நிகழ்வில் பங்கேற்ற நாம் அனைவரும் நற்பேறாளர்கள்தான். மிகப்பெரிய ஞானத்திரவியமாக மதிக்கப்படும் இமாம் புஹாரி, அற்புத ஆற்றலுள்ளவர். பத்து வயதில் குர்ஆனை மனனம் செய்த அவர், பதினோராவது வயதில் ஹதீஸ்கலையில் தேர்ச்சியடைந்தார். இத்துறைகளோடு மட்டும் அவர் தனது அறிவை மட்டுப்படுத்தவில்லை. பிக்ஹ்கலை (சட்டநுட்பம்) நபியவர்களின் ஹதீஸ்களை அறிவிப்புச் செய்த ராவிகள் பற்றிய வரலாற்றுத் தெளிவும் அவருக்கிருந்தது.

ஸஹீஹைன் என்றழைக்கப்படும் ஆறு புனித ஹதீஸ் கிரந்தங்களில், ஸஹீ ஹுல் முஸ்லிம் மற்றும் ஜாமிஉத்திர் மிதி ஆகிய கிரந்தங்களின் ஆசிரியர்கள் இமாம் புஹாரியின் மாணவர்களே. இவ்வளவு ஆற்றலுள்ள ஒரு புஹாரி ரஹ்மத்துல்லாஹ்வை கண்டு அருகில் இருந்த சக





அறிஞர்கள் பொறாமைகொண்டு அவரை அழித்துவிடும் பணியில் இறங்கினார்கள். அதன் நோக்கில், யூத அறிஞர்கள் சிலரை வைத்து புஹாரி ரஹ்மத்துல்லாஹ்வை கேள்வி கேட்டனர்.

குர்ஆன் படைக்கப்பட்டதா? அருளப்பட்டதா? என்பதே அக்கேள்வியாகும். அருளப்பட்டதென இமாம் பதிலளித்தபோது, அருளப்பட்டதை எப்படிப்பார்த்து ஓத முடியுமென மறுகேள்வியையும் யூதர்கள் கேட்டனர். உங்கள் பார்வையும், குரலுமே படைக்கப்பட்டதென இமாம் புஹாரி பதிலளித்தார்.

இமாமைப் பழித்தீர்க்க இந்தப் பதிலை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய சக அறிஞர்கள், குர்ஆன் படைக்கப்பட்டதாக இமாம் புஹாரி கூறியதாக இல்லாததை இட்டுக்கட்டினர். இதனால், ஏராளமான வலிகளைத் தாங்கும் துயரத்துக்கு உள்ளானவர் இமாம் புஹாரி. இருந்தாலும் சோரம்போகாத குணத்தால் குன்றாக உயர்ந்து நின்றவர் இமாம்.

அரசனுடைய மகனுக்கு அறிவூட்ட தனது இல்லத்துக்கு வருமாறு அழைத்தபோதும், அறிவு காலடிக்குச் செல்லாது, கால் மடித்துக்கற்க வேண்டிய ஒன்றெனக்கூறி அரசனின் அழைப்பையும் நிராகரித்த, நிகரில்லாத நிறைகுடமாகவே இமாம் புஹாரி திகழ்ந்தார். ஹிஜ்ரி 250 களில் இடம்பெற்ற இந்த அபாண்டம் சுமத்தும் கபடத்தனமும் அரசனின் குழந்தைகளுக்கு அடிமையாக இருக்க பணிக்கும் அதிகார துஷ்பிரயோகங்களும் உலகம் அழியும்வரை நீடிக்காமல் தடுக்கும் ஆயுதம் மக்கள் கைகளில்தான் இருக்கின்றது. நீங்கள் காதில் கேட்பவைகளை நம்பாமல் உண்மைகளை தேடி நம்புபவர்களாகவும் அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பவர்களாகவும் மாறினால் போதும்.

இவ்வாறானவர்கள் தடமே இல்லாமல் போய்விடுவார்கள் எனவும் தெரிவித்தார். இந்நிகழ்வின் இறுதியில் கந்தூரி அன்னதானமும் நடைபெற்றது.

# சித்திரப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ், பரிசுகள் அனுப்பிவைப்பு

*(வெல்லாவெளி நிருபர்)*

உலக மலேரியா தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சித்திரப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்றது.



உலக மலேரியா தினத்தை முன்னிட்டு கடந்த ஆண்டு (2021) சித்திரை மாதம் 25ஆம் திகதி மலேரியா தடை இயக்க தலைமைக்காரியாலயத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு பிராந்திய மலேரியா தடை இயக்க அலுவலகத்தினால் சித்திரப்போட்டி நடத்தப்பட்டது.

இச்சித்திரப்போட்டியானது, பிராந்திய மலேரியா தடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ஈ.சிறிநாத் தலைமையில் நடைபெற்ற போட்டியில் 598 போட்டியாளர்கள் கலந்துகொண்டார்கள். இச்சித்திரப் போட்டியானது, வயது 11முதல் 15வரையுள்ள மாணவர்களே கலந்துகொண்டார்கள்.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களையும், பரிசில்களையும் மட்டக்களப்பு பிராந்திய தடை இயக்க அலுவலகத்தால் பொறுப்பான பாடசாலைகளுக்கு சென்று தற்போது வழங்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களை அதிபர் இராசதுரை பாஸ்கரிடம் நேற்று (10) வழங்கிவைத்தார்.

# மட்டக்களப்பு கல்வி வலயத்தில் பரீட்சை வினாத்தாள் அச்சிட்டதில் குழப்பநிலை;

## விடயத்தை பொறுப்பேற்பது யாரென இலங்கை ஆசிரியர் சங்க மட்டு. மாவட்ட செயலர் கேள்வி

(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு கல்வி வலயப் பிரிவில் நடைபெற்று வரும் பரீட்சைக்கு வினாத்தாள் அச்சிட்டதில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதுடன், அரச பணமும் வீண்விரயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விடயத்தை பொறுப்பேற்பது யார்? என இலங்கை அரசாங்க ஆசிரியர்களின் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று (10) அவரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கல்வி வலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பரீட்சையில் இணைந்த கணிதம் பகுதி 2 இற்கான வினாத்தாளில் பகுதி 2 இற்கான தலைப்புடன் பகுதி 1 இற்கான வினாக்கள் அச்சிடப்பட்டு அனைத்து பாடசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ் வினாத்தாளானது சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பே தயாரிக்கப்பட்டு வலயக்கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இருந்தும் இன்று இவ்வாறான ஒரு விடயம் நடைபெற்றுள்ளது.




நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் A4 - வெள்ளைத் தாளானது தட்டுப்பாடாக காணப்படும் சூழலில் இன்றைய விடயம் அரச நிதி முறைகேடான விதத்தில் கையாளப்பட்டுள்ளது என்பதற்கு சான்றாகும்.

இவ்வாறு முறைகேடாக பயன்படுத்தப்பட்ட அரச நிதியினை ஈடுசெய்யும் பொறுப்பினை யார் ஏற்றுக் கொள்வது? வலயக்கல்வி பணிப்பாளரா? கல்வி அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளரா? இதனால் பாடசாலை மட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலையில் பரீட்சை நடைபெறுகின்றதா என மேற்பார்வை செய்யவென மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தால் வருகை தந்த அதிகாரியொருவர் தாங்கள் யார் என அறிமுகம் செய்யாமல் வந்த வேளையில், பரீட்சை எழுதும் மாணவர்கள் தங்களுக்கு வணக்கம் தெரிவிக்கவில்லை என பரீட்சை எழுதும் மாணவர்கள் மனவுளைச்சலுக்கு உள்ளாகும் விதத்தில் வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றார்.

இவ்வாறான விடயம் மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இவ்விடயங்கள் தொடர்பாக ஆசிரியர், மாணவர்களில் அக்கறையுள்ள சங்கம் என்ற ரீதியில் முறைப்பாடு ஒன்றை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு எதிராக பதிவுசெய்ய இருக்கின்றோம்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களை எமது தொழிற்சங்கம் கண்டிக்கின்றது என செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூதூரில் ரிப்பர் வாகனம் விபத்து



(மூதூர் நிருபர்)

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள மூதூர் பொழுதுபோக்கு பூங்காவிற்கு அருகாமையில் டிப்பர் வாகனம் ஒன்று பாதையை விட்டு தடம்புரண்டு குடை சாய்ந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (09) மாலை இடம்பெற்றுள்ளது. இதன்போது வாகனச் சாரதி சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்த்தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மஹதீர் மொஹமட், புடின் எனக்கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் செந்தில் - கவுண்டமணியாக மாறியுள்ளனர்

### நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் சாடல்



(அப்துல்சலாம் யாசீம்)

மஹதீர் மொஹமட், புடின் எனக்கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் செந்தில் கவுண்டமணியாக மாறியுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நல்லாட்சி அரசில் ஓரிரு தினங்கள் மின்வெட்டு ஏற்பட்டபோது மஹிந்த ராஜபக்ஷ கூறினார். முடியாவிட்டால் எங்களிடம் தாருங்கள் எங்கள் ஆட்சியில் பத்து நிமிடமேனும் மின்சாரம் தடைப்படாது என. இன்று ஏழரை மணி நேரம் நாடு இருளில்.

ஜனாதிபதி கூறினார் 5ஆம் திகதிக்கு பின் மின்வெட்டு இல்லையென. புதிய எரிசக்தி அமைச்சர் கூறுகிறார் இரண்டு மூன்று நாட்களில் நிலைமை சீராகும் என, ஆனால் இன்றுவரை மின்வெட்டு அமுல்படுத்தப்படுகிறது. இன்னொரு பக்கம் நிதி அமைச்சர் வீதி மின்விளக்குகளை அணைக்குமாறு கூறுகிறார். இவர்களின் பேச்சை கேட்டு மக்களை போன்று நானும் குழப்பத்தில் உள்ளேன்.

இந்த வரிசைகள், மின்வெட்டு அனைத்துக்கும் உண்மையான காரணம் டொலர் தட்டுப்பாடே. எரிபொருள் இல்லை என மக்கள் வீதியில் இறங்கியவுடன் இருக்கும் டொலர்களை கொண்டு எரிபொருள் கொள்வனவு செய்தால் எரிவாயு கொள்வனவு செய்ய டொலர் இல்லை. உடன் எரிவாயு வரிசை தொடங்கும்.

இதை சரிசெய்ய எரிவாயு கொள்வனவு செய்தால் சீமெந்து, மருந்துபொருட்கள் வாங்க பணமில்லை. இதை சரிசெய்ய போனால் மீண்டும் எரிபொருள் வரிசை என இது தொடர்ந்து கொண்டே இருக்கும்.

டொலர் தட்டுப்பாட்டால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் எச்சரித்து இருந்தார். அன்று இப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அவ்வாறு ஏற்படாது என மறுத்திருந்தார்.

இப்பொழுது நாம் கூறிய அனைத்தும் நடந்தவுடன் கடந்த நல்லாட்சி அரசின் நடவடிக்கையாலேயே டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டதாக ஜனாதிபதியும் அமைச்சர்களும் கூறுகின்றனர்.

1994ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுனவை சேர்ந்தவர்களே நாட்டின் ஜனாதிபதியாக இருந்தனர். அதிலும் 18, 20ஆம் திருத்தங்கள் என சர்வாதிகாரமும் கொண்ட ஜனாதிபதியாக இருந்து இவர்கள் சிங்கப்பூராக மாற்றிய நாட்டை 2001ஆம் ஆண்டு இரண்டு வருடங்களும் 2015இல் நான்கு வருடங்களும் நாடாளுமன்ற அதிகாரத்தை கொண்டு நாங்கள் இந்த நிலைக்கு கொண்டு வந்தோம் என இவர்கள் கூறுகிறார்கள்.

வந்தது என்னமோ மஹதீர் மொகமட், லீ குவான், புடின் என கூறி ஆனால் இன்று அவர் மாறியிருப்பதோ கவுண்டமணி செந்தில் போன்று என தெரிவித்தார்.

## இலங்கையில் இனி பாற்சோறும் கட்டசம்பலுமே மிஞ்சும்

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு

(வெல்லாவெளி நிருபர்)

நாட்டு மக்களை கல்லெறிந்து கொலைசெய்யும் ஒன்றாகவே அமைச்சர் பெசில் ராஜபக்ஷ வெளியிட்டுள்ள 367 அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை கட்டுப்படுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தல் உள்ளது. இனி இலங்கையில் பாற்சோறும் கட்டச்சம்பலுமே மிச்சும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சி ஊடகசெயலாளரும், இலங்கை தமிழரசுக் கட்சி பட்டிருப்பு தொகுதி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

நாட்டில் 367 அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு இறக்குமதி தடைவிதிப்பு பற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

புதிய அரசாங்கத்தின் நிதி அமைச்சர் அத்தியாவசியமற்ற பொருட்கள் என 367, பொருட்களை இனம்கண்டு அதனை இறக்குமதி செய்ய தடைவிதித்துள்ளார். அவருக்கு அத்தியாவசியமாக இந்தப் பட்டியலில் உள்ள பொருட்கள் காணப்பட்டாலும் இந்தப் பட்டியலில் உள்ள பல பொருட்கள் இலங்கை மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களாகவே உள்ளன. சோப்பு, வாகன டயர்கள் என்பனவும் அதனை பாவிப்பவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களாகவே தென்படும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்றே திண்டாடும் இந்த அரசாங்கம் பொருட்களின் விலைகளை கூட்டியும் 367 பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்துவதும் கறுப்பு பணம் வைத்திருப்போருக்கும் இடைத்தரகர்களுக்கும், இரகசியமாக வெளிநாட்டு பொருட்களை கடத்துவோருக்கும் ஊக்குவிக்கும் ஒரு செயலாகவே இந்த தடையை பார்க்கவேண்டியுள்ளது. இதனால் இந்த அரசாங்கத்திற்கு வாக்களித்த 69 இலட்ச மக்களின் தலையில் அரசாங்கம் மிளகாயை அரைத்து மக்களின் எண்ணங்களையும், கண்ணையும் மூடியுள்ளது. இதனால் அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள். தங்களின் ஆட்சியை நல்லாட்சியாக நினைக்கும் கோட்டாபய தலைமையிலான அரசாங்கம் ரணில்-மைத்ரியால் உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்திடம் பாடம் படிக்க வேண்டும். எதிர்வரும் காலத்தில் தேர்தல் நடைபெற்றால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வாக்களிக்கும் தபால்வாக்கில் பாரிய சரிவுகளை சந்திக்கும் என மக்கள் தெட்டத் தெளிவாக கருத்து தெரிவிக்கின்றார்கள். குடும்ப ஆட்சியை கவிழ்ப்பதில் மக்கள் தயாராக இருக்கின்றார்கள்.

எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரம் இல்லாமல் நாடு இருண்டநிலை, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், விவசாயிகளுக்கு யூரியா உரமில்லை, மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு, பேக்கரி உரிமையாளர்கள் பேக்கரியை மூடும்நிலை, பால்மா பொருட்களின் தட்டுப்பாடு, கர்ப்பிணித்தாய்மார்களுக்கு திரிபோஷா தட்டுப்பாடு, கட்டுப்பாட்டுவிலை இல்லாமல் அதிக விலைக்கு விற்கப்படுவதால் மக்களிடத்தில் வறுமை, பட்டினி, பணப்பற்றாக்குறை என்று இலங்கை மிகமோசமான, சோமாலியாவின் நிலையில் நாடு சென்று கொண்டிருக்கிறது.

நவீன உலகமயமாக்கல் காலத்தில் உலகத்தில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்யமுடியாமல் திண்டாடும் நிலையை அவதானிக்கும்போது ஏற்கனவே இலங்கையை சிங்கப்பூராக மாற்றுவோம் என கூறி வாக்கு



கேட்டவர்கள் இலங்கையை சோமாலியாவாக மாற்றப்போகிறார்கள், கிழக்கை மீட்போம் என கூறி வாக்கு கேட்டவர்கள் கிழக்கை தென்பகுதிக்கு விற்பனை செய்கிறார்கள். இதுதான் இன்றைய நிலை இன்னும் காலம் செல்லசெல்ல இலங்கையில் பாற்சோறும் கட்டசம்பலுமே மிஞ்சும் எனவும் மேலும் கூறினார்.

பலவருடங்களாக மக்கள் பாவனையில் பாவித்து பழக்கப்பட்ட பல பொருட்களை அத்தியாவசியமாகவே மக்கள் கருதுகின்றனர். பழவகைகள், சொக்லேட் வகைகளை சிறுவர்களில் உண்டு பழக்கப்பட்டவர்களும் உள்ளனர். அதுபோல் பெண்களுக்கான வெளிநாட்டு முக அலங்கரிப்பு கிறிம் வகைகளை அவர்கள் பல வருடங்களாக பாவித்து வந்துள்ளனர். இவ்வாறானவைகளை திடீரென தடைசெய்யும்போது முகம், உடல் போன்றவைகளில் வேறுவிதமான தோல் நோய்கள் வரவாய்ப்புள்ளன.

மேலும், அத்தியாவசிய தேவைகளுக்காக மட்டுமே இத்தகைய பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவதாகவும், அதற்காக சிறப்பு அனுமதி பெற வேண்டும் என்றும் கூறப்படுகிறது எனத்தெரிவித்தார்.

## அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் மாதாந்த கூட்டமும் மதிப்பீட்டு அறிக்கையிடலும்



(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான மாதாந்த முன்னேற்ற ஆய்வு கூட்டமும் உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான மதிப்பீட்டு அறிக்கையிடலும் நிந்தவூர் பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் நேற்று முன்தினம் (09) நடைபெற்றது.

இந்நிகழ்வு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் தலைமையில், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.எல்.எம்.கமல் நெத்மினியின் நெறிப்படுத்தலில், நிந்தவூர் பிரதேசசபை தவிசாளர் எம்.ஏ.எம்.அஸ்ரப் தாஹிரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை மற்றும் அக்கறைப்பற்று மாநகர சபைகள் உட்பட 20 உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், செயலாளர்களென அதிகாரிகள் பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில், நிந்தவூர் பிரதேச சபையின் தயாரிப்பில் உருவாக்கப்பட்ட திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வு குறுந்திரைப்படம் ஒன்று வெளியீடு செய்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை சுகாதார சேவை பணிமனையில் எயிட்ஸ் கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டம்






(மாவடிப்பள்ளி நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் எயிட்ஸ் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (09) அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் மற்றும் அம்பாறை மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.டி.ஏ.பி.சேரசிங்க ஆகியோர் இணைந்து தலைமை தாங்கிய இந்நிகழ்வை, அம்பாறை பாலியல் தொற்று நோய்கள் பிரிவின் மேக நோயியல் வைத்திய நிபுணர் டாக்டர் பியுமி பெரேரா ஒழுங்கு செய்திருந்தார்.

தேசிய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எச்.ஐ.வி. தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப்பாளர் ரசாஞ்ஜலி ஹெட்டியாராச்சி மற்றும் அந்நிகழ்ச்சித் திட்டத்தின் சமூகவைத்திய நிபுணர் சத்யா ஹேரத் ஆகியோர் இணையவழியூடாக இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அம்பாறை மாவட்டத்தில் எயிட்ஸ் தடுப்பு நடவடிக்கைகளின்போது எதிர்நோக்கப்படும் சவால்கள் குறித்தும், குழுவின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன. அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## பாண்டிருப்பு கலாசார மண்டபத்தில் வியாபார ஆலோசனை பயிற்சி செயலமர்வு





(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான வியாபார ஆலோசனையும், வழிகாட்டலும் கொண்ட ஒரு நாள் பயிற்சி செயலமர்வு கல்முனை வடக்கு பிரதேச சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் வி.சிறிநாதன் தலைமையில் பாண்டிருப்பு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதான வளவாளர்களாக கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.கோகுலராஜன் கலந்துகொண்டு சமுர்த்திப் பயனாளிகளுக்கான தொழில் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளை வழங்கியிருந்தார். அத்துடன் இங்கு சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர்களான எம்.ஐ.றமீஸ், எல்.துசாந்தன், ஆர்.நிறோஜினி, எஸ்.யதாஷ்சினி, வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே.மோகனதாஸ், கே.காமிலா, எஸ்.சோபனா, எஸ்.சாஹீர் ஆகியோர் பயனாளிகளுக்கான தொழில் வழிகாட்டல்களை வழங்கியிருந்தனர்.

கல்முனை வடக்கில் தெரிவுசெய்யப்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு வியாபார உத்திகள், அதன்மூலம் எவ்வாறு கூடிய வருமானம் பெற்றுக்கொள்வது, தற்காலத்திற்கு ஏற்ற சுயதொழில் வாய்ப்புக்கள் ஆகியன தொடர்பாக வளவாளர்களால் ஆலோசனை, வழிகாட்டல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை நகரப் பகுதிகளில் வழமையாக ஒளிர்கின்ற மின்குமிழ்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

## மாநகர முதல்வர் றகீப் பணிப்பு

(பாறுக் ஷிஹான்)

இலங்கை நாடு மிகவும் இக்கட்டான பொருளாதார நெருக்கடியினை எதிர்கொண்டிருக்கும் இவ்வேளையில் நாட்டில் மின்சாரத்தடை, எரிபொருள் தட்டுப்பாடு என பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகளை கருத்தில் கொண்டு மின்சாரத்தினை சிக்கனமாக பயன்படுத்தும் முன்மாதிரியான செயற்பாட்டின் முதற்கட்டமாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபையின் பராமரிப்பின் கீழுள்ள பொது விளையாட்டு மைதானங்கள், மையவாடிகள், சில வீதிகளில் ஒளிர்கின்ற மின்குமிழ்களின் எண்ணிக்கையினை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் ஆலோசனையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய மருதமுனை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, சாய்ந்தமருது, கல்முனை நகரப் பகுதிகளில் உள்ள பகுதிகளில் வழமையாக ஒளிர்கின்ற மின்குமிழ்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தி தேவைக்கேற்றவாறு பயன்படுத்தும் வகையில் கடந்த மூன்று தினங்களுக்கு முன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் குறித்த தெரு மின் விளக்குகளை அணைப்பதற்கு அது தொடர்பில் உரிய பொறுப்பாளர்களுக்கும் முதல்வரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, நிந்தவூர் பிரதேச சபையும் மேற்குறித்த தெரு விளக்குகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், நாட்டின் பொருளாதார நிலைமையினை கருத்தில்கொண்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள், பொதுமக்கள் மின்சாரத்தை மிகவும் சிக்கனமாக பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுள்ளன.

# அத்துமீறும் பிக்குகள் இலங்கை சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களா?

## கேள்வியெழுப்புகிறது சட்டத்தரணிகள் சங்கம்



(மாளிகைக்காடு நிருபர்)

இனவாதத்தினால் இலங்கை இன்று சுக்குநூறாக உடைந்து சர்வதேசமளவில் விலாசமிழந்து இருக்கும் இவ்வாறான நிலையில் இலங்கை முஸ்லிம்களை மீண்டும் மீண்டும் சீண்டும் செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம். பலாங்கொட கூரகல ஜெய்லானி எனும் இடத்தில் முஸ்லிம்களின் 800 வருடங்களுக்கு மேற்பட்ட அடையாள சின்னங்கள் திட்டமிட்டு பிக்குகளினால் அழிக்கப்பட்டுள்ளன. அங்கு பாரிய விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதை முஸ்லிம்கள் அறியாமலில்லை. தெரிந்து கொண்டும் எமது நாட்டில் அநாவசியமான முரண்பாடுகளை உருவாக்க கூடாது என எண்ணி முஸ்லிம்கள் அமைதி காத்திருக்கின்றனர் என சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் சங்கத்தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி யூசுப் அன்வர் ஸியாத் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை முள்ளிமலை பிரதேசத்தில் உள்ள காணியில் புத்தர் சிலையொன்றை நிறுவ பௌத்த பிக்குகளும், சிங்கள இளைஞர்கள் சிலரும் கடந்த புதன்கிழமை எடுத்த முயற்சியினால் அந்த பிரதேசத்தில் பதட்டம் நிலவியிருந்தது. இந்த விடயம் தொடர்பில் வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும்,

பிக்குகளை தொடர்ந்தும் தூண்டிவிட்டு முஸ்லிம் பிரதேசங்களுக்குள் இரவோடிரவாக வயல், காடு, மேடு, மலைகளில் பௌத்த சிலைகளை வைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. பொலிஸாரினால் அல்லது அரசினால் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு பிக்குகள் சட்டவரையறைகளுக்கு அப்பால்பட்டவர்களா? இலங்கை சட்டம் இவர்களுக்கு உரித்தாகவில்லையா என கேள்வியெழுப்ப எண்ணுகின்றோம். இது இலங்கையர்கள் எல்லோருக்கும் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தும் அம்சமாக உள்ளது.

மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டை முன்வைத்து ஜெனீவாவில் நிறுத்தப்பட்டிருக்கும் எமது நாடு, இவ்வாறான அத்துமீறல்களை கண்டும் காணாமல் இருப்பது நாட்டின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமாக அமையாது. இப்படியான அத்துமீறல்களை செய்தவர்கள் மீது சரியான சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் முஸ்லிம்கள் அல்லது வேறு சமூகங்களை சீண்டிப்பார்க்கும் விடயங்களை பௌத்தசாசன அமைச்சு அனுமதிக்காது. உடனடியாக இவ்விடயங்களில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

# வீதி விளக்குகள் அணைக்கப்படும் வேளையில் கட்டாக்காலி மாடுகளால் பொது மக்கள் அவதி

## விபத்துகள் அதிகரிக்கும் வாய்ப்பு





(சம்மாந்துறை நிருபர்)

அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளில் உலாவித்திரியும் கட்டாக்காலி மாடுகளால் நேற்று முன்தினம் (09) இரவு 10 மணியளவில் சம்மாந்துறை பொலிஸ் வீதியில் கார் ஒன்றும் விபத்துக்குள்ளாகியதில், தெய்வாதீனமாக காரில் பயணித்தோர் உயிர்த்தப்பினர்.

இது குறித்து சம்மாந்துறை பிரதேச சபையிடம் பல முறை சுட்டிக்காட்டிய போதும், ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக இரவு நேரங்களிலும் வீதி விளக்குகள் அணைக்கப்படுகின்றன்றன. ஆகவே கட்டாக்காலி மாடுகள் வீதியில் உலாவித்திரிந்தால் எதிர்வரும் காலங்களில் வீதி விபத்துகள் அதிகரிக்கும் என மேலும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

எனவே, பிரதேச சபை ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# காரைதீவில் வெடித்து சிதறிய கேஸ் அடுப்பு



(காரைதீவு நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு 08ஆம் பிரிவில் அமைந்துள்ள பொன்னம்பலம் பங்கயவல்லி என்பவரது வீட்டில் நேற்று முன்தினம் (09) கேஸ் அடுப்பு ஒன்று வெடித்து சிதறிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிவாயு அடுப்பு வெடித்து சேதமாகியுள்ளதுடன், எவருக்கும் எந்தவித ஆபத்துகளும் நேரவில்லை.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் உணவு மண்டபம், வாகனத் தரிப்பிடம் திறப்பு





(பொத்துவில், பெரியநீலாவணை நிருபர்கள்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலைக்கான புதிய அம்பியூலன்ஸ் வாகனம் வழங்குதல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் 2021 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப் பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உணவு மண்டபம், மோட்டார் சைக்கிள் தரிப்பிடம் ஆகியவற்றை வைபவ ரீதியாக திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரி.ஆர். ரஜாப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜெ.முரளிதரன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்எம்.றிபாஸ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இங்கு புதிய அம்பியூலன்ஸ் வாகனம் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டதுடன், உணவு மண்டபம், மோட்டார் சைக்கிள் தரிப்பிடம் ஆகியவற்றை நாடாளுமன்ற உறுப்பினர் திறந்துவைத்தார்.

நிகழ்வில் கலந்துகொண்ட பிரதம அதிதிகள் மற்றும் கௌரவ அதிதிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலை அண்மையில் Type A ஆக தரமுயர்த்தப்பட்டு முழுமையாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கான நடவடிக்கை தொடர்ந்தும் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சேவைநலன் பாராட்டு விழா



(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தரின் சேவையினை பாராட்டி கௌரவிக்கும் சேவைநலன் பாராட்டு விழா கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

இதன்போது ஓய்வுபெற்றுச் செல்லும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர் சாலிதம்பி ஹாசீமின் சேவையினைப் பாராட்டி பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் இலங்கை கல்விசாரா ஊழியர்கள் ஒன்றிணைந்த சங்கத்தின் அம்பாறை மாவட்ட செயலாளரும், ஊடகவியலாளருமான எம்.ஜே.எம்.சஜீத் ஓய்வுபெற்று செல்லும் உத்தியோகத்தருக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார். கல்லூரியின் பதிவாளர் ஏ.புஷ்பராஜ் உட்பட பலர் இதன்போது கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சவளக்கடை விவசாயக் கண்டத்தில் பெரும்போக செய்கையில் பாதிக்கப்பட்டோரின் விபரம் சேகரிப்பு

(நற்பிட்டிமுனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் பெரும் நிலப்பரப்புக் கண்டமான சடயந்தலாவ சவளக்கடை விவசாயக் கண்டங்களில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்டு பாதிப்புற்ற விவசாயிகளின் விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சடயந்த விவசாய விரிவாக்கல் திணைக்களத்தின் மூலம் இதற்கான விண்ணப்பங்கள் கமநல அமைப்புகளிடம் வழங்கப்பட்டு, அமைப்பின் தலைவர் முன்னளிப்புடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. முற்றாக பாதிக்கப்பட்டோர் பகுதியளவில் பாதிக்கப்பட்டோர் என விபரமறிய அதிகாரிகள், கமநல காப்புறுதிச்சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் வயலை நேரடியாக பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் இழப்பீட்டை பெற்ற நிலையில், அம்பாறை மாவட்ட விவசாயிகளும் அதனை விரைவாகப் பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய பயிலுனர்களை பாடசாலைகளுக்கு இணைக்க நடவடிக்கை





(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் 2018/2020 ஆம் கல்வி ஆண்டுக்கான ஆசிரிய பயிலுநர்களை பாடசாலைகளுக்கு இணைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரிய பயிலுநர்களை இணைப்பதற்குரிய அனுமதி கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப்பிரிவின் பிரதம ஆணையாளரிடம் இருந்து வழங்கப்பட்டுள்ளதாக அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

அதனடிப்படையில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள 08 கல்வி வலயங்களில் உள்ள 123 பாடசாலைகளுக்கு கடந்த திங்கட்கிழமை (07) முதல் செயற்படும் வண்ணம் ஆசிரிய பயிலுநர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பகல்வி, விஞ்ஞானம், கணிதம், விசேட கல்வி மற்றும் இஸ்லாம் ஆகிய ஐந்து பாடநெறிகளை பயின்று வந்த 349 ஆசிரிய பயிலுனர்கள் இவ்வருடம் நிறைவுறும்வரை கற்பித்தல் பயிற்சியினை குறித்த பாடசாலைகளில் மேற்கொள்ளவுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பிலான நிகழ்வு தொடருறு கல்விக்கான உப பீடாதிபதி எம்.ஐ. ஜஃபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி கலந்து கொண்டு பயிலுநர் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கிவைத்தார்.

இந்நிகழ்வில் உப பீடாதிபதிகள், விரிவுரை இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

LK Newspapers Viber Community

உலக செய்திகள்

16 நாட்களாக தொடரும் தாக்குதல்



# தலைநகர் கீவ்வுக்குள் ஊடுருவிய ரஷ்யப் படை

## மரியுபோல் மகப்பேறு மருத்துவமனை உட்பட 3 வைத்தியசாலைகள் மீது தாக்குதல்

## ஐ.நா. - உலக சுகாதார ஸ்தாபனம் கண்டனம்

## பிரசவத்துக்கு காத்திருந்த பெண்கள் மீது பாய்ந்த குண்டுகள்; பிறந்த குழந்தைகள் - நோயாளிகள் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிப்பு

ரஷ்யா - உக்ரைன் மோதல் இன்றுடன் 16 நாட்களை எட்டியுள்ளது. இந்நிலையில், உக்ரைன் மீதான தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தியுள்ள ரஷ்யப் படைகள் உக்ரைன் தலைநகர் கீவ்வுக்குள் ஊடுருவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, துறைமுக நகரமான மரியுபோல் மீது குண்டுமழை பொழிந்து வருகின்றது. மரியுபோலில் மகப்பேறு வைத்தியசாலை உட்பட 3 வைத்தியசாலைகள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம் தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரான கார்கீவை கைப்பற்றும் முனைப்புடன் தீவிர தாக்குதல் நடத்திவருகின்றன. அத்தோடு செர்னோபில் அணு உலை மின் கட்டமைப்பு சேதமடைந்துள்ளதால் அங்கு பதற்றமானநிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், இராணுவ நடவடிக்கை மூலம் உக்ரைன் அரசை கவிழ்க்கும் நோக்கம் இல்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது. மறுபுறம் ரஷ்ய - உக்ரைன் வெளியுறவு அமைச்சர்களுக்கிடையிலான நேரடி பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இதேவேளை, ரஷ்யா கைப்பற்ற முயன்ற கார்கீவ், டொர்ஹாச்சி உள்ளிட்ட நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் நகரங்களை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியபோது, உக்ரைன் இராணுவம் அந்தத் தாக்குதலை முறியடித்து மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி கார்கீவ் நகரில் குடியிருப்புக் கட்டடத்தில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் 7 வயது குழந்தை உட்பட 2 பேர் உயிரிழந்தனர். உக்ரைனில் இருக்கும் நகரங்களில் கார்கீவ் நகரத்திலேயே அதிகமான குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பு

ரஷ்யா - உக்ரைன் வெளியுறவு அமைச்சர்களுக்கிடையிலான நேரடி பேச்சுவார்த்தை நேற்று துருக்கியில் இடம்பெற்றது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபாவை துருக்கியிலுள்ள அன்டாலியா நகரில் சந்தித்துப் பேசியுள்ளார்.

ரஷ்யப் படையெடுப்பு தொடங்கிய பின்னர், ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே நடக்கும் முதல் உயர்மட்ட சந்திப்பு இதுவாகும். இந்தப் பேச்சுவார்த்தை மிக முக்கியமான ஒன்று என ரஷ்யா தெரிவித்துள்ளது.

எனினும், இப்பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ தெரிவித்துள்ளார்.

### மரியுபோல் மகப்பேறு மருத்துவமனை உட்பட மேலும் இரண்டு மீது தாக்குதல்

இந்நிலையில், மரியுபோலில் அமைந்திருக்கும் மகப்பேறு மருத்துவமனை மீது ரஷ்யப் படைகள் நடத்திய கடுமையான தாக்குதலில் பிரசவத்துக்காகக் காத்திருந்த பெண்கள் குண்டடிபட்டுள்ளனர். பிறந்த குழந்தைகள் பலவும் கட்டட இடிபாடுகளுக்கு இடையே சிக்கியுள்ளதாகவும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் மருத்துவமனை மற்றும் பிரசவ வோர்ட் உள்ளிட்டவை கடுமையாக சேதமடைந்தன.

மரியுபோல் மட்டுமல்லாமல், கீவ் நகரில் அமைந்திருக்கும் இரண்டு மருத்துவமனைகள் மீதும் ரஷ்யப் படைகள் வெடிகுண்டுகளை வீசியதில், அங்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

### மரியுபோல் மருத்துவமனை மீது தாக்குதல்

மரியுபோல் நகரிலுள்ள மருத்துவமனை மீது ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன. இந்தச் சம்பவத்தில் 17 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஆறு வயது சிறுமி உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, "மருத்துவமனையின் இடிபாடுகளுக்குள் மக்கள், குழந்தைகள் உள்ளனர். இது மிகவும் மோசமான செயல்" என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு, சர்வதேச தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். காட்டுமிராண்டித்தனம் என வெள்ளை மாளிகையும், சீரழிவு என பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் சாடியுள்ளனர்.

சுகாதார மையம் ஒருபோதும் தாக்குதலுக்கு இலக்காகக் கூடாது என ஐ.நா. அமைப்பின் செய்தித் தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### ஐ.நா. கண்டனம்

இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா. அமைப்பின் பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டேரஸ் தமது ட்விட்டர் பக்கத்தில்,

"உக்ரைனின் மரியுபோல் நகரிலுள்ள பிரசவ மற்றும் குழந்தைகள் வார்ட்கள் நிறைந்த மருத்துவமனை ஒன்றின் மீது நடந்த தாக்குதல் பயங்கரமானது. போருடன் எந்தவித தொடர்பும் இல்லாத பொதுமக்கள் அதற்கு அதிக விலை கொடுத்து வருகின்றனர். உணர்வற்ற இந்த வன்முறை நிச்சயம் நிறுத்தப்படவேண்டும். இந்த படுகொலைகளுக்கு முடிவு கட்ட வேண்டும்" - என தெரிவித்துள்ளார்.

### இதுவரை 18 மருத்துவனைகள் மீது தாக்குதல்

ரஷ்யப் படைகள் உக்ரைன் மீது படையெடுப்பைத் தொடங்கி இரண்டு வாரங்களாகும் நிலையில், உக்ரைனில் இதுவரை 18 மருத்துவமனைகள் மீது ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், அதில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

### உலக சுகாதார அமைப்பு கண்டனம்

இதுகுறித்து பேசிய உலக சுகாதார அமைப்புத் தலைவர் டெட்ரோஸ் அதனோம், இராணுவ நடவடிக்கைகளை இரு நாடுகளும் கைவிட்டு அமைதி பேச்சுவார்த்தைக்கு திரும்ப முயற்சிக்கவேண்டும். போர் நிறுத்தத்தை ரஷ்யா கைவிடவேண்டும் எனக் கோரி உலக சுகாதார அமைப்பு தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக தெரிவித்தார்.

### இராணுவ நடவடிக்கை மூலம் உக்ரைன் அரசை கவிழ்க்கும் எண்ணம் இல்லை - ரஷ்யா விளக்கம்

இராணுவ நடவடிக்கை மூலம் உக்ரைன் அரசை கவிழ்க்கும் நோக்கம் இல்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மரியா ஜகருவா, "இராணுவ நடவடிக்கை மூலம் உக்ரைன் அரசை கவிழ்க்கும் எண்ணம் இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதற்கு பாதுகாப்பு வழித்தடம் அமைப்பது குறித்து உக்ரைன் அரசின் பிரதிநிதிகளுடன் மேலும் ஒரு சுற்று பேச்சுவார்த்தை நடைபெறும்.

உக்ரைன் விவகாரத்திற்கு தீர்வு காண்பதற்காக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

உக்ரைனில் தற்போதைய அரசை கவிழ்க்கும் நோக்கில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என விளக்கமளித்த மரியா, ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை உக்ரைனின் இறையாண்மைக்கோ அல்லது அந்த நாட்டு மக்களுக்கோ எதிரானது அல்ல என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புவதாக தெரிவித்துள்ளார்.















### 21 இலட்சம் பேர் வெளியேற்றம்

உரைன் மீதான ரஷ்யத் தாக்குதலின் 15ஆவது நாளான நேற்றுவரை உக்ரைனிலிருந்து 21 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

நாளுக்குநாள் நாட்டை துறந்து உறவுகளை இழந்து அண்டைநாடுகளுக்கு அகதிகளாக செல்லும் அவலம் தொடர்ந்துகொண்டிருக்கிறது. மேலும் தொற்று நோய் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் உக்ரைனில் அதிகம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### அகதிகளான 10 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலால் 10 இலட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் உக்ரைனிலிருந்து அண்டைநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர் என்று யுனிசெப் தெரிவித்துள்ளது.

மேலும், 21,55,271 பேர் அகதிகளாக பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது. ரஷ்யத் தாக்குதலினால் உக்ரைனில் இதுவரை 37 குழந்தைகள் உயிரிழந்ததாகவும், 50 குழந்தைகள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் தற்காலிக போர் நிறுத்தத்தை அறிவித்திருந்த ரஷ்யா, Mariupol உள்ள குழந்தைகள் மருத்துவமனை மீது வான்வழித் தாக்குதல் நடத்தியதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### செர்னோபில் அணு உலை மின் கட்டமைப்பு சேதம்

செர்னோபில் அணு உலையில் மின் கட்டமைப்பு சேதமடைந்திருப்பதால் கதிர்வீச்சு வெளியேறும் அபாயம் இருப்பதாக உக்ரைன் அரசு தெரிவித்திருக்கிறது.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள செர்னோபில் அணு உலையில் மின் வசதிகளை தரும் கட்டமைப்புகள் சேதமடைந்திருப்பதாக உக்ரைன் தெரிவித்திருக்கிறது. அதனை விரைந்து சரிசெய்யாவிட்டால் அணு எரிபொருள் சேமிப்பு வசதியின் குளிரூட்டும் அமைப்புகளிலிருந்து அதிகப்படியான கதிர்வீச்சு வெளியேறும் அபாயம் இருப்பதாக உக்ரைன் அரசு எச்சரித்திருக்கிறது.

ரஷ்யப் படைகள் செர்னோபில் அணு உலையை கைப்பற்றியபோது அங்கிருந்து அதிகப்படியான கதிர்வீச்சு வெளியானதாக உக்ரைன் அரசு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 1986ஆம் ஆண்டு வரலாற்றின் மிக மோசமான அணு விபத்து நேரிட்ட இந்த மையம், தற்போது உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ளது. மின் இணைப்பு துண்டிப்புக்கான காரணம் குறித்து தெரியவில்லை.

மின்தடையால் அணு உலை குளிரூட்டிகள் செயற்பாடு நின்று மீண்டும் விபத்து நேரிடுவதற்கான அபாயம் உள்ளதால், மின் உற்பத்தி சாதனம் மூலம் தற்போது அந்த அணு உலைக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இருந்தாலும், 48 மணி நேரத்துக்கு மட்டுமே அந்த மின் உற்பத்தி சாதனம் இயங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### உக்ரைன் மீது ரஷ்யா இரசாயன தாக்குதல் நடத்தலாம் ; பிரிட்டன் அச்சம்

உக்ரைன் மீது ரஷ்யா இரசாயனத் தாக்குதல் நடத்தலாம் என பிரித்தானியா அச்சம் தெரிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க...



- **ரஷ்ய - உக்ரைனிய வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நேரடி சந்திப்பு**
- **செர்னோபில் அணு உலை மின் கட்டமைப்பு சேதம்: கதிர்வீச்சு வெளியேறும் அபாயம்**
- **அகதிகளான 10 இலட்சம் குழந்தைகள்; 21 இலட்சம் பேர் வெளியேற்றம்**
- **உக்ரைன் மீது ரஷ்யா இரசாயன - உயிரி தாக்குதல் நடத்தலாம் ; பிரிட்டன் - அமெரிக்கா எச்சரிக்கை**



**14ஆம் பக்கத் தொடர்ச்சி...**

சிரிய உள்நாட்டுப் போரின்போது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதை நினைவுகூர்ந்துள்ள பிரித்தானிய அதிகாரிகள், உக்ரேனிய தேசியவாதிகள் கார்கீன் வடமேற்கே ஒரு கிராமத்தில் இரசாயன ஆயுதங்களை தயாரிப்பதாக ரஷ்யா கூறியதையும் மேற்கோள் காட்டியுள்ளனர்.

ரஷ்யப் படைகள் பொய்யாகக் குற்றம் சாட்டுவதே இந்தத் திட்டதின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ள பிரித்தானிய அதிகாரிகள், இதனைக் காரணமாகக்கொண்டே ரஷ்யா இரசாயனத் தாக்குதல் நடத்த வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

**உக்ரைனில் ரஷ்யா உயிரி தாக்குதல் நடத்தக்கூடும் - அமெரிக்கா எச்சரிக்கை**

இதேவேளை, உக்ரைனை கைப்பற்றும் அடுத்தகட்ட முயற்சியாக இரசாயன ஆயுதங்களை வைத்தோ அல்லது உயிரி தாக்குதலையோ ரஷ்யா முன்னெடுக்கக்கூடும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு, அமெரிக்காவின் உதவியுடன் உக்ரைனிலுள்ள ஆய்வகங்களில் உயிரி தாக்குதல் நடத்துவதற்கான கொடிய நோய்களைப் பரப்பும் கிருமிகள் இரகசியமாக உருவாக்கப்படுவதாக ரஷ்யா கூறுவதை முற்றாக மறுத்துள்ள அமெரிக்கா, அது அபத்தமானது எனவும் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் கூற்றை சீனா ஆதரித்துள்ளதற்கும் அமெரிக்கா கண்டனத்தை பதிவுசெய்துள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகள் மீது பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்தோ, சாக்குபோக்கு கூறியோ, ரஷ்யா தான் உக்ரைனில் பேரழிவை ஏற்படுத்துவதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும், இதனை பல முறை அமெரிக்கா வெளிப்படையாகக் கூறியுள்ளது எனவும் வெள்ளை மாளிகை செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

உக்ரைன் படையின் எதிர்ப்பால் ரஷ்யப் படையின் வேகம் குறைந்திருக்கிறதே தவிர, அவர்கள் முற்றாக தடுத்து நிறுத்தப்படவில்லை எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

**ரஷ்ய ஜனாதிபதி - ஜேர்மனி அதிபர் ஆலோசனை**

உக்ரைன் விவகாரத்தை இராஜாங்க முறையில் கையாள்வது குறித்து ரஷ்ய ஜனாதிபதி புட்டின், ஜேர்மனி அதிபர் ஓலாப் ஷோல்ஸ் ஆகியோர் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதுகுறித்து ரஷ்ய ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உக்ரைனில் சிக்கியுள்ள மக்களை மனிதநேய வழிகள் மூலம் வெளியேற்றியது தொடர்பாக புட்டின் மற்றும் ஜேர்மனி அதிபர் ஓலாப் ஷோல்ஸ் பேசியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் மனிதாபிமான வழித்தடத்தில் மக்களை வெளியேற்ற எடுத்த நடவடிக்கைகள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் குழுவின் தாக்குதல்கள் குறித்தும் ஜேர்மன் அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

**உக்ரைனுக்கு சர்வதேச நாணய நிதியம் நிதியுதவி**

உக்ரைனுக்கு அவசர நிதியாக 140 கோடி அமெரிக்க டொலரை சர்வதேச நாணய நிதியம் வழங்குகிறது.

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையால் பொருளாதாரம், மக்கள் பாதுகாப்பு, உட்கட்டமைப்பு, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியங்களிலும் உக்ரைன் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

உக்ரைனுக்கு பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மருத்துவ உபகரணங்கள், இராணுவத் தளவாடங்கள் நிதியுதவி உட்பட மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றன.

உக்ரைனுக்கு அவசரகால நிதியுதவியளிக்க சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு கூடியது. கூட்டத்தில் உக்ரைனுக்கு 140 கோடி டொலர் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த திங்கட்கிழமை உக்ரைனுக்கு 723 மில்லியன் டொலர் கடன் வழங்க உலக வங்கி அனுமதி அளித்திருந்தது.

**ரஷ்யா - பெலாரஸ் மீது புதிய பொருளாதாரத் தடை ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல்**

ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகள் மீது அறிவிக்கப்பட்ட புதிய பொருளாதாரத் தடைகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுமதியளித்துள்ளது.

உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட ரஷ்யா, அதற்கு உதவியதாக பெலாரஸ் நாடுகளின் தலைவர்கள், தொழிலதிபர்கள், அவர்களது குடும்பத்தினர் உட்பட 862 பேர் மீது பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

பணப் பரிமாற்றத்திற்கான தொலைத்தொடர்பு அமைப்பான SWIFTஇலிருந்து 3 பெலாரஸ் வங்கிகளை வெளியேற்ற ஐரோப்பிய ஒன்றியம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் ரஷ்ய கடல்சார் பாதுகாப்புப் பொருட்கள், கப்பல் கட்டுமானம் மற்றும் ரேடியோ தொலைத்தொடர்பு பொருட்கள் உள்ளிட்டவைகள் ஏற்றுமதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளது.

**ஐ.நா. அணுசக்தி மாநாட்டில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஒட்டு மொத்தமாக வெளிநடப்பு**

ஆஸ்திரியாவில் நடந்த ஐ.நா. அணுசக்தி மாநாட்டில் உக்ரைன் போர் குறித்து ரஷ்யத் தூதர் தவறான தகவலை தெரிவித்ததாகக் கூறி ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் ஒட்டுமொத்தமாக வெளிநடப்புச் செய்தனர்.

வியன்னாவில் நடந்த அணுசக்தி மாநாட்டில், உக்ரைனின் அணுசக்தி நிலையங்களை சுற்றி இராணுவ நடவடிக்கைக்கு ரஷ்யாவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவித்தது.



அப்போது ரஷ்யப் பிரதிநிதி உக்ரைன் போர் குறித்து தவறான தகவலைக் கூறியதால் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் மொத்தமாக வெளிநடப்புச் செய்தனர்.

இந்தக் கூட்டத்தில் உக்ரைன் அணுசக்தி நிலையங்கள் அருகில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. தவறான தகவலைக் கூறியதற்காக ரஷ்யாவிற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

## உக்ரைன் போர் - இதுவரை....

***பெப். 21*** - கிழக்கு உக்ரைனில் பிரிவினைவாதிகள் வசம் உள்ள லுஹான்ஸ்க், டொனட்ஸ்க் (டான்பாஸ்) பிராந்தியங்களை சுதந்திர நாடுகளாக ரஷ்யா அங்கீகரித்தது.

உக்ரைன் எல்லையில் ரஷ்யா பல வாரங்களாக படைகளைக் குவித்திருந்த நிலையில், அமைதியான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இந்த அங்கீகாரம் மூலம் முடிவுக்கு வந்தது.

***பெப். 22*** - ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு படையெடுப்பதை சர்வதேச சட்டம் தடைசெய்துள்ள நிலையில், தனி நாடுகளாக அங்கீகரிக்கப்பட்ட லுஹான்ஸ்க், டொனட்ஸ்க் ஆகியவற்றின் அழைப்பின்பேரில் அமைதி காக்கும் பணியில் ஈடுபடுவதற்காக ரஷ்ய இராணுவம் அங்கு செல்லும் என புட்டின் அறிவித்தார்.

ரஷியாவை தடுக்கும் நோக்கில் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது அமெரிக்கா.

***பெப். 23*** - அமெரிக்காவைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது.

***பெப். 24*** - உக்ரைன் மீதான போரைத் தொடங்கியது ரஷ்யா. கிழக்கு உக்ரைனிலிருந்து லுஹான்ஸ்க், செர்னிகிவ், கார்கிவ் பகுதிகளுக்குள் ரஷ்ய இராணுவம் நுழைந்தது. கடல் வழியாக ஒடேஸா, மரியுபோல் துறைமுக நகரங்களிலும் ரஷ்யப் படை புகுந்தது.

உக்ரைன் தலைநகர் கீவ் மீது சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இராணுவ நிலைகள் குறிவைத்து அழிக்கப்பட்டன.

***பெப். 25*** - உக்ரைனிலிருந்து படைகளை ரஷ்யா திரும்பப் பெறவேண்டுமெனவும், ரஷ்யாவை கண்டித்தும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அந்தத் தீர்மானத்தை ரஷ்யா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தோற்கடித்தது.

ஜனாதிபதி புட்டின், வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தது ஐரோப்பிய ஒன்றியம். உக்ரைனிய மக்கள் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கினர்.

***பெப். 26*** - உக்ரைனிலிருந்து வெளியேறிய சுமார் ஒரு இலட்சம் பேர் அண்டை நாடான போலந்தை சென்றடைந்தனர்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியை நாட்டைவிட்டு வெளியேற்ற அமெரிக்கா முன்வந்தது. ஆனால், அதனை ஏற்க மறுத்த ஸெலென்ஸ்கி, எனக்குத் தேவை ஆயுதங்கள். பாதுகாப்பு அல்ல என வீடியோ வெளியிட்டார்.

***பெப். 27*** - தலைநகர் கீவ், கார்கிவ், கெர்சன் நகரங்களை நோக்கி ரஷ்யப் படை முன்னேறிய நிலையில், உக்ரைன் படையினரின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டது. சுமார் 4,500 ரஷ்ய வீரர்களைக் கொன்றுவிட்டதாகவும், 150 பீரங்கிகள், 700 கவச வாகனங்கள், 7 போர் விமானங்களை அழித்துவிட்டதாகவும் உக்ரைன் அறிவித்தது. ஆனால், இதை ரஷ்யா உறுதிப்படுத்தவில்லை.

***பெப். 28*** - ரஷ்யா - உக்ரைன் இடையே முதல் சுற்று சமாதானப் பேச்சு அண்டை நாடான பெலாரஸின் எல்லையில் நடைபெற்றது. 5 மணிநேரம் நீடித்த இந்தப் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை.

கார்கிவ் நகரில் ரஷ்யா நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் பொதுமக்கள் 11 பேர் உயிரிழந்தனர்.

***மார்ச் 1*** - கார்கிவ் நகரின் இதயப் பகுதியிலுள்ள சுதந்திர சதுக்கத்தின் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் முதன்முறையாக உக்ரைன் போர் குறித்து உரையாற்றினார் ஜனாதிபதி பைடன். ஆனால், உக்ரைன் மீது விமானங்கள் பறக்கத் தடை விதிக்க வேண்டும் என்ற ஸெலென்ஸ்கியின் கோரிக்கையை பைடன் ஏற்க மறுத்தார். அப்படி அறிவித்தால் ரஷ்யாவுடன் அமெரிக்கா நேரடியாக மோதுவது போலாகிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

***மார்ச் 2*** - ரஷ்யாவை கண்டித்து ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேறியது. 193 உறுப்புநாடுகளில் 143 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகியவை வாக்கெடுப்பை புறக்கணித்தன.

***மார்ச் 3*** - தெற்கு உக்ரைனிலுள்ள கருங்கடல் துறைமுக நகரமான கெர்சனை ரஷ்யப் படை கைப்பற்றியது.

***மார்ச் 4*** - ஐரோப்பாவிலேயே பெரிய அணுமின் நிலையமான ஸப்போரிஸியா மீது ரஷ்யப் படைகள் ராக்கெட் குண்டு தாக்குதலை நடத்தின. இதில் அதன் அருகே இருந்த கட்டடம் தீப்பிடித்தது. இருப்பினும், இந்தத் தாக்குதலால் கதிர்வீச்சு எதுவும் வெளியாகவில்லை என சர்வதேச அணுசக்தி முகமை தெரிவித்தது.

உக்ரைனிலிருந்து வெளியேறிய அகதிகள் எண்ணிக்கை 10 இலட்சத்தை எட்டியது.

ரஷ்யா - உக்ரைன் இடையே இரண்டாம்கட்ட பேச்சில் போர் நிறுத்த உடன்பாடு ஏற்படவில்லை. ஆனால், பொதுமக்கள் வெளியேற பாதுகாப்பு வழித்தடத்தை உருவாக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டன.

***மார்ச் 5*** - மரியுபோல் நகரிலிருந்து பொதுமக்கள் வெளியேற மனிதாபிமான வழித்தடத்தை ஏற்படுத்த அனுமதிப்பதாக ரஷ்யா உறுதியளித்தது. ஆனால், அது நீடிக்கவில்லை. அன்றைய தினம் மாலையிலேயே ரஷ்யா தாக்குதலை மீண்டும் தொடர்ந்ததால் பொதுமக்கள் வெளியேற்றம் நிறுத்தப்பட்டது.

***மார்ச் 6*** - போர் நிறுத்த உடன்பாடு மீறப்பட்டதால் மரியுபோல் நகரிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவது தடைப்பட்ட நிலையில், நிதியுதவி கோரியும், ரஷ்யா மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கோரியும் பைடனுடன் ஸெலென்ஸ்கி தொலைபேசியில் பேசினார்.

விசா, மாஸ்டர்கார்ட் ஆகியவை ரஷ்யாவுடன் வணிகம் செய்வதை நிறுத்தின.

தலைநகர் கீவ்வை நோக்கி நாட்டின் வடக்கு, மேற்குப் பகுதிகளிலிருந்து ரஷ்யப் படைகள் முன்னேறின.

உக்ரைன் வான்வெளி மீது ரஷ்ய விமானங்கள் பறக்க எந்த நாடாவது தடை விதித்தால் அந்த நாடு போரில் பங்கேற்பதற்குச் சமம் என புட்டின் எச்சரிக்கை விடுத்தார்.

இஸ்ரேல் பிரதமர் நாஃப்டாலி பென்னட், புட்டினையும் பின்னர் ஸெலென்ஸ்கியையும் சந்தித்தார்.

***மார்ச் 7*** - போர் தொடங்கி இரு வாரங்கள் நெருங்கிய நிலையில், போர் மோசமான அடுத்தகட்டத்தை எட்டும் அச்சம் எழுந்தது. ஏற்கனவே இருமுறை புட்டினுடன் பேசிய நிலையில் மூன்றாவது முறையாக தொடர்புகொண்டு பேசினார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. சுமி நகரில் சிக்கியுள்ள இந்திய மாணவர்களை மீட்கும் வகையில் அங்கு பாதுகாப்பு வழித்தடத்தை ஏற்படுத்தவேண்டுமென மோடி வலியுறுத்தினார். உக்ரைன் ஜனாதிபதிடனும் மோடி பேசினார்.

***மார்ச் 8*** - ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் மற்றும் எரிவாயு இறக்குமதிக்கு அமெரிக்கா தடை விதிப்பதாக பைடன் அறிவித்தார்.

**சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியீடு:**

# ஐந்து மாநிலங்களிலும் தோல்வியை தழுவிய காங்கிரஸ்; பஞ்சாப்பில் ஆம்ஆத்மி; மூன்று மாநிலங்களில் பா.ஜ.க. முன்னிலை

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், கோவா மற்றும் மணிப்பூர் ஆகிய ஐந்து மாநிலங்களில் நடந்த சட்டப் பேரவை தேர்தலுக்கான முடிவுகள் வெளியாகியுள்ளன.

பஞ்சாபில் தற்போது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் அங்கு தோல்வியை தழுவியுள்ளதுடன், ஆம் ஆத்மி பெரும் வெற்றிபெற்றுள்ளது. மொத்தமாக 5 மாநிலங்களிலும் காங்கிரஸ் பெரும் தோல்வியை தழுவியுள்ளது.

தோல்வி குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "மக்களின் தீர்ப்பை பணிவுடன் ஏற்றுக்கொள்கிறோம். வென்றவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். அனைத்து காங்கிரஸ் தொண்டர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இதிலிருந்து பாடம் கற்றுக்கொள்வோம். இந்திய மக்களின் நலன்களுக்காக தொடர்ந்து பாடுபடுவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

கோவா சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. இதனால், மீண்டும் ஆட்சியை தக்கவைத்துக்கொண்டுள்ளது.

அதேபோன்று உத்தரப்பிரதேசம், மணிப்பூர் மாநிலங்களிலும் பா.ஜ.கதி வெற்றிபெற்றுள்ளது.






உத்தரப்பிரதேச மாநிலத்தில் 15 ஆண்டுகளில் முதன்முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ. ஒருவர் முதல்வராகிறார். அந்தச் சிறப்பை முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பெறுகிறார்.

உத்தரப்பிரதேசத்தில் ஆளும் பா.ஜ.க. ஆட்சி அமைப்பதற்கான தனிப்பெரும்பான்மை பெற்றுள்ளது. இந்நிலையில், அம்மாநிலத்தின் முதல்வராக யோகி ஆதித்யநாத்தே தொடர்வார் என பா.ஜ.க. அறிவித்துள்ளது. இதன் மூலமாக இரண்டாவது முறையாக யோகி ஆதித்யநாத் அம்மாநில முதலமைச்சராகிறார்.

# பேரறிவாளன் சுதந்திர மனிதராக நடமாட வேண்டும் எனும் கனவு பலித்தது

பேரறிவாளன் சுதந்திர மனிதராக நடமாட வேண்டும் எனும் நீண்டநாள் கனவு பலித்தது - என அற்புதம்மாள் தெரிவித்தார்.



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்துவரும் பேரறிவாளன் தரப்பில் விடுதலை செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுதாரரான பேரறிவாளன் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்நிலையில்,பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது.

உடல் ஆரோக்கியம் கருதி அவ்வப்போது பரோல் நீடித்து வழங்கிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பிணை கிடைக்க 32 ஆண்டுகால போராட்டமாகும். சிறையில் பேரறிவாளனின் நன்னடத்தை, கல்வி, உடல்நிலை இவைக் கருத்திற்கொண்டு உச்சநீதிமன்ற நீதிபதிகள் இடைக்கால நிவாரணமாகப் பிணை வழங்கியுள்ளனர். மேலும், எனது மகன் பூரண சுதந்திர மனிதராக நடமாட வேண்டும் எனக் காத்திருந்தேன். எனது கனவு பலித்தது. மகிழ்ச்சியாக உள்ளது.

இதற்கு ஒத்துழைப்பளித்த அனைத்து தரப்பினருக்கும், குறிப்பாக எனது வேதனையை வெளிப்படுத்திய ஊடகங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் விடுதலை கிடைக்கும் என நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்'' - என்றார்.

LK Newspapers Viber Community

# சர்வதேச கிரிக்கெட் ஓய்வுக்கு அத்திவாரமிட்டாரா ஷகிப் ?

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னணி சகலதுறை வீரர்களில் ஒருவரான ஷகிப் அல்-ஹசன் அனைத்து வகையான சர்வதேச போட்டிகளிலிருந்து எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிவரை விளையாடாமல் ஓய்வில் இருப்பதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. அதன் காரணமாக நாளைமுதல் ஏப்ரல் 8ஆம் திகதிவரை தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்தில் அவர் விளையாடமாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஷகிப் 'உடல் மற்றும் மன நிலை' காரணமாக ஓர் இடைவெளி எடுப்பதாகக் கூறினார். அண்மையில் ஆப்கானிஸ்தான் அணி பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு ரி20 போட்டிகளில் விளையாடியது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் ஷகிப் 74 ஓட்டங்களையும், 7 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். சில வாரங்களுக்கு முன் நடந்த ஐ.பி.எல். 2022 மெகா ஏலத்திலும் முன்னணி வீரரான ஷகிப் அல்-ஹசனை எந்த அணியும் ஏலத்தில் எடுக்கவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில் ஷகிப் அல்-ஹசன் அனைத்து வகையான சர்வதேச போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.




# கிரிக்கெட் அரங்கிற்கு விடைகொடுத்தார் ஸ்ரீசாந்த்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான ஸ்ரீசாந்த், தொடர்ந்து உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடிவந்த நிலையில் நேற்று முன்தினம் தனது 39ஆவது வயதில் ஓய்வை அறிவித்தார்.

ஸ்ரீசாந்த் 2006ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார். எம்.எஸ்.டோனியின் தலைமையில் 2007ஆம் ஆண்டுமுதல் இருபதுக்கு 20 உலகக்கிண்ணம் வென்ற இந்திய அணியிலும், 2011ஆம் ஆண்டு ஒருநாள் உலகக்கிண்ணம் வென்ற இந்திய அணியிலும் ஸ்ரீசாந்த் இடம்பெற்றிருந்தார்.

சூதாட்ட குற்றச்சாட்டுகளால் அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் மிகப்பெரிய தடை ஏற்பட்டது. அதிலிருந்து மீண்டு முதல் தர கிரிக்கெட்டுக்கு திரும்பிய ஸ்ரீசாந்த், அனைத்து வகையான போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். "மிகுந்த வருத்தத்துடன் கனத்த இதயத்துடன் இதைச் சொல்கிறேன். கிரிக்கெட்டிலிருந்து நான் ஓய்வு பெறுகிறேன். அடுத்த தலைமுறை வீரர்களுக்காக, எனது முதல்தர கிரிக்கெட் வாழ்க்கையை முடித்துக்கொள்ள முடிவு செய்தேன். இந்த முடிவு எனக்கு மகிழ்ச்சியைத் தராது என்றாலும், இந்த நேரத்தில் இந்த முடிவை எடுப்பது சரியான மற்றும் மரியாதைக்குரிய செயலாகும். கிரிக்கெட்டின் ஒவ்வொரு தருணத்தையும் நான் நேசித்தேன்' என ஸ்ரீசாந்த் தனது ஓய்வு தொடர்பில் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ரஞ்சி கிண்ணத் தொடரில் ஸ்ரீசாந்த் விளையாடினார். மேகாலயாவுக்கு எதிராக கடந்த மாதம் நடந்த போட்டியில் கேரள அணிக்காக விளையாடிய அவர், அந்த போட்டியில் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். அதுவே அவருக்கு கடைசி போட்டியாக அமைந்தது.




## இந்தியா – பாக். – ஆஸி. அணிகளுக்கிடையில்
# முத்தரப்பு கிரிக்கெட் தொடர்

இந்தியா - பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகளும் மோதும் முத்தரப்பு கிரிக்கெட் தொடரை அவுஸ்திரேலியாவில் நடத்த ஆஸி. கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ளது.

அரசியல் பதற்றம் காரணமாக தசாப்த காலமாக இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து இருதரப்பு கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதில்லை. ஐ.சி.சி, ஆசியக்கிண்ணப் போட்டிகளில் மட்டுமே இரு நாடுகளும் மோதுகின்றன. இந்த நிலையை மாற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ரமீஸ் ராஜா முயற்சி எடுத்து வருகிறார். இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து என நான்கு நாடுகளும் பங்கேற்கும் இருபதுக்கு 20 தொடரை நடத்த ரமீஸ் ராஜா திட்டமிட்டு, இதுபற்றி ஐ.சி.சி. கூட்டத்தில் விவாதிக்கவுள்ளதாக கடந்த ஜனவரி மாதம் தெரிவித்தார்.

இந்தத் தொடரை ஒவ்வொரு வருடமும் நடத்துவதன் மூலம் இந்தியாவும், பாகிஸ்தானும் சர்வதேச ஆட்டங்களில் அடிக்கடி மோதும் நிலைமை உருவாகும். இதன் வழியாக அதிக வருமானமும் கிடைக்கும் என்பதால் இதற்கான ஏற்பாடுகளை ரமீஸ் ராஜா செய்து வருகிறார்.






இந்நிலையில், இந்தியா - பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகளும் மோதும் முத்தரப்புப் தொடரை ஆஸி.யில் நடத்த ஆஸி. கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானில் வைத்து ஆஸி. கிரிக்கெட் தலைமைச் செயல் அதிகாரி ஹாக்லி தெரிவித்ததாவது,

"முத்தரப்புப் தொடர் எனக்கு மிகவும் பிடிக்கும். கடந்த காலத்தில் நன்கு நடைபெற்றன. இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முத்தரப்புத் தொடரை நடத்த ஆர்வமாகவே உள்ளோம். ஆஸி.யில் ஏராளமான இந்தியர்களும், பாகிஸ்தானியர்களும் வசிக்கிறார்கள். இந்தியாவும், பாகிஸ்தானும் மோதும் போட்டியைக் காண அனைவரும் ஆவலாக உள்ளார்கள். இதை நாங்கள் நடத்தத் தயாராக உள்ளோம். எதிர்வரும் ஒக்டோபர் 23 அன்று மெல்போர்ன் மைதானத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும் மோதும் ஆட்டத்துக்கான (ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணம்) அனைத்து டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன" என தெரிவித்தார்.

**விளையாட்டு செய்திகள்**

thamilansports@gmail.com




# இந்தியாவுக்கு பதிலடி கொடுக்குமா இலங்கை?

சுற்றுலா இலங்கை அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்ற நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை பகலிரவு போட்டியாக பெங்களூரில் ஆரம்பமாகிறது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி முதல் தொடரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை 3-0 என்ற அடிப்படையில் இழந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான அடுத்த தொடரான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த 4ஆம் திகதி மொஹாலியில் ஆரம்பமானது. இந்தப் போட்டியில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பல் காரணமாக இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இந்நிலையிலேயே இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி பகலிரவு போட்டியாக நாளை பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது. இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, தாங்கள் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் தோல்வியை தழுவிய நிலையில் நாளை நடைபெறுகின்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு பதிலடி கொடுக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

## பீஜிங் பராலிம்பிக் :
# தொடர்ந்து முதலிடத்தில் சீனா ஆதிக்கம்

பீஜிங் பராலிம்பிக் போட்டிகள் கடந்த 4ஆம் திகதிமுதல் நடைபெற்றுவரும் நிலையில் பதக்கப்பட்டியலில் சீனா தொடர்ந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. போட்டிகள் ஆரம்பமான ஒருசில நாட்கள் உக்ரைன் முதலிடத்தில் காணப்பட்ட நிலையில் அதன்பின்னர் சீனா தொடர்ந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது.



13ஆவது பீஜிங் பராலிம்பிக் நாளை மறுதினத்துடன் நிறைவுக்குவரும் நிலையில், நேற்று நண்பகல் வரையில் 10 தங்கப் பதக்கங்கள், 9 வெள்ளிப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 32 பதக்கங்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது. 7 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 7 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 16 பதக்கங்களுடன் கனடா இரண்டாமிடத்திலும், 6 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கங்கள், 5 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 19 பதக்கங்களுடன் உக்ரைன் மூன்றாமிடத்திலும் காணப்படுகிறது.

4 தங்கப் பதக்கங்கள், 1 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தமாக 7 பதக்கங்களுடன் பிரான்ஸ் நான்காமிடத்திலும், ஆஸ்திரியா, நோர்வே, ஜப்பான், ஸ்லோவோக்கியா, அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகள் முறையே முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளன.



## மெல்போர்ன் சென்றடைந்த வோர்னின் உடல் :
# 30ஆம் திகதி அரச மரியாதையுடன் பிரியாவிடை

சுழற்பந்துவீச்சு ஜாம்பவான் ஷேன் வோர்னின் உடல் தாய்லாந்திலிருந்து நேற்று அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரை சென்றடைந்த நிலையில் எதிர்வரும் 30ஆம் திகதி இறுதிச்சடங்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் மாயாஜால சுழற்பந்துவீச்சாளரான ஷேன் வோர்ன் விடுமுறையை கழிக்க தாய்லாந்து சென்றிருந்தபோது கடந்த வெள்ளிக்கிழமை மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். அவரது திடீர் மரணம் உலகம் முழுவதும் கிரிக்கெட் ரசிகர்களை பேரதிர்ச்சியில் ஆழ்த்தியது. உடல் பருமனைக் குறைக்க கடுமையான உணவு கட்டுப்பாடுகளை கடைப்பிடித்த அவர், கடந்த 2 வாரமாக திரவ உணவு வகைகளை மட்டுமே எடுத்துக்கொண்டதாகவும், தொடர்ந்து புகைப்பிடித்ததும், மாரடைப்புக்கு காரணமாக இருக்கலாம் என வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரேத பரிசோதனை அறிக்கையில், அவரது இறப்பு இயற்கையானது, சந்தேகப்படும்படி எதுவும் இல்லை என்று குறிப்பிடப்பட்டது. இந்நிலையில், வோர்னின் உடல் தாய்லாந்திலிருந்து தனி விமானத்தில் நேற்று மெல்போர்ன் கொண்டுசெல்லப்பட்டது. அடுத்த வாரம் அவரது குடும்பத்தினர் தனிப்பட்ட இறுதிச்சடங்குகளை செய்யவுள்ளனர்.

அதைத் தொடர்ந்து எதிர்வரும் 30ஆம் திகதி புகழ்பெற்ற மெல்போர்ன் மைதானத்தில் அவருக்கு அரச மரியாதையுடன் பிரியாவிடை அளிக்க விக்டோரியா மாகாண அரசு ஏற்பாடு செய்துள்ளது.

ஜாம்பவான் வோர்னுக்கு அஞ்சலி செலுத்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



# கொரோனா தடுப்பூசி செலுத்தாததால் இரு தொடர்களை இழக்கும் ஜோகோவிச்

டென்னிஸ் உலகின் நட்சத்திர வீரரான சேர்பிய நாட்டைச் சேர்ந்த நோவக் ஜோகோவிச், கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காரணத்தினால் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாஸ்டர்ஸ் தொடர்களான இண்டியன் வெல்ஸ் மற்றும் மியாமி பகிரங்க டென்னிஸ் ஆகிய தொடர்களிலிருந்து விலகிக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் அமுலில் உள்ள கடுமையான கொரோனா தொற்று சுகாதார விதிகள் காரணமாக அவர் இந்த இரண்டு தொடர்களையும் தவிர்க்க தீர்மானித்துள்ளார். அமெரிக்கப் பிரஜைகள் அல்லாத எவரும் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் கொரோனா தடுப்பூசி ஏற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்பது அந்நாட்டிலுள்ள கடுமையான சுகாதார விதிகளில் ஒன்றாகும்.

இண்டியன் வெல்ஸ் டென்னிஸ் தொடரிலிருந்து ஜோகோவிச் விலகிக்கொண்டதால் போட்டித்தன்மை சமமாக இருக்காது என தெரிவிக்கப்படுகின்றது. இண்டியன் வெல்ஸ் போட்டியில் அவர் இரண்டாம் நிலை வீரராக நிரல்படுத்தப்பட்டிருந்தார். இதேவேளை, ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள மொன்டே கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் ஜோகோவிச் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

LK Newspapers Viber Community

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7